சகரியா - முன்னுரை

காலமும் இடமும்

கி.மு. 557-525 ஆம் வருஷத்தில் சகரியாவின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

சகரியா தீர்க்கதரிசி. சிறையிருப்புக்குப் பின்பு ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய மூவரும் தீர்க்கதரிசன ஊழியம் செய்து வந்தார்கள். (சக 1:1,7; சக 4:8; சக 6:9; சக7:8).

மையக்கருத்து

1. இஸ்ரவேல் உடனடியாகவும், வருங்காலத்திலும் பாலஸ்தீனத்தில் மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படும்.

2. மேசியாவின்கீழ் இஸ்ரவேல் நித்திய தேசமாக ஸ்தாபிக்கப்படும்.

3. சகரியாவின் புஸ்தகத்தில் மேசியாவைப் பற்றிய செய்தி பிரதானமாகக் கூறப் பட்டிருக்கிறது.

4. தீர்க்கதரிசியின் தரிசனத்திற்கும், அதன் தெளிவான சிந்தனைகளுக்கும் இந்தப் புஸ்தகத்தில் முன்னுரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது.

5. இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் பத்து தரிசனங்களைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. (சக 1:7-6:8)

6. மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்ட யூதாவிற்குத் தீர்க்கதரி சனங்களும், உற்சாகப்படுத்தும் செய்திகளும் கூறப்பட்டிருக்கிறது. (சக 6:9-8:23).

7. சக 9-11 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள்

   (1) எல்லா சத்துருக்களிடமிருந்தும் யூதா மீட்கப்படும்.

   (2) மேசியாவின் முதலாம் வருகையும், இரண்டாம் வருகையும்

   (3) அந்திக்கிறிஸ்துவின் கீழ் கிரேக்கப் பேரரசு

   (4) பூமிக்குரிய மழையும், ஆவிக்குரிய மழையும்.

   (5) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் அர்மெகதோன் யுத்தம்.

   (6) கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது அவர் மறுதலிக்கப்படுவது.

   (7) கடைசி நாட்களில் இஸ்ரவேல் சிதறிப் போவதும், அவர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவதும்.

8. சக 12-14 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள்

   (1) அந்திக்கிறிஸ்து எருசலேமை முற்றிக்கையிடுவது.

   (2) மேசியாவின் இரண்டாம் வருகை

   (3) அர்மெகதோன் யுத்தத்தில் யூதாவின் பங்கு

   (4) இஸ்ரவேல் மனந் திருந்துவதும், அதன் மனமாற்றமும்.

   (5) எல்லா தேசங்களின்மீதும் மேசியாவின் ஆயிரம் வருஷ அரசாட்சியும், நித்திய அரசாட்சியும்.

சகரியா புஸ்தகம் எழுதப்பட்டதற்கான நோக்கம் வருமாறு:

1. பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு யூதா தேசம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும்போது அதை உற்சாகப்படுத்துவது.

சகரியா - முன்னுரை

2. தங்களுடைய முற்பிதாக்களோடு கர்த்தர் செய்துகொண்ட உடன்படிக்கை வருங்காலத்தில் நிறைவேறும் என்றும், கர்த்தர் அவர்களைத் தற்காலத்திலும், வருங்காலத்திலும் ஆசீர்வதிப்பார் என்றும் உறுதி கூறுவது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 14

வசனங்கள் - 211

கேள்விகள் - 27

புதிய தீர்க்கதரிசனங்கள் - 17

கட்டளைகள் - 35

வாக்குத்தத்தங்கள் - 4

முன்னறிவிப்புக்கள் - 226

சகரியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (சக1:1,3,4,7,9,12,13,14,16,17,19,21;சக2:2,4,5,8; சக 3:2,4,7,8; சக 4:2,5,6,8,12; சக 5:2,3,4,5,6,8,11; சக 6:5,7,8,9,12; சக7:1,4,8; சக 8:1,3,4,6,7,9,11,14,17,18,20,23; சக 9:1; சக 11:4,13,15; சக 12:1,4; சக 13:8)

பொருளடக்கம்

I. மீட்கப்பட்ட யூதாவிற்கு செய்தி

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி (1:1)

2. தேவனிடத்தில் திரும்புமாறு புத்திமதி (1:2-6)

II. பத்து தரிசனங்கள்

1. முதலாவது தரிசனம்

   (1) குதிரைகள் (1:7-8)

   (2) தேவனுடைய தூதர்கள் (1:9-11)

   (3)யூதாவின் விரோதிகள்மீது நியாயத்தீர்ப்பு (1:12-15)

   (4)யூதா இன்னும் மீட்கப்படவேண்டும் (1:16-17)

2. இரண்டாவது தரிசனம் - நான்கு கொம்புகள் (1:18-19)

3. மூன்றாவது தரிசனம் - நான்கு தொழிலாளிகள் (1:20-21)

4. நான்காவது தரிசனம்

   (1) அளவு நூலைப் பிடித்திருக்கும் மனுஷன் (2:1-3)

   (2) மேசியாவின்கீழ் எருசலேம் (2:4-5)

   (3) இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறது (2:6-9)

   (4) மேசியா சீயோனில் ஆளுகை செய்கிறார் (2:10)

   (5) எல்லா தேசங்களின் மனந்திரும்புதல் (2:11-12)

5. ஐந்தாவது தரிசனம்

   (1) பிரதான ஆசாரியனாகிய யோசுவாவும் சாத்தானும் (3:1-2)

   (2) ஆசாரியத்துவம் புதுப்பிக்கப் படுகிறது (3:3-5)

   (3) யோசுவாவிற்குக் கட்டளை (3:6-7)

6. ஆறாவது தரிசனம்

   (1) தேவனுடைய தாசன் - கிளை (3:8)

   (2) அவருடைய அபிஷேகம் (3:9)

   (3) உலகத்தின் செழுமை (3:10)

7. ஏழாவது தரிசனம்

சகரியா - முன்னுரை

(1) பொன் குத்துவிளக்கும் இரண்டு ஒலிவ மரங்களும் (4:1-4)

(2) ஆவியினாலும் வல்லமை யினாலும் செருபாபேல் அபிஷேகம் பண்ணப் படுகிறான் (4:5-7)

(3) தேவாலயம் செப்பனிடும் வேலையைச் செருபாபேல் நிறைவு செய்ய வேண்டும் (4:8-10)

(4) ஒலிவ மரங்களின் விளக்கம் (4:11-14)

8. எட்டாவது தரிசனம்

(1) பறக்கிற புஸ்தகச்சுருள் (5:1-2)

(2) இது சாபம் (5:3-4)

9. ஒன்பதாவது தரிசனம்

(1) மரக்கால் (5:5-7)

(2) இது அக்கிரமம் (5:8)

(3) சிநேயாருக்கு மரக்கால் எடுத்துச் செல்லப்பட்டது - பாபிலோன் திரும்ப கட்டப்படும் (5:9-11)

10. பத்தாவது தரிசனம்

(1) நான்கு இரதங்களும் குதிரைகளும் (6:1-3)

(2) வானத்தினுடைய ஆவிகள் - வடதேசத்தில் தேவனுடைய நியாயத் தீர்ப்பை சாந்திபண்ணிற்று (6:4-8)

III. தீர்க்கதரிசனங்கள் - மீட்கப்பட்ட யூதாவை உற்சாகப்படுத்துவதற்கு செய்திகள்

1. அடையாளம்

(1) யோசுவாவின் தலையில் கிரீடம் வைக்கப்பட்டது (6:9-11)

(2) மேசியா ஆயிர வருஷ ஆலயத்தைக் கட்டுவார் - அதில் ஆசாரியராகவும் இராஜாவாகவும் இருப்பார் - யோசுவாவும் தேவாலயம் செப்பனிடப் படுவதும் இதற்கு அடையாளம் (6:12-13)

(3) தேவன் யூதாவிற்கு உண்மையுள்ள வராக இருந்ததற்கு கிரீடங்கள் நினைப்பூட்டுதலாக வைக்கப்பட்டுள்ளன (6:14)

(4) சிறையிலிருந்த வர்கள் அநேகர் வந்து செருபாபேலுக்கு கட்டுவதில் உதவி புரிவார்கள் (6:15)

2. உபவாசங்களைப் பற்றி விசாரிப்பு (7:1-3)

3. தேவனுடைய பதில்

(1) அவர்களுடைய உபவாசம் பெயரளவில் இருந்தது - அவர்கள் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்க வேண்டும் (7:4-7)

(2) அவர்களுடைய ஜெபங்கள் ஏன் கேட்கப்படவில்லை? - அவர்களுக்கு ஏன் நியாயத்தீர்ப்பு வந்தது (7:8-14)

(3) தேவனுடைய நோக்கம் இன்னும் மாறவில்லை - இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்படும் (8:1-8)

(4) மீட்கப்பட்ட யூதாவிற்கு நிபந்தனையுள்ள ஆசீர்வாதங்கள் (8:9-17)

(5) பதிலுரை (8:18-19)

(6) முழு உலகத்திற்கும் எருசலேம் ஆவிக்குரிய மையமாக இருக்கும் (8:20-22)

(7) யூதர்கள் தேசங்களுக்கு இன்னும் நற்செய்தி அறிவிக்க வேண்டும் (8:23)

IV. இஸ்ரவேலுக்காக முதலாவது பாரம்

1. விரோதிகளிடமிருந்து மீட்பு (9:1-8)

2. மேசியாவின் முதலாவது வருகை (9:9)

3. மேசியாவின் இரண்டாவது வருகை (9:10-11)

4. அர்மகெதோனில் அந்திக் கிறிஸ்துவிற்கு எதிராகவும் புதிய கிரேக்க சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராகவும் தேவன் யூதாவின் பாதுகாப்பாக இருக்கிறார் (9:12-17)

5. உலகப்பிரகார மழையும் ஆவிக்குரிய மழையும் (10:1-2)

6. அர்மகெதோனில் யுத்தம் பண்ணுவதற்கு யூதா பெலப்படுத்தப் பட்டது (10:3-5)

7. யூதாவும் யோசேப்பும் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள் (10:6-8)

8. இஸ்ரவேலர்கள் சிதறிப்போனதும் கூட்டிச் சேர்க்கப்பட்டதும் (10:9-12)

9. மேசியாவின் முதலாவது வருகையும் அவர் புறக்கணிக்கப்பட்டதும் - விளைவு

(1) கோபம் (11:1-6)

(2) கோபத்தின் காரணம்

(அ) அநுக்கிரகம், கோல்கள் (11:7-9)

(ஆ) அநுக்கிரகம் என்னும் கோல் முறித்துப் போடப்பட்டது - மேசியாவின் இரண்டாம் வருகை வரையிலும் இஸ்ரவேலின் மீது இரக்கமில்லை (11:10-11)

(இ) மேசியா மந்தையால் விற்கப்பட்டார் (11:12-13)

(ஈ) அப்பொழுது - கோல்கள் முறித்துப் போடப்பட்டன - இஸ்ரவேல் மறுபடியும் சிதறிப்போயிற்று (11:14)

10. அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலிடம் வந்து நல்ல மேய்ப்பனை எவ்வாறு போற்ற வேண்டுமென்று அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பான் (11:15-17)

V. இஸ்ரவேலுக்காக இரண்டாவது பாரம்

1. அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலை முற்றுகையிட்டான் (12:1-3)

2. மேசியாவின் இரண்டாவது வருகை - அர்மகெதோனில் யூதாவின் பங்கு (12:4-9)

3. இஸ்ரவேலின் மனமாற்றம்

(1) ஆவியானவர் ஊற்றப் படுகிறார் - சிலுவையில் அறையப்பட்ட மேசியா வெளிப்படுத்தப்படுகிறார் (12:10)

(2) இஸ்ரவேலின் மனந் திரும்புதல் (12:11-14)

(3) இஸ்ரவேல் சிலுவையை ஏற்றுக் கொள்கிறது (13:1)

(4) விக்கிரகாராதனையும் அசுத்த ஆவிகளும் அழிக்கப்பட்டன (13:2)

(5) கள்ளத் தீர்க்கதரிசிகள் கொலையுண்டு போனார்கள் (13:3-5)

(6) சிலுவையில் அறையப்பட்ட மேசியா வெளிப்படுத்தப்பட்டார் (13:6)

(7) இஸ்ரவேலின் மீட்பு எவ்வாறு கிரயத்திற்குக் கொள்ளப்பட்டது (13:7)

4. உபத்திரவத்தின் நோக்கம் - யூதாவிலிருந்து கலகக்காரர்கள் அகற்றப்படுவார்கள் (13:8-9)

5. கர்த்தருடைய நாள்

(1) அர்மகெதோனில் துவங்குகிறது (14:1-3)

(2) மேசியாவின் இரண்டாவது வருகை - பாலஸ்தீனத்தில் ஏற்படும் மாற்றங்கள் (14:4-7)

சகரியா - முன்னுரை

(3) எருசேலமின் ஜீவ தண்ணீருள்ள நதி (14:8)

(4) மேசியாவினுடைய ஆளுகையின் விஸ்தீரணம் (14:9)

(5) பாலஸ்தீனத்தில் ஏற்படும் மாற்றங்கள் (14:10)

(6) எருசலேம் மீட்கப்படும் (14:11)

(7) அர்மகெதோனில்சேனைகள் எவ்வாறு அழிக்கப் படும் (14:12-13)

(8) அர்ம கெதோனில் கொள்ளைப் பொருளும் யூதாவின் பங்கும் (14:14)

(9) மிருகங்கள்மீது வாதை (14:15)

(10) கூடாரப் பண்டிகை கொண்டாடப் படுகிறது (14:16)

(11) ஆயிர வருஷ ஆட்சியில் கீழ்ப்படியாத தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பு (14:17-19)

(12) இராஜ்ஜியத்தின் சுபாவம் (14:20-21)

1 அதிகாரம்

I. மீட்கப்பட்ட யூதாவிற்கு செய்தி

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி - (எஸ்றா 6:1,12,15)

சக 1:1 தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் எட்டாம் மாதத்திலே இத்தோவின் மகனான பெரகியாவின் குமாரனாகிய சகரியாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை:

"சகரியா" (Zechariah) - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் நினைவுகூருகிறார்" "Jehovah remembers" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "சகரியா"க்கள்

1. தீர்க்கதரிசி (சக 1:1,7; சக 7:1,8; எஸ்றா 5:1; எஸ்றா 6:14; நெகே 12:16)
2. ரூபன் கோத்திரத்தான் (1நாளா 5:7)
3. லேவி கோத்திரத்து வாசல் காவல்காரன் (1நாளா 9:21; 1நாளா 26:2,14)
4. சவுலின் உறவினன் (1நாளா 9:37)
5. லேவி கோத்திரத்தில் இசை வாசிக்கிறவன் (1நாளா 15:18,20; 1நாளா 16:5)
6. ஆசாரியன் (1நாளா 15:24)
7. கோகாத்தியன் (1நாளா 24:25)
8. வாசல்காவல்காரன் (1நாளா 26:11)
9. மனாசேகோத்திரத்தான்(1நாளா 27:21)
10. யூதாவின் பிரபு (2நாளா 17:7)
11. யகாசியேலின் தகப்பன்(2நாளா 20:14)
12. யோசபாத்தின் குமாரன் (2நாளா 21:2)
13. யோய்தாவின் குமாரன் - மற்றொரு தீர்க்கதரிசி (2நாளா 24:20-21)
14. தரிசனங்களைக் காண்கிறவன் (2நாளா 26:5)
15. ஆசாபின் குமாரன் (2நாளா 29:13)
16. மற்றொரு கோகாத்தியன் (2நாளா 34:12)
17. மற்றொரு பிரபு (2நாளா 35:8)
18. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (எஸ்றா 8:3)
19. பேபாயின் குமாரன் - சிறையிருப்பில் இருந்தவன் (எஸ்றா 8:11-16)
20. சிறையிருப்பிலிருந்து திரும்பிய மற்றொருவன் (எஸ்றா 10:26)
21. யூதாவின் மற்றொரு பிரபு (எஸ்றா 8:4)
22. அமரியாவின் குமாரன் (நெகே 11:4)
23. சீலோனியன் (நெகே 11:5)
24. பஸ்கூரின் குமாரன் (நெகே 11:12)
25. ஆசாரியன் (நெகே 12:16)
26. ஆசாபியன் (நெகே 12:35,41)
27. ஏசாயாவின் சிநேகிதன் (2நாளா 26:5; ஏசா 8:2)

"தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் எட்டாம் மாதத்திலே" - இந்தக் காலம் ஆகாய் தீர்க்கதரிசனம் உரைத்து இரண்டு மாதங்களுக்குப் பின்பு வருகிறது. (சக 1:1=ஆகாய் 1:1) எருசலேமில் தேவாலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின்பு. (சக. 1:1= ஆகாய் 2:18).

"பெரகியா" (Berechiah) - இந்தப் பெயருக்குக் "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன்" "blessed of Jehovah" என்று பொருள்.

1 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "பெரகியா"க்கள்

1. சகரியாவின் தகப்பன் (சக 1:1,7) மறுபெயர் பரகியா (Barachias) (மத் 23:35)
2. ஆசாபின் தகப்பன் (1நாளா 6:39; 1நாளா 15:17)
3. செருபாபேலின் குமாரன் (1நாளா 3:20)
4. ஆசாவின் குமாரன் (1நாளா 9:16)
5. லேவி கோத்திரத்தில் வாசல்காக்கிறவன் (1நாளா 15:23)
6. எப்பிராயீம் கோத்திரத்தான் (2நாளா 28:12)
7. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (நெகே 3:4,30; நெகே 6:18)

"இத்தோ" (Iddo) - இந்தப் பெயருக்கு "நேசமானவன்" "affectionate" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "இத்தோ"க்கள்

1. சகரியாவின் தாத்தா (சக 1:1; எஸ்றா 5:1; எஸ்றா 6:14)
2. அகினதாபின் தகப்பன்(1இராஜா 4:14)
3. கெர்சோனியன் (1நாளா 6:21)
4. மனாசேயில் ஒரு தலைவன் (1நாளா 27:21)
5. சொப்பனக்காரன் (2நாளா 9:29; 2நாளா 12:15; 2நாளா 13:22)
6. ஆசாரியன் (நெகே 12:4,16)
7. நெதனீமியன் - ஆலயத்து பணிவிடைக்காரன் (எஸ்றா 8:17)
8. சிறையிருப்பில் இருக்கிறவன் (எஸ்றா 10:43)

2. தேவனிடத்தில் திரும்புமாறு புத்திமதி

சக 1:2 கர்த்தர் உங்கள் பிதாக்களின்மேல் கடுங் கோபமாயிருந்தார்.

சக 1:3 ஆகையால் நீ அவர்களை நோக்கி: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: என்னிடத்தில் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது நான் உங்களிடத்துக்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 1:4 உங்கள் பிதாக்களைப்போலிராதேயுங்கள்; முந்தின தீர்க்கதரிசிகள் அவர்களை நோக்கி: உங்கள் பொல்லாத வழிகளையும் உங்கள் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள்; ஆனாலும் எனக்குச் செவிகொடாமலும் என்னைக் கவனியாமலும் போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சக 1:5 உங்கள் பிதாக்கள் எங்கே? தீர்க்கதரிசிகள் என்றென்றைக்கும் உயிரோடிருப்பார்களோ?

சக 1:6 இராமற்போனாலும், தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரருக்கு நான் கட்டளையிட்ட என் வார்த்தைகளும் என் தீர்மானங்களும் உங்கள் பிதாக்களிடத்தில் பலிக்கவில்லையோ? எங்கள் வழிகளின்படியேயும், எங்கள் கிரியைகளின்படியேயும் சேனைகளின் கர்த்தர் எங்களுக்குச் செய்ய நிர்ணயித்தபடியே எங்களுக்குச் செய்தாரென்று அவர்கள் திரும்பவந்து சொன்னதில்லையோ என்று சொல் என்றார்.

சகரியா - தொகுப்புரை

1 அதிகாரம்

சகரியா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. என்னிடத்தில் திரும்புங்கள் (சக 1:3).
2. உங்கள் பிதாக்களைப்போலி ராதேயுங்கள் (சக 1:4).
3. பின்னும் கூறு (சக 1:17).
4. நீ ஓடி இந்த வாலிபனிடத்தில் சொல் (சக 2:4).
5. சீயோனே, உன்னை விடுவித்துக்கொள். (சக 2:7).
6. சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு (சக 2:10).
7. மாம்சமான சகலமான பேர்களே, கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருங்கள். (சக 2:13).
8. இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள் (சக 3:4).
9. அவன் சிரசின்மேல் சுத்தமான பாகையை வைப்பார்களாக (சக 3:5).
10. இப்போதும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள் (சக 3:8).
11. நீ உன் கண்களை ஏறெடுத்து, புறப்பட்டு வருகிறதை என்னவென்று பார் (சக 5:5).
12. போய் பூமியில் சுற்றித்திரியுங்கள் (சக 6:7).
13. சிறையிருப்பின் மனுஷராகிய எல்தாயும், தொபியாவும், யெதாயாவும் பாபிலோனிலிருந்து வந்திருக்கும் அந்நாளிலே நீ போய், செப்பனியாவின் குமாரனாகிய யோசியாவின் வீட்டுக்குள் பிரவேசி. (சக 6:10).
14. அங்கே அவர்கள் கையிலே வெள்ளியையும் பொன்னையும் வாங்கி, கிரீடங்களைச் செய்வித்து, யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய சிரசிலே வை. (சக 6:11).
15. அவனோடே சொல் (சக 6:12).
16. நீ தேசத்தின் எல்லா ஜனத்தோடும் ஆசாரியர்களோடும் சொல் (சக 7:5).
17. நீங்கள் உண்மையாய் நியாயந்தீருங்கள். (சக 7:9).
18. அவனவன் தன்தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும்செய்வானாக.
19. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் பரதேசியையும் சிறுமையானவனையும் ஒடுக்காதே. (சக 7:10).
20. உங்களில் ஒருவனும் தன் சகோதரனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமல் இருங்கள்.
21. தீர்க்கதரிசிகளின் வாயினால் இந்த வார்த்தைகளை இந்நாட்களில் கேட்டு வருகிறவர்களே, உங்கள் கைகள் திடப்படக்கடவது (சக 8:9).
22. அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள் (சக 8:16).
23. உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந் தீருங்கள்.
24. ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாதிருங்கள். (சக 8:17).
25. பொய்யாணையின்மேல் பிரியப்படாமல் இருங்கள்.
26. சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; (சக 9:9).
27. எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி.
28. நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள் (சக 9:12).

1 அதிகாரம்

29. பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள் (சக 10:1).

30. லீபனோனே, உன் வாசல்களைத் திற. (சக 11:1).

31. தேவதாரு விருட்சங்களே, புலம்புங்கள் (சக 11:2).

32. கொலையுண்கிற ஆடுகளை மேய்க்கக் கடவாய். (சக 11:4).

33. அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு (சக 11:13)

34. நீ மதியற்ற ஒரு மேய்ப்பனுடைய ஆயுதங்களை இன்னும் எடுத்துக்கொள். (சக 11:15).

35. என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு (சக 13:7).

II. பத்து தரிசனங்கள் - (1:7-6:8)

1. முதலாவது தரிசனம்

(1) குதிரைகள் - (6:1-8; 2இராஜா 6:17; வெளி 19:14)

சக 1:7 தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம், சேபாத் மாதமாகிய பதினோராம் மாதம் இருபத்து நாலாந்தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை இத்தோவின் மகனான பெரகியாவின் குமாரன் சகரியா என்னும் தீர்க்கதரிசிக்கு உண்டாயிற்று; அவன் சொன்னது:

சக 1:8 இதோ, இன்று ராத்திரி சிவப்புக் குதிரையின்மேல் ஏறியிருந்த ஒரு புருஷனைக் கண்டேன்; அவர் பள்ளத்தாக்கில் இருக்கிற மிருதுச் செடிகளுக்குள்ளே நின்றார்; அவருக்குப் பின்னாலே சிவப்பும் மங்கின நிறமும் வெண்மையுமான குதிரைகள் இருந்தன.

"தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம்" - இது சகரியாவின் இரண்டாம் செய்தியாகும். சக 1:1-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முதலாவது செய்திக்கு 3 மாதங்களுக்குப் பின்பு சகரியா தன்னுடைய இரண்டாவது செய்தியைக் கூறுகிறார்.

"சிவப்புக் குதிரையின்மேல் ஏறியிருந்த ஒரு புருஷன்" - சிவப்பும் மங்கின நிறமும் வெண்மையுமான குதிரைகளின்மீது ஏறியிருக்கிறவர்கள் தேவனுடைய பிரத்தியட்சமில்லாத கருவிகள். தம்முடைய ஊழியங்களை நிறைவேற்றுவதற்குக் கர்த்தர் இவர்களைப் பூமிக்கு அனுப்பியிருக்கிறார். இவர்கள் பூமியிலுள்ள நிலவரங்களைக் கர்த்தருக்கு அறிவிப்பார்கள். பூமி முழுவதும் அமைதலும், அமரிக்கையுமாய் இருக்கிறது என்று இவர்கள் கர்த்தரிடத்தில் அறிக்கை செய்கிறார்கள். (சக 1:8-11). இவர்கள் ஏறி வந்த குதிரைகள் எதற்கும் அடையாளமானவை அல்ல. இவை மெய்யாகவே குதிரைகள்தான். பரலோகத்தில் ஜீவிக்குமாறு இந்தக் குதிரைகள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. வானத்திற்கும், பூமிக்கும் இடையில் பிரயாணம் பண்ணுவதற்கு இந்தக் குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் குதிரைகளைப் பற்றிய செய்தி மேலும் பல வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. (சக 1:8-11; சக 6:1-8; சக 2:11; 2இராஜா 6:14-17; வெளி 19:11-21)

மங்கின நிறம் (speckled) שָׂרֹק - saw-rook' - 8320

பெயரடை - மங்கின நிறம் (bright red) "bay" (சக 6:1-8).

சகரியாவின் பத்து தரிசனங்கள்

1. குதிரைகளும், குதிரைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களும் - தேவனுடைய பிரத்தியட்சமில்லாத தூதர்கள். (சக 1:7-17)

2. நான்கு கொம்புகள் - புறஜாதி ராஜாக்களும், ராஜ்யங்களும். இவர்கள் யூதாவையும், இஸ்ரவேலையும், எருசலேமையும் புறஜாதி தேசத்தார் மத்தியிலே சிதறிப்போகப் பண்ணினார்கள். (சக 1:18-19)

சகரியா - தொகுப்புரை

1 அதிகாரம்

3. நாலு தொழிலாளிகள் - இவர்கள் யூதாவைச் சிதறிப்போகப் பண்ணின நாலு புறஜாதி ராஜாக்கள் அல்லது ராஜ்யங்கள். (சக 1:20-21)

4. தன் கையிலே அளவுநூல் பிடித்திருந்த ஒரு புருஷன் - மேசியாவின் காலத்தில் யூதா, இஸ்ரவேல், எருசலேம் ஆகியவை மறுபடியும் புதுப்பித்து ஸ்தாபிக்கப்படும். (சக 2:1-13)

5. பிரதான ஆசாரியனாகிய யோசுவாவும், சாத்தானும் - இஸ்ரவேலில் ஆசாரியத்துவம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும். சாத்தான் தோல்வியுறுவான். (சக 3:1-7)

6. யோசுவாவும், அவன் தோழரும், தேவனுடைய ஊழியக்காரரும், கிளையும், கல்லும் வரப்போகிற மேசியாவும், அவருடைய ஆளுகையும். (சக 3:8-10)

7. இரண்டு பொன் குத்துவிளக்குகளும், இரண்டு ஒலிவ மரங்களும் - பரலோகத்தில் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நிற்கும் அபிஷேகம் பெற்ற இருவர் - இரண்டு சாட்சிகள். (சக 4:1-14; வெளி 11:3-11)

8. பறக்கிற புஸ்தகச் சுருள் - துன்மார்க்கருடைய பாவங்களுக்காக அவர்கள்மேல் வரும் நியாயத்தீர்ப்பு. (சக 5:1-4)

9. மரக்காலின் நடுவில் உட்கார்ந்திருக்கும் ஒரு ஸ்திரீ - பாபிலோன் மறுபடியும் கட்டப்படுவதும், புதுப்பிக்கப்படுவதும். (சக 5:5-11)

10. நாலு இரதங்களும், குதிரைகளும் - தேவனுடைய பிரத்தியட்சமில்லாத கருவிகள். (சக 6:1-8)

(2) தேவனுடைய தூதர்கள்

சக 1:9 அப்பொழுது நான்: என் ஆண்டவரே, இவர்கள் யாரென்று கேட்டேன்; என்னோடே பேசுகிற தூதனானவர்: இவர்கள் யாரென்று நான் உனக்குக் காண்பிப்பேன் என்று சொன்னார்.

சக 1:10 அப்பொழுது மிருதுச் செடிகளுக்குள்ளே நின்ற அந்தப் புருஷன் பிரதியுத்தரமாக: இவர்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்க்கக் கர்த்தர் அனுப்பினவர்கள் என்றார்.

சக 1:11 பின்பு அவர்கள் மிருதுச்செடிகளுக்குள்ளே நின்ற கர்த்தருடைய தூதனை நோக்கி: நாங்கள் பூமியெங்கும் சுற்றிப் பார்த்தோம்; இதோ, பூமிமுழுவதும் அமைதலும் அமரிக்கையுமாய் இருக்கிறது என்றார்கள்.

தேவனே இந்தத் தூதனானவர் - சான்றுகள்

1. சகரியா இவரை ஆண்டவரே என்று அழைக்கிறார். (சக 1:9,13,20).
2. இவர் தம்மைத் தேவனாகப் பாவித்து பேசுகிறார். (சக 1:14-17).
3. மற்றவர்கள் இவரிடம் அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள். (சக 1:11).
4. இவர் தம்மைக் கர்த்தரென்று அழைக்கிறார். (சக 2:3,5).
5. இவர் கர்த்தரைப்போல சாத்தானைக் கடிந்து கொண்டார். (சக 3:1-2).
6. இவர் மற்றவர்களுக்குத் தேவனாக இருந்து கட்டளை கொடுக்கிறார். (சக 3:3-8).
7. இவர் தம்மைச் சேனைகளின் கர்த்தரென்று அழைக்கிறார். (சக 3:9; சக 4:6).

சகரியா - தொகுப்புரை

1 அதிகாரம்

"இவர்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்க்கக் கர்த்தர் அனுப்பினவர்கள்" - சிவப்பும் மங்கின நிறமும் வெண்மையுமான குதிரைகளின்மேல் ஏறியிருந்தவர்கள் கர்த்தரால் அனுப்பப் பட்டிருக்கிறவர்கள். இவர்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்ப்பதற்காக அனுப்பப் பட்டிருக்கிறார்கள். பூமியிலுள்ள நிலவரங்களை இவர்கள் கர்த்தரிடம் அறிவிக்க வேண்டும். (சக 1:10-11). கர்த்தர் பல்வேறு உபாயங்கள் மூலமாகச் செய்திகளைச் சேகரிக்கிறார். அந்த உபாயங்களில் இதுவும் ஒன்றாகும். (ஆதி 11:5-8; ஆதி 18:20-22; ஆதி 22:12)

(3) யூதாவின் விரோதிகள்மீது நியாயத் தீர்ப்பு

சக 1:12 அப்பொழுது கர்த்தருடைய தூதன் மறுமொழியாக: சேனைகளின் கர்த்தாவே, இந்த எழுபது வருஷமாய் நீர் கோபங்கொண்டிருக்கிற எருசலேமின் மேலும் யூதா பட்டணங்களின் மேலும் எந்தமட்டும் இரங்காதிருப்பீர் என்று சொல்ல,

சக 1:13 அப்பொழுது கர்த்தர், என்னோடே பேசின தூதனுக்கு நல்வார்த்தைகளையும் ஆறுதலான வார்த்தைகளையும் பிரதியுத்தரமாகச் சொன்னார்.

சக 1:14 அப்பொழுது என்னோடே பேசின தூதன் என்னை நோக்கி: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நான் எருசலேமுக்காகவும் சீயோனுக்காகவும் மகா வைராக்கியம் கொண்டிருக்கிறேன்.

சக 1:15 நான் கொஞ்சங் கோபங் கொண்டிருந்தபோது அவர்கள் தங்கள் கேட்டை அதிகரிக்கத் தேடினபடியினால், சுகமாய் வாழுகிற புறஜாதிகள் பேரில் நான் க ங்கோபங் கொண்டேன்.

"எழுபது வருஷம்" - பாபிலோனிய சிறையிருப்பின் காலம் எழுபது வருஷமாகும். (எரே 25:11-12; தானி 9:2) இக்காலத்தில் தானியேலும், தூதனானவரும் எரே 24 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் முன்னறிவிப்புகள் நிறைவேறுவதில் அதிகக் கரிசனையோடு இருக்கிறார்கள். தேவனுடைய தூதனானவர் திரித்துவத்தில் ஒரு நபர். எழுபது வருஷச் சிறையிருப்பிற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்திற்குத் திரும்பி வரவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். கர்த்தர் தம்முடைய முன்னறிவிப்புகளை மறந்து விடுகிறவர் அல்ல.

"கர்த்தர், என்னோடே பேசின தூதனுக்கு .... பிரதியுத்தரமாகச் சொன்னார்" - தூதன் தீர்க்கதரிசியோடு பேசிக் கொண்டிருக்கிறார். இப்போது கர்த்தர் அந்தத்தூதனிடம் பேசுகிறார். தம்முடைய வார்த்தையைக் கர்த்தர் தூதர் மூலமாகச் சகரியாவிற்கு அறிவிக்கிறார். அந்த வார்த்தை நல்வார்த்தைகளாகவும், ஆறுதலான வார்த்தைகளாகவும் இருக்கிறது. (சக 1:13-19).

"என்னோடே பேசின தூதன்" - தூதர்கள் மனுஷரோடே பேசும் ஆற்றலுடையவர்கள். (எபி 1:14)

தேவனுடைய கோபம்

1. நான் எருசலேமுக்காகவும் சீயோனுக்காகவும் மகா வைராக்கியம் கொண்டிருக்கிறேன். (சக. 1:14).
2. சுகமாய் வாழுகிற புறஜாதிகள் பேரில் நான் கடுங்கோபங்கொண்டேன். (சக 1:15).
3. தம்முடைய ஜனங்களின் நெருக்கத்தைக் குறைப்பதற்குப் புறஜாதியார் முயற்சி பண்ணும்போது நான் அவர்கள்மீது கொஞ்சம் கோபம் கொண்டிருந்தேன்.

(4) யூதா இன்னும் மீட்கப்படவேண்டும்

சக 1:16 ஆகையால் மன உருக்கத்தோடே எருசலேமினிடத்தில் திரும்பினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் ஆலயம் அதிலே கட்டப்படும்; எருசலேமின்மேல் அளவுநூல் பிடிக்கப்படும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூறு என்றார்.

சகரியா - தொகுப்புரை

1 அதிகாரம்

சக 1:17 இன்னும் என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பியிருக்கும்; இன்னும் கர்த்தர் சீயோனைத் தேற்றரவு பண்ணுவார்; இன்னும் எருசலேமைத் தெரிந்துகொள்ளுவார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று பின்னும் கூறு என்றார்.

தீர்க்கதரிசன எண் - 1

"ஆகையால் மன உருக்கத்தோடே எருசலேமினிடத்தில் திரும்பினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;........" (சக 1:16-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. மன உருக்கத்தோடே எருசலேமினிடத்தில் திரும்பினேன். (சக 1:16).
2. என் ஆலயம் அதிலே கட்டப்படும்.
3. எருசலேமின்மேல் அளவுநூல் பிடிக்கப்படும்.
4. என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பியிருக்கும். (சக 1:17).
5. இன்னும் கர்த்தர் சீயோனைத் தேற்றரவுபண்ணுவார்.
6. இன்னும் கர்த்தர் எருசலேமைத் தெரிந்து கொள்ளுவார்.

"எருசலேமின்மேல் அளவுநூல் பிடிக்கப்படும்" - எருசலேம் நகரம் மறுபடியும் கட்டப்படும். (சக 1:16-17; சக 2:1-9).

2. இரண்டாவது தரிசனம் - நான்கு கொம்புகள்

சக 1:18 நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, இதோ, நாலு கொம்புகளைக் கண்டேன்.

சக 1:19 அவைகள் என்னவென்று என்னோடே பேசின தூதனைக் கேட்டேன்; அதற்கு அவர்: இவைகள் யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையும் சிதறடித்த கொம்புகள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 2

"நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது......" (சக 1:18-19) இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியுள்ளது.

யூதா, இஸ்ரவேல், எருசலேம் ஆகியோர் புறஜாதிகள் மத்தியில் சிதறடிக்கப்பட்ட சம்பவம் பல வருஷங்களாக நிறைவேறி வருகிறது. கி.மு. 722 ஆம் வருஷத்தில் அசீரியர்கள் யூதர்களைச் சிதறடித்தார்கள். (2இராஜா 17) கி.மு. 606 ஆம் வருஷத்தில் பாபிலோனியரும் (2இராஜா 24-25), கி.பி. 70 ஆம் வருஷத்தில் ரோமப்பேரசுசாரும் யூதர்களைச் சிதறடித்தார்கள். வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்துவின் நாளில் யூதர்கள் மறுபடியும் பாலஸ்தீன தேசத்திலிருந்து ஒரு முறை துரத்தப்படுவார்கள். (தானி 11:41-45; வெளி 12:6,14).

"நாலு கொம்புகள்" - இவை ராஜாக்களுக்கும், ராஜ்யங்களுக்கும் அடையாளமாகும். (சக 1:18-19; தானி 7:8,23-24; வெளி 17:12-17) யூதாவையும், இஸ்ரவேலையும், எருசலேமையும் சிதறடிப்பதற்குக் கர்த்தர் இந்தத் தேசங்களுக்கு அல்லது ராஜாக்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். (சக 1:17). மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய தேசத்தில் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள் என்று சக 1:16-17 ஆகிய வசனங்கள் முன்னறிவிக்கிறது. ஆகையினால் இந்த நாலு கொம்புகள் என்பது இஸ்ரவேலை ஏற்கெனவே சிதறடித்தவர்களையும், இனிமேல் சிதறடிக்கப்போகிறவர்களையும் குறிக்கும்.

இஸ்ரவேல் தேசத்தாரை ஏற்கெனவே நான்கு புறஜாதி தேசத்தார் சிதறடித்திருக்கிறார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு:

1. அசீரியா (2இராஜா 15:29; 2இராஜா 17:1-41)

1 அதிகாரம்

2. பாபிலோன் (2இராஜா 24:1-25:30)

3. ரோமப்பேரரசு (தானி 9:26; லூக்கா 21:20-24)

4. வருங்காலத்து கிரேக்கப் பேரரசு (வெளி 12:6,14)

இஸ்ரவேல் தேசத்தாரை வருங்காலத்தில் நான்கு புறஜாதி தேசத்தார் சிதறடிப்பார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு:

1. எகிப்து (2இராஜா 23:33-37)

2. மேதிய-பெர்சிய தேசம் (எஸ்றா 1:1-4; நெகே 2)

3. கிரேக்கு (தானி 8:21)

4. பிந்திய ரோமப்பேரரசு (தானி 7:23-24)

"இவைகள் யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையும் சிதறடித்த கொம்புகள்" - யூதாவும், இஸ்ரவேலும் மாத்திரம் சிதறடிக்கப் பட்டார்கள் என்று கூறமுடியாது. ஏனெனில் இஸ்ரவேலின் மீதமுள்ளோரும் சிதறடிக்கப் பட்டார்கள். (சக 1:18)

3. மூன்றாவது தரிசனம் - நான்கு தொழிலாளிகள்

சக 1:20 பின்பு கர்த்தர் எனக்கு நாலு தொழிலாளிகளைக் காண்பித்தார்.

சக 1:21 இவர்கள் என்னசெய்ய வருகிறார்களென்று கேட்டேன்; அதற்கு அவர்: ஒருவனும் தன் தலையை ஏறெடுக்கக் கூடாதபடி அந்தக் கொம்புகள் யூதாவைச் சிதறடித்ததே, அவைகளுக்குப் பயமுறுத்துகிறதற்கும், யூதாவின் தேசத்தைப் பாழாக்கத் தங்கள் கொம்பை எடுத்த ஜாதிகளுடைய கொம்புகளை விழத்தள்ளுகிறதற்கும் இவர்கள் வந்தார்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 3

"பின்பு கர்த்தர் எனக்கு நாலு தொழிலாளிகளைக் காண்பித்தார்........" (சக 1:20-21) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இஸ்ரவேலும், எருசலேமும் வருங்காலத்தில் மேசியாவின் கீழ் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும். (சக 2:1)

தொழிலாளிகள் என்பதற்கான எபிரெய வார்த்தை "காராஷ்" **(charash)** என்பதாகும். இஸ்வேலையும், யூதாவையும் எருசலேமையும் சிதறடித்தவர்களின் வல்லமையை இந்தத் தொழிலாளிகள் முறியடிப்பார்கள். எருசலேமும், யூதாவும், இஸ்ரவேலும் முழுவதுமாகத் திரும்பக் கட்டப்படும். இவர்கள் புறஜாதி ராஜாக்களைப் பயமுறுத்துகிறதற்கும், யூதாவின் தேசத்தைப் பாழாக்கத் தங்கள் கொம்பை எடுத்த ஜாதிகளுடைய கொம்புகளை விழத் தள்ளுகிறதற்கும் வருவார்கள். பயமுறுத்துதல் என்பதற்கான எபிரெய வார்த்தை "காராத்" **(charad)** என்பதாகும்.

தொழிலாளிகள் **carpenters) חָרָשׁ - khaw-rawsh' - 2796**

ஆ.பெ.சொ. - தொழிலாளிகள் **(metal smiths; fabricators; artificers; carpenters; craftsmen; engravers; masons; workers; builders)**

பயமுறுத்துதல் **(terrify) חָרַד - khaw-rad' - 2729**

வினைச்சொல் - பயந்திரு, பயங்கரம், உண்டாகு, சலக்ரணையோடிரு, அதிர், அஞ்சு, திடுக்கிடு, அருண்டுபோ, தத்தளி, கலங்கு, பயமுறுத்து, பயப்படு, இரையாகு, மிரட்டு, வெருட்டு **(terrify; cause to fear; make afraid; discomfit; drive away)**

நாலு தொழிலாளிகள்

1. இயேசு கிறிஸ்து (மத் 24:29-31; வெளி 19:11-21)

2. பரலோகத்தின் தூதர்கள் (மத் 24:31; 2தெச 1:7-10)

3. உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் (சக 14:5; யூதா 1:14-15; வெளி 19:14)

4. புதுப்பிக்கப்பட்ட பூமிக்குரிய இஸ்ரவேல் (சக 14:14)

2 அதிகாரம்

4. நான்காவது தரிசனம்

(1) அளவு நூலைப் பிடித்திருக்கும் மனுஷன்

சக 2:1 நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, இதோ, தன் கையிலே அளவுநூல் பிடித்திருந்த ஒரு புருஷனைக் கண்டேன்.

சக 2:2 நீர் எவ்விடத்துக்குப் போகிறீர் என்று கேட்டேன்; அதற்கு அவர்: எருசலேமின் அகலம் இவ்வளவு என்றும் அதின் நீளம் இவ்வளவு என்றும் அறியும்படி அதை அளக்கிறதற்குப் போகிறேன் என்றார்.

சக 2:3 இதோ, என்னோடே பேசின தூதன் புறப்பட்டபோது, வேறொரு தூதன் அவரைச் சந்திக்கும்படிப் புறப்பட்டு வந்தான்.

தீர்க்கதரிசன எண் - 4

"நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது........" (சக 2:1-13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. எருசலேம் தன் நடுவிலே கூடும் மனுஷரின் திரளினாலும் மிருகஜீவன்களின் திரளினாலும் மதிலில்லாத பட்டணங்கள் போல் வாசஸ்தலமாகும். (சக 2:4).

2. நான் அதற்குச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் (சக 2:5).

3. வடதேசத்திலிருந்து கர்த்தர் அவர்களைக் கூட்டிச்சேர்ப்பார். (சக 2:6).

4. நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் (சக 2:10).

5. அந்நாளிலே அநேகம் ஜாதிகள் கர்த்தரைச் சேர்ந்து என் ஜனமாவார்கள் (சக 2:11).

6. நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உன்னிடத்தில் அனுப்பினாரென்று அறிவாய்.

7. கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்துக் கொள்வார். (சக 2:12)

8 திரும்பவும், எருசலேமைத் தெரிந்து கொள்வார்.

"அளவுநூல்" - மேசியாவின்கீழ் எருசலேம் திரும்பக் கட்டப்படும். விரிவு படுத்தப்படும். இங்கு கூறப்பட்டிருக்கிறவர் எருசலேமில் அவர்கள் நடுவில் வாசமாயிருப்பார். (சக 2:1-3,9-12).

"வேறொரு தூதன் அவரைச் சந்திக்கும்படிப் புறப்பட்டு வந்தான்" - தூதர்களுக்குப் பிரத்தியட்சமான சரீரங்கள் உண்டு. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இவை மனுஷரைப்போல பிரயாணம் பண்ணும். மனுஷரோடு இவை பேசும்.

(2) மேசியாவின்கீழ் எருசலேம்

சக 2:4 இவனை அவர் நோக்கி: நீ ஓடி இந்த வாலிபனிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால், எருசலேம் தன் நடுவிலே கூடும் மனுஷரின் திரளினாலும் மிருகஜீவன்களின் திரளினாலும் மதிலில்லாத பட்டணங்கள் போல் வாசஸ்தலமாகும்.

சக 2:5 நான் அதற்குச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"வாலிபன்" - சகரியா தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது அவர் வாலிபராக இருந்திருக்க வேண்டும்.

2 அதிகாரம்

வாலிபன் (young man) נַעַר - nah'-ar - 5288

ஆ.பெ.சொ. - வாலிபர், வேலைக்காரன், பிள்ளை, வேலைக்காரர், பிள்ளையாண்டான், வாலிபன், இளைஞன், இளையவன், இளைஞர், குமாரன், வேலைக்காரி, சேவகர், காரியக்காரன், ஊழியக்காரன், வாலவயது, இளவயது, ஊழியக்காரர், சிறியோர், வேலையாட்கள், சிறுபிள்ளை, சிறுபையன், பாலகன், சிதறுண்டது, பிள்ளைகள் **(a boy from infancy to adolescence; child; young man)**

"எருசலேம்.........மதிலில்லாத பட்டணங்கள் போல் வாசஸ்தலமாகும்" - யூதாவின் தலைநகரம் எருசலேம். இந்தத் தீர்க்கதரிசனம் எருசலேமைப் பற்றிக் கூறுகிறது. வடக்கு தேசமான எப்பிராயீமின் தலைநகரம் சமாரியா. இந்தத் தரிசனம் சமாரியாவைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. யூதாவின் தலைநகரமாகிய எருசலேமில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அப்போது எருசலேமில் திரளான ஜனங்கள் இருப்பார்கள். கர்த்தர் எருசலேமைச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பார். (சக 2:5).

"நான் அதற்குச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து" - சேனைகளைச் சுற்றிலும் பாதுகாப்பிற்காக அக்கினி எழுப்பியிருப்பார்கள். அதுபோலவே பிரயாணம் பண்ணுகிறவர்களும், வெளியிடங்களில் தங்கும்போது தங்களுடைய பாதுகாப்பிற்காகத் தங்களைச் சுற்றிலும் அக்கினி எழுப்பியிருப்பார்கள். (ஏசா 26:1; ஏசா 33:21; ஏசா 60:18).

"அதின் நடுவில் மகிமையாக இருப்பேன்" - கிறிஸ்து இஸ்ரவேலின் நடுவில் இருப்பார். அந்நாளில் கிறிஸ்து பூமியிலே பிரத்தியட்சமாகஇருந்து,ஜனங்களை ஆளுகை செய்வார். (ஏசா 9:6-7; ஏசா 52:7; எசே 43:7; எசே 48:35; சக 14; லூக்கா1:32-33;வெளி 11:15; வெளி 20:1-10).

(3) இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறது

சக 2:6 ஓகோ, நீங்கள் எழும்பி வடதேசத்திலிருந்து ஓடிவாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆகாயத்து நான்கு திசைகளிலும் உங்களை நான் சிதறப்பண்ணினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சக 2:7 பாபிலோன் குமாரத்தியினிடத்தில் குடியிருக்கிற சீயோனே, உன்னை விடுவித்துக் கொள்.

சக 2:8 பிற்பாடு மகிமையுண்டாகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளிடத்துக்கு என்னை அனுப்பினார்; உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்.

சக 2:9 இதோ, நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக அசைப்பேன்; அதினால் அவர்கள் தங்கள் அடிமைகளுக்குக் கொள்ளையாவார்கள்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை அனுப்பினாரென்று அறிவீர்கள்.

இஸ்ரவேல் சிதறிப்போயிற்று

"ஆகாயத்து நான்கு திசைகளிலும் உங்களை நான் சிதறப்பண்ணினேன்" என்னும் வாக்கியம் உபா 4:27; உபா 28:64, லூக்கா 21:20-24 ஆகிய வசனங்களின் நிறைவேற்றமாகும். இந்தத் தீர்க்கதரிசனத்திற்குப் பின்பு யூதர்கள் மறுபடியும் தங்களுடைய தேசத்தில் ஸ்தாபிக்கப் பட்டார்கள். அவர்கள் மறுபடியும் பாவம் செய்து, கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள். அதன் பின்பு மேலும் ஒரு தடவை யூதர்கள் புறஜாதி தேசத்தார் மத்தியில் சிதறிப்போனார்கள். இது அவர்கள் சிதறிப்போன இரண்டாவது சம்பவமாகும். இதிலிருந்து அவர்கள் இப்போது மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின்இரண்டாம் வருகை வரையிலும் அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். மீதமுள்ளவர்கள் அனைவரும் பாலஸ்தீன தேசத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். தங்களுடைய தேசத்தில் அவர்கள் தங்கியிருப்பார்கள். இயேசு கிறிஸ்து அவர்களை நித்தியமாக ஆளுகை செய்வார். (ஏசா 11:10-12, மத் 24:31).

2 அதிகாரம்

"பாபிலோன் குமாரத்தியினிடத்தில் குடியிருக்கிற சீயோனே" - பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்திற்குத் திரும்பி வருகிறார்கள். இக்காலத்தில் சகரியா தீர்க்கதரிசனம் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்காக அவருக்கு இந்தத் தேசம் ஆயத்தமாக்கப்படுகிறது.

"பிற்பாடு மகிமையுண்டாகும்" - மூலபாஷையில் இந்த வாக்கியம் "தமது மகிமைக்காக என்னை அனுப்பினார்" "For His own glory" எனவும், செப்துவஜிந்த் பதிப்பில் "தமது மகிமையினால் என்னை அனுப்பினார்" "He behind glory sent Me" எனவும் எழுதப் பட்டிருக்கிறது. சேனைகளின் கர்த்தருக்காக இங்கு மேசியா பேசுகிறார். சேனைகளின் கர்த்தர் மேசியாவை இஸ்ரவேலரைக் கொள்ளையிட்ட ஜாதிகளுக்கு எதிராக அனுப்பியிருக்கிறார். இஸ்ரவேலரைத் தொடுகிறவன் கர்த்தருடைய கண்மணியைத் தொடுகிறான். மேசியாவாகிய நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக அசைப்பேன். அப்பொழுது சேனைகளின் கர்த்தர் மேசியாவாகிய என்னை அனுப்பினாரென்று இஸ்ரவேல் புத்திரராகிய நீங்கள் அறிவீர்கள். (சக 2:8-11).

(4) மேசியா சீயோனில் ஆளுகை செய்கிறார்

சக 2:10 சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் சந்தோஷம்

யூதா, சீயோன் ஆகிய வார்த்தைகள் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிக்கும். வருங்காலத்தில் இவர்கள் எல்லோருமே கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். மேசியா வந்து அவர்கள் நடுவில் வாசம் பண்ணுவார். பிதாவாகிய தேவன் அவர்கள் நடுவில் வாசம் பண்ணுவதற்குப் பதிலாக இயேசுகிறிஸ்து எருசலேமில் இஸ்ரவேலர் மத்தியிலும், ஆயிரம் வருஷத்து பரிசுத்த தேவாலயத்திலும் வாசம் பண்ணுவார். (எசே 43:7; எசே 48:35; தானி 7:13-14; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10) பிதாவாகிய தேவன் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு பரலோகத்திலிருந்து தம்முடைய தலைநகரமான புதிய எருசலேமைப் பூமியில் ஸ்தாபித்த பின்பு, இந்தப் பூமியில் மனுஷர் மத்தியில் வாசம்பண்ணுவார். அப்போது பிதா, குமாரன், பரிசுத்தஆவியானவர் ஆகிய மூவருமே பூமியில் மனுஷர் மத்தியில் நித்தியமாக வாசம்பண்ணுவார்கள். (வெளி 21:1-22:6).

(5) எல்லா தேசங்களின் மனந்திரும்புதல்

சக 2:11 அந்நாளிலே அநேகம் ஜாதிகள் கர்த்தரைச் சேர்ந்து என் ஜனமாவார்கள்; நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உன்னிடத்தில் அனுப்பினாரென்று அறிவாய்.

சக 2:12 கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்து, திரும்பவும், எருசலேமைத் தெரிந்து கொள்வார்.

சக 2:13 மாம்சமான சகலமான பேர்களே, கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; அவர் தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து எழுந்தருளினார் என்று சொல் என்றார்.

சகரியா - தொகுப்புரை

2 அதிகாரம்

"அந்நாளிலே அநேகம் ஜாதிகள் கர்த்தரைச் சேர்ந்து என் ஜனமாவார்கள்" - பூமியில் மனுஷர் மத்தியில் மேசியா வாசம் பண்ணும்போது புறஜாதிகள் கர்த்தரிடத்தில் சேர்ந்து அவருடைய ஜனமாவார்கள். (தானி 7:13-14,18,22,27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10).

"அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உன்னிடத்தில் அனுப்பினாரென்று அறிவாய்" - இந்த முன்னறிவிப்புகளெல்லாம் நிறைவேறும் போது, இஸ்ரவேலும், புறஜாதி தேசங்களும் சேனைகளின் கர்த்தர் மேசியாவை அவர்களிடத்தில் அனுப்பினாரென்னும் சத்தியத்தை அறிந்து கொள்வார்கள். அப்போது கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்துக் கொள்வார். திரும்பவும், எருசலேமைத் தம்முடைய தலைநகரமாகத் தெரிந்துகொள்வார். (சக 2:12) கர்த்தர் தமது பரிசுத்த வாசஸ்தலத்தில் வாசம்பண்ணுவார். (சக 2:13).

"கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்து" - யூதா என்பது இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிக்கும். கர்த்தர் அவர்களைக் கடைசி நாளில் மீட்கும்போது இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் மீட்கப்படுவார்கள்.

"பரிசுத்த வாசஸ்தலம்" **(holy habitation)** - பூமியில் மறுபடியும் கட்டப்படும் பூமிக்குரிய எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலமாகும். கர்த்தருடைய பரிசுத்தப் பங்கும், அவருடைய தேவாலயமும் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகும். (சக 6:12-13; எசே 40-48) ஆயிரம் வருஷ அரசாட்சியில் அவருடைய பரலோக வாசஸ்தலம் புதிய எருசலேமாக இருக்கும். (யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 13:14; வெளி 3:12,21-22).

3 அதிகாரம்

5. ஐந்தாவது தரிசனம்

(1) பிரதான ஆசாரியனாகிய யோசுவாவும் சாத்தானும்

சக 3:1 அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை எனக்குக் காண்பித்தார்; அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான்; சாத்தான் அவனுக்கு விரோதஞ் செய்ய அவன் வலதுபக்கத்திலே நின்றான்.

சக 3:2 அப்பொழுது கர்த்தர் சாத்தானைநோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா என்றார்.

"பிரதான ஆசாரியனாகிய யோசுவா" - இந்த யோசுவா வேறு. கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தாரைத் தலைமை தாங்கிச் சென்ற யோசுவா வேறு. இந்த யோசுவா பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு வந்த பிரதான ஆசாரியன். யோசுவா கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான். சாத்தான் அவனுக்கு விரோதஞ்செய்ய அவன் வலதுபக்கத்திலே நின்றான். இந்தக் காட்சியைச் சகரியா பார்க்கிறார். யூதாவும், எருசலேமும் மறுபடியும் கட்டப்படுகிறது. அதைத் தடைபண்ணுவதற்குச் சாத்தான் முயற்சி பண்ணுகிறான். சாத்தானைக் கர்த்தர் கடிந்து கொள்கிறார். சாத்தான் இரண்டுமுறை கடிந்து கொள்ளப்படுகிறான். (சக 3:1-2).

(2) ஆசாரியத்துவம் புதுப்பிக்கப் படுகிறது

சக 3:3 யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய்த் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான்.

சக 3:4 அவர் தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி: இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள் என்றார்; பின்பு அவனைநோக்கி: பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார்.

சக 3:5 அவன் சிரசின்மேல் சுத்தமான பாகையை வைப்பார்களாக என்றார்; அப்பொழுது சுத்தமான பாகையை அவன் சிரசின்மேல் வைத்து, அவனுக்கு வஸ்திரங்களைத் தரிப்பித்தார்கள்; கர்த்தருடைய தூதன் அங்கே நின்றார்.

"அழுக்கு வஸ்திரம்" - யோசுவா பிரதான ஆசாரியனுக்குரிய வஸ்திரம் தரித்திருக்கவில்லை. அழுக்கு வஸ்திரம் தரித்திருக்கிறான். கர்த்தர் அவனுடைய அழுக்கு வஸ்திரத்தை அகற்றிப் போடுகிறார். அவனுடைய அக்கிரமத்தை அவனிடத்திலிருந்து நீங்கச் செய்து, கர்த்தர் அவனுக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பிக்கிறார். (சக 3:3-5). அதன் பின்பு கர்த்தருடைய தூதன் யோசுவாவிற்குப் பிரதான ஆசாரியனின் ஊழியத்தையும், அதன் ஆசீர்வாதத்தையும் அறிவிக்கிறார். (சக 3:6-7) அதன் பின்பு, மேசியாவின் வருகையையும், இஸ்ரவேலின் இரட்சிப்பையும் குறித்து தீர்க்கதரிசனம் கூறுகிறார். (சக 3:8-10).

"தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான்." - தேவனும், தேவதூதர்களும் மனுஷருக்குப் பிரத்தியட்சமான தரிசனங்கள் பலவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் இதுவும் ஒன்று.

3 அதிகாரம்

(3) யோசுவாவிற்குக் கட்டளை

சக 3:6 கர்த்தருடைய தூதன் யோசுவாவுக்குச் சாட்சியாக:

சக 3:7 சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல் காப்பாய்; இங்கே நிற்கிற வர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்.

ஆசீர்வாதத்திற்கு நிபந்தனைகள்

1. நீ என் வழிகளில் நடந்தால்.
2. என் காவலைக் காத்தால்.

கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதம்

1. நீ என் ஆலயத்தில் நியாயம்விசாரிப்பாய்.
2. என் பிராகாரங்களைக் காவல் காப்பாய்.
3. இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்.

"இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம்" - இது நிபந்தனையுள்ள தீர்க்கதரிசனம். பிரதான ஆசாரியன் இந்த நிபந்தனைகளைக் கடைபிடித்தால் அவனுக்கு ஆசீர்வாதம் உண்டாகும். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாகத் தேவதூதர்கள் எப்போதும் நின்று கொண்டிருப்பார்கள். அவர்கள் மத்தியில் உலாவுகிறதற்கு யோசுவாவிற்கு இடம் உண்டாகும். (சக 3:1-6; சங் 102:21; 2தீமோ 5:21; எபி 1:14).

6. ஆறாவது தரிசனம்

(1) தேவனுடைய தாசன் - கிளை

சக 3:8 இப்போதும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள்; உனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற உன் தோழரும் கேட்கக்கடவர்கள்; இவர்கள் அடையாளமாயிருக்கிற புருஷர்; இதோ, கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன்.

தீர்க்கதரிசன எண் - 5

"இப்போதும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள்.........." (சக 3:8-10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன். (சக 3:8).
2. யோசுவாவுக்கு முன்பாக வைக்கப்பட்ட இந்த ஒரே கல்லின்மேல் ஏழு கண்களும் வைக்கப்பட்டிருக்கிறது (சக 3:9).
3. நான் அதின் சித்திரவேலையை நிறைவேற்றுவேன்.
4. இந்த தேசத்தில் அக்கிரமத்தை ஒரேநாளிலே நீக்கிப்போடுவேன்.
5. அந்நாளிலே நீங்கள் ஒருவரை யொருவர் திராட்சச்செடியின்கீழும் அத்திமரத்தின் கீழும் வரவழைப்பீர்கள் (சக 3:10).

"கிளை" - சகரியா இதை ஒரு பெயராகப் பயன்படுத்துகிறார். "இதோ ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப்படும்" (சக 6:12). இதற்கு முன்பு தீர்க்கதரிசிகள் இந்தக் கிளையைக் கர்த்தருடைய கிளை என்றும், (ஏசா 4:2), தாவீதின் கிளை என்றும் (ஏசா 11:1; எரே 23:5; எரே 33:15) முன்னறிவித்திருக்கிறார்கள்.

சகரியா - தொகுப்புரை

3 அதிகாரம்

(2) அவருடைய அபிஷேகம்

சக 3:9 இதோ, நான் யோசுவாவுக்கு முன்பாக வைத்த கல்; இந்த ஒரே கல்லின்மேல் ஏழு கண்களும் வைக்கப் பட்டிருக்கிறது; இதோ, நான் அதின் சித்திரவேலையை நிறைவேற்றி, இந்த தேசத்தில் அக்கிரமத்தை ஒரேநாளிலே நீக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் யோசுவாவுக்கு முன்பாக வைத்த கல்" - இந்தக் கல் கிளை என்னப்படும் மேசியாவிற்கு அடையாளமாகும். (ஏசா 28:16; சங் 118:22; மத் 21:42; அப் 4:11; எபே 2:20-21; 1பேதுரு 2:4-7). இதின் சித்திரவேலையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இஸ்ரவேலரின் அக்கிரமம் ஒரேநாளில் நீக்கப்படும். பூமியில் சமாதானமும், அமரிக்கையும் உண்டாயிருக்கும். (சக 3:9-10). ஏழு கண்கள் என்பது கர்த்தருடைய ஏழு கண்களாகும். (சக 4:10, வெளி 5:6)

"ஒரே நாளிலே" - இயேசு கிறிஸ்து பிரத்தியட்சமாக வரும் அந்த நாளில் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். யாக்கோபிலிருந்து அவபக்தி ஒழிந்துபோகும். (சக 12:10-13:1; ரோமர் 11:25-29). இஸ்ரவேல் புத்திரர் மூன்று நாட்களாகப் புலம்பி மனந்திரும்புவார்கள். மூன்றாம் நாளில் அவர்கள் ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். (ஓசி 6:2).

(3) உலகத்தின் செழுமை

சக 3:10 அந்நாளிலே நீங்கள் ஒருவரையொருவர் திராட்சச்செடியின் கீழும் அத்திமரத்தின்கீழும் வரவழைப்பீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

"திராட்சச்செடியின்கீழும் அத்திமரத்தின் கீழும் வரவழைப்பீர்கள்" - இது எபிரெயருடைய வழக்குச் சொல்லாகும். சமாதானமும், செழிப்பும் நிறைந்த ஆசீர்வாதமான வாழ்க்கையை இந்த வாக்கியம் விவரிக்கிறது. (1இராஜா 4:25; மீகா 4:4).

4 அதிகாரம்

7. ஏழாவது தரிசனம்

(1) பொன் குத்துவிளக்கும் இரண்டு ஒலிவ மரங்களும் - (வெளி 11:3-4)

சக 4:1 என்னோடே பேசின தூதன் திரும்பி வந்து நித்திரைபண்ணுகிற ஒருவனை எழுப்புவதுபோல் என்னை எழுப்பி:

சக 4:2 நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; அதற்கு நான்: இதோ, முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப் போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது.

சக 4:3 அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது என்றேன்.

சக 4:4 நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: ஆண்டவனே, இவைகள் என்னவென்று கேட்டேன்.

"என்னோடே பேசின தூதன் திரும்பி வந்து" - தூதன் திரும்பி வந்து, சகரியாவிற்குத் தரிசனங்களைக் காண்பிக்கிறார். முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்பிக்கிறார். அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது. இரண்டு ஒலிவமரங்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட இரண்டு நபர்களைக் குறிப்பிடுகிறது. அவர்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறார்கள். (சக 11-14; வெளி 11:4).

"இரண்டு ஒலிவமரங்கள்" - வெளி 11:3-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இரண்டு சாட்சிகளுக்கு இவை அடையாளமாகும். அபிஷேகம் பண்ணப்பட்ட இவ்விரண்டு மனுஷரும் மரணமில்லாமல் எடுத்துக் கொள்ளப் பட்டார்கள். பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக இவர்கள் நிற்கிறார்கள். (சக 4:11-14; வெளி 11:4).

(2) ஆவியினாலும்வல்லமையினாலும் செருபாபேல் அபிஷேகம் பண்ணப் படுகிறான்

சக 4:5 என்னோடே பேசின தூதன் மறுமொழியாக: இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார்; ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன்.

சக 4:6 அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 4:7 பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாகநீசமபூமியாவாய்;தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபை யுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார்.

"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" - தேவாலயத்தை மறுபடியும் கட்டும் பணியில் யோசுவாவும், செருபாபேலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களை உற்சாகப் படுத்துவதும், பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருக்கும் யூதா தேசத்தாரை உற்சாகப்படுத்துவதும் இந்தத் தரிசனத்தின் நோக்கமாகும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமே வல்லமையின் மெய்யான அதிகாரம். மனுஷருடைய பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ எதையும் சாதிக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமே பிரதானம்.

4 அதிகாரம்

(சக 4:5-7) தேவாலயத்தின் பணிகளுக்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்படுகிற போதிலும் செருபாபேல் அதைக் கட்டி முடிப்பார் என்று இஸ்ரவேலுக்கு உறுதிபண்ணப் படுகிறது. (சக 4:8-10). தமக்கு முன்பாக இருக்கும் அபிஷேகம் பண்ணப்பட்ட இரண்டு பேரோடு கர்த்தர் இருப்பதுபோல, இந்த வேலையில் கர்த்தர் செருபாபேலோடும் இருக்கிறார். (சக 4:11-14).

தீர்க்கதரிசன எண் - 6

"பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்?........" (சக 4:7-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய் (சக 4:7).

2. தலைக்கல்லை அவன் கொண்டு வருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள்.

3. செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது; அவன் கைகளே இதை முடித்துத்தீர்க்கும். (சக 4:9).

4. சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய்.

5. அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப் பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கும். (சக 4:10).

"பெரிய பர்வதம்" - முதலாம் தரியுவிற்குப் பெரிய பர்வதம் என்பது ஓர் அடையாள வார்த்தையாகும். தேவாலயத்தின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட வேண்டுமென்று அவன் ஆணை பிறப்பித்தான். (எஸ்றா 4). அவனுடைய ஆணை அகன்றுபோகும். ஒரு பெரிய மலை அகன்றுபோவதுபோலவும், ஒரு பெரிய பர்வதம் சமபூமியாகப் போவதுபோலவும் அவனுடைய ஆணை ஒன்றுமில்லாமல் போகும். (எஸ்றா 5-6).

"தலைக்கல்" - ஒரு கட்டிடத்தைக் கட்டும் போது அங்கு வைக்கப்படும் மூலைக்கல்லுக்குத் தலைக்கல் என்று பெயர். இது கட்டிடத்தின் பிரதான கல்லாக இருக்கும். பிரதான நியாயாதிபதி கட்டிடத்தின் அஸ்திபாரத்தையும், சுவற்றின் தலைக்கல்லையும் வைப்பது வழக்கம். (எஸ்றா 3:10) மூலைக்கல்லை வைக்கும்போது கர்த்தருடைய கிருபைக்காக ஜனங்கள் ஆர்ப்பரிப்பார்கள்.

(3) தேவாலயம் செப்பனிடும் வேலையைச் செருபாபேல் நிறைவு செய்ய வேண்டும்

சக 4:8 பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

சக 4:9 செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது; அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும்; அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய்.

சக 4:10 அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப் பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார்.

"கர்த்தருடைய ஏழு கண்கள்" - கல்லின்மேல் ஏழு கண்கள் வைக்கப்பட்டிருக்கிறது. (சக 3:9) இவை செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது.

4 அதிகாரம்

(4) ஒலிவ மரங்களின் விளக்கம்

சக 4:11 பின்பு நான் அவரை நோக்கி: குத்துவிளக்கு வலதுபுறமாகவும் அதற்கு இடதுபுறமாகவும் இருக்கிற இந்த இரண்டு ஒலிவமரங்கள் என்னவென்று கேட்டேன்.

சக 4:12 மறுபடியும் நான் அவரைநோக்கி: இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த் தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப் பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் இரண்டு கிளைகள் என்னவென்று கேட்டேன்.

சக 4:13 அதற்கு அவர்: இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார்; ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன்.

சக 4:14 அப்பொழுது அவர்: இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்.

“பின்பு நான் அவரை நோக்கி” - இந்தத் தரிசனத்தைச் செருபாபேலுக்குப் பொருந்துமாறு தூதனானவர் காண்பிக்கிறார். அதன் பின்பு, ஒலிவமரங்களின் முழுமையான பொருளை விவரிக்கிறார். இவ்விரண்டு ஒலிவமரங்களும் சர்வ லோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்கள் மரணத்தைப் பார்க்காமல் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். மறுபடியும் இவர்கள் வெளி 11:3-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இரண்டு சாட்சிகளாகப் பூமியில் வெளிப்படுவார்கள். (சக 4:14).

5 அதிகாரம்

8. எட்டாவது தரிசனம்

(1) பறக்கிற புஸ்தகச்சுருள்

சக 5:1 நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், இதோ, பறக்கிற ஒரு புஸ்தகச் சுருளைக் கண்டேன்.

சக 5:2 தூதன்: நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் காண்கிறேன், அதின் நீளம் இருபது முழமும் அதின் அகலம் பத்து முழமுமாயிருக்கிறது என்றேன்.

"இதோ, பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் கண்டேன்" - ஏழு தரிசனங்களுக்குப் பின்பு பறக்கிற புஸ்தகச் சுருளைப் பற்றிய எட்டாவது தரிசனம் என்று கூறப்பட்டிருக்கிறது. பாவம் செய்கிறவர்களின்மீது நியமிக்கப்பட்டிருக்கும் சாபங்கள் இந்தப் புஸ்தகச்சுருளில் எழுதப் பட்டுள்ளது. (சக 5:1-4).

"அதின் நீளம் இருபது முழமும் அதின் அகலம் பத்து முழமுமாயிருக்கிறது" - நீளம் 30 அடி. அகலம் 15 அடி.

(2) இது சாபம்

சக 5:3 அப்பொழுது அவர்: இது பூமியின் மீதெங்கும் புறப்பட்டுப்போகிற சாபம்; எந்தத் திருடனும் அதின் ஒரு புறத்திலிருக்கிறதின் படியே அழிக்கப்பட்டுப் போவான்; ஆணையிடுகிற எவனும், அதின் மறுபுறத்தில் இருக்கிறதின்படியே அழிக்கப்பட்டுப்போவான்.

சக 5:4 அது திருடன் வீட்டிலும், என் நாமத்தைக் கொண்டு பொய்யாணை யிடுகிறவன் வீட்டிலும் வந்து, அவனவன் வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும்படி அதைப் புறப்பட்டுப் போகப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

"அப்பொழுது அவர்" - சகரியா பறக்கிற புஸ்தகச்சுருளையும், அதன் நீள அகலத்தையும் தரிசித்தபின்பு, அதிலுள்ள விவரங்களையும் பெற்றுக் கொள்கிறார். (சக 5:3-4).

தீர்க்கதரிசன எண் - 7

"இது பூமியின் மீதெங்கும் புறப்பட்டுப்போகிற சாபம்........" (சக 5:3-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. இது பூமியின் மீதெங்கும் புறப்பட்டுப்போகிற சாபம்; எந்தத் திருடனும் அதின் ஒரு புறத்திலிருக்கிறதின்படியே அழிக்கப் பட்டுப்போவான் (சக 5:3).
2. ஆணையிடுகிற எவனும், அதின் மறுபுறத்தில் இருக்கிறதின்படியே அழிக்கப்பட்டுப் போவான்.
3. அதைப் புறப்பட்டுப்போகப்பண்ணுவேன் (சக 5:4).
4. அது திருடன் வீட்டில் வந்து தங்கும்.
5. என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறவன் வீட்டில் வந்து தங்கும்.
6. அவனவன் வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும்.

5 அதிகாரம்

"சாபம்" - இங்கு திருடுகிறவனுக்கும், பொய்யாணையிடுகிறவனுக்கும் சாபம் கூறப்பட்டிருக்கிறது. இவர்களைத் தவிர எந்தவிதமான பாவங்களைச் செய்தாலும் அவர்களுக்கும் சாபம் வரும். பறக்கும் புஸ்தகச்சுருள் அளவில் பெரியது. அதில் எழுதப்பட்டுள்ள காரியங்கள் விரிவாக இங்கு கூறப்படாவிட்டாலும் பிரமாணத்திலும், சுவிசேஷத்திலும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலும், சங்கீதப்புஸ்தகத்திலும் பாவத்திற்கான சாபங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

"அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும்படி அதைப் புறப்பட்டுப்போகப்பண்ணுவேன்" - திருடர்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பு மிகவும் உக்கிரமமாக இருக்கும். திருடர்களுடைய வீடுகளிலும், பொய்யாணை யிடுகிறவர்களுடைய வீடுகளிலும் உள்ள மரங்களையும், கல்லுகளையும் நிர்மூலம் பண்ணுவதுபோல கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களை நிர்மூலம் பண்ணும்.

9. ஒன்பதாவது தரிசனம்

(1) மரக்கால்

> சக 5:5 பின்பு என்னோடே பேசின தூதன் வெளியே வந்து என்னை நோக்கி: நீ உன் கண்களை ஏறெடுத்து, புறப்பட்டு வருகிறதை என்னவென்று பார் என்றார்.
>
> சக 5:6 அது என்னவென்று கேட்டேன்; அதற்கு அவர்: அது புறப்பட்டு வருகிறதாகிய ஒரு மரக்கால் என்றார். பின்னும் அவர்: பூமியெங்கும் இதுதான் அவர்களுடைய கண்ணோக்கம் என்றார்.
>
> சக 5:7 இதோ, ஒரு தாலந்து நிறையான ஈயமூடி தூக்கிவரப்பட்டது; மரக்காலின் நடுவிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள்.

"பின்பு என்னோடே பேசின தூதன் வெளியே வந்து என்னை நோக்கி" - பறக்கிற புஸ்தகச் சுருளுக்குப் பின்பு, மரக்காலின் நடுவிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருப்பதைச் சகரியா காண்கிறார். இது இஸ்ரவேலுக்கு வேறொரு சத்தியத்தை விளக்குவதற்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 8

"நீ உன் கண்களை ஏறெடுத்து, புறப்பட்டு வருகிறதை என்னவென்று பார்......." (சக 5:5-11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. சிநெயார் தேசத்திலே அதற்கு ஒரு வீட்டைக் கட்டும்படிக்கு அதைக் கொண்டு போவார்கள். (சக 5:8-11)

2. அங்கே அது ஸ்தாபிக்கப்பட்டு, தன் நிலையிலே வைக்கப்படும்.

"பின்பு என்னோடே பேசின தூதன்" - தேவனும், தூதர்களும் மனுஷரோடு பேசக்கூடியவர்கள். அவர்களுக்கென்று பாஷைகள் உள்ளன. (1கொரி 13:1) ஆயினும் அவர்களுக்கு மனுஷருடைய பாஷைகளும் தெரியும். கழுதைகூட மனுஷனுடைய பாஷையைப் பயன்படுத்திற்று. (எண் 22:28-30). மனுஷனும் பரிசுத்த ஆவியானவரால் தூதருடைய பாஷையைப் பேசமுடியும். (1கொரி 13:1)

"நீ உன் கண்களை ஏறெடுத்து, புறப்பட்டு வருகிறதை என்னவென்று பார்" - கடைசி இரண்டு தரிசனங்களும் வானத்தில் பறந்து வருகின்றன. ஒன்று புஸ்தகச்சுருள். மற்றொன்று மரக்கால். அந்த மரக்காலின் நடுவிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருக்கிறாள். அவள் ஒரு அக்கிரமக்காரி. மேலும் இரண்டு ஸ்திரீகளைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. அந்த ஸ்திரீகளுக்குச் செட்டைகள் இருக்கிறது. அவர்கள் இருவரும் மரக்காலை பூமிக்கும் வானத்துக்கும் நடுவாய்த் தூக்கிக்கொண்டு போனார்கள். பின்பு அவர்கள் சிநெயார் தேசத்தில் மரக்காலைக் கொட்டி விட்டார்கள். அங்கு அந்த ஸ்திரீ ஸ்தாபிக்கப்படுவாள். (சக 5:6-11).

5 அதிகாரம்

"ஒரு தாலந்து நிறையான ஈயமூடி" - மரக்காலுக்குள் ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருக்கிறாள். அவளைத் தூதனானவர் மரக்காலுக்குள்ளே தள்ளி ஈயக்கட்டியை அதின் வாயிலே போட்டார். அந்த ஈயக்கட்டியின் அளவு ஒரு தாலந்து நிறையாகும். இது சுமார் 65 கிலோ எடையுள்ளது. ஒரு மரக்காலை மூடுவதற்கு இவ்வளவு ஈயம் தேவைப்படுகிறது. ஆயினும் மரக்காலுக்குள் இருக்கும் அந்த ஸ்திரீயை மூடமுடியவில்லை. அவளுடைய அக்கிரமம் மிகவும் அதிகம் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

(2) இது அக்கிரமம்

சக 5:8 அப்பொழுது அவர்: இவள் அக்கிரமக்காரி என்று சொல்லி, அவளை மரக்காலுக்குள்ளே தள்ளி ஈயக்கட்டியை அதின் வாயிலே போட்டார்.

"இவள் அக்கிரமக்காரி" - மரக்காலின் நடுவிலே உட்கார்ந்திருக்கிற ஸ்திரீ அக்கிரமத்திற்கு அடையாளமாக இருக்கிறாள். இரண்டு ஸ்திரீகள் செட்டைகளையுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மரக்காலை பூமிக்கும் வானத்துக்கும் நடுவாய்த் தூக்கிக்கொண்டு போனார்கள். அக்கிரமம் வேரூன்றி நிலைபெற்றியிருக்கிறது என்பது இந்தத் தரிசனத்தின் பொருளாகும். மரக்கால் வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் ஓர் அளவு. இந்த அக்கிரமம் சிநெயார் தேசத்தில் அல்லது பாபிலோனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. (சக 5:9-11). கடைசி நாட்களில் வியாபாரம், மார்க்கம், அரசியல் ஆகியவற்றிற்கு பாபிலோன் தேசம் மையமான தேசமாக விளங்கும். பாபிலோன் மறுபடியும் கட்டப்பட்டு, அந்திக் கிறிஸ்துவின் தலைநகரமாக இருக்கும். அந்திக்கிறிஸ்து சீரியாவிலிருந்து வருவான். கடைசி நாட்களில் சீரியர் பாபிலோனைக் கைப்பற்றுவார்கள். அந்திக்கிறிஸ்து சீரியாவிலிருந்தும், பாபிலோனிலிருந்தும் வருவான் என்பதற்கு வேதாகமத்தில் பல குறிப்புகள் உள்ளன. (ஏசா 13-14; எரே 50-51; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 17:1-18; வெளி 18:1-24) கடைசி நாட்களில் பாபிலோன் முக்கிய பங்கு வகிக்கும். இரகசிய பாபிலோன் அந்திக்கிறிஸ்துவின் தலைநகரமாக இருக்கும். வெளி 18 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள படி, இது வியாபாரத்திற்கு முக்கிய ஸ்தலமாக விளங்கும். அந்திக்கிறிஸ்துபாபிலோனிலிருந்து ஆளுகை செய்வான். (தானி 7:23-24; வெளி 17:12-17, ஏசா 14). அதன் பின்பு, அந்திக்கிறிஸ்து பாபிலோனிலிருந்து புறப்பட்டு, எருசலேமில் தன் தலைநகரத்தை ஸ்தாபிப்பான். தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் எல்லா தேசங்களையும் இங்கிருந்து ஆளுகை செய்வான். (தானி 9:27; தானி 11:40-45; வெளி 13:5; வெளி 17:12-17). கடைசி நாட்களில் பாபிலோன் அக்கிரமத்தின் ஆதாரமாக இருக்குமென்பது சக 5:5-11 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது.

(3) சிநேயாருக்கு மரக்கால் எடுத்துச் செல்லப்பட்டது - பாபிலோன் திரும்ப கட்டப்படும் - (வெளி 18)

சக 5:9 அப்பொழுது நான் என் கண்களை ஏறெடுத்து, இதோ, புறப்பட்டுவருகிற இரண்டு ஸ்திரீகளைக் கண்டேன்; அவர்களுக்கு நாரையின் செட்டைகளுக் கொத்த செட்டைகள் இருந்தது; அவர்கள் செட்டைகளில் காற்றிருந்தது; இவர்கள் மரக்காலை பூமிக்கும் வானத்துக்கும் நடுவாய்த் தூக்கிக்கொண்டு போனார்கள்.

சக 5:10 நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: இவர்கள் மரக்காலை எங்கே கொண்டு போகிறார்கள் என்று கேட்டேன்.

சக 5:11 அதற்கு அவர்: சிநெயார் தேசத்திலே அதற்கு ஒரு வீட்டைக் கட்டும்படிக்கு அதைக் கொண்டு போகிறார்கள்; அங்கே அது ஸ்தாபிக்கப் பட்டு, தன் நிலையிலே வைக்கப்படும் என்றார்.

"சிநெயார் தேசத்திலே அதற்கு ஒரு வீட்டைக் கட்டும்படிக்கு அதைக் கொண்டுபோகிறார்கள்" - சிநெயார் என்னப்படும் பாபிலோன் தேசத்தில் அக்கிரமத்திற்கு ஒரு வீடு கட்டப்படுகிறது. அக்கிரமம் பாபிலோனைத் தன் மையமாக வைத்து, அது எல்லா இடங்களிலும் தன் அக்கிரமக் கிரியைகளை நடப்பிக்கும்.

6 அதிகாரம்

10. பத்தாவது தரிசனம்

(1) நான்கு இரதங்களும் குதிரைகளும் - (1:7)

சக 6:1 நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து, இதோ, இரண்டு பர்வதங்களின் நடுவாகப் புறப்பட்டுவருகிற நாலு இரதங்களைக் கண்டேன்; அந்தப் பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாயிருந்தன.

சக 6:2 முதலாம் இரதத்தில் சிவப்புக்குதிரைகளும், இரண்டாம் இரதத்தில் கறுப்புக் குதிரைகளும்,

சக 6:3 மூன்றாம் இரதத்தில் வெள்ளைக்குதிரைகளும், நான்காம் இரதத்தில் புள்ளிபுள்ளியான சிவப்புக் குதிரைகளும் பூட்டியிருந்தன.

"நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து" - சகரியா தீர்க்கதரிசி பத்தாம் முறையாகத் தரிசனத்தைக் காண்கிறார். இந்த தரிசனத்தில் இரண்டு பர்வதங்களின் நடுவாகப் புறப்பட்டுவருகிற நாலு இரதங்களில் காண்கிறார். அந்தப் பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாயிருக்கின்றன. அந்த இரதங்களைக் குதிரைகள் பூட்டப்பட்டுள்ளன. முதலாம் இரதத்தில் சிவப்புக்குதிரைகளும், இரண்டாம் இரதத்தில் கறுப்புக் குதிரைகளும், மூன்றாம் இரதத்தில் வெள்ளைக்குதிரைகளும், நான்காம் இரதத்தில் புள்ளிபுள்ளியான சிவப்புக் குதிரைகளும் பூட்டியிருந்தன. இந்தக் குதிரைகள் வானத்தினுடைய ஆவிகளாகும். இவைகள் சர்வ லோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய சமுகத்தில் நின்று புறப்படுகிற ஆவிகளாகும். ஒன்றில் பூட்டப் பட்டிருந்த கறுப்புகுதிரைகள் வடதேசத்துக்குப் புறப்பட்டுப்போயின; வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னாலே புறப்பட்டுப்போயின; புள்ளி புள்ளியான குதிரைகள் தென்தேசத்துக்குப் புறப்பட்டுப்போயின. சிவப்புக் குதிரைகளோ வென்றால் புறப்பட்டுப்போய், பூமியிலே சுற்றித்திரியும்படி கேட்டுக்கொண்டன. அவை பூமியிலே சுற்றித் திரிந்தன.

அப்போது "வடதேசத்துக்குப் புறப்பட்டுப் போனவைகள், வடதேசத்திலே என் கோபத்தைச் சாந்தி பண்ணிற்று" என்னும் சப்தத்தைச் சகரியா கேட்கிறார். (சக. 6:4-8) இந்தக் குதிரைகளை வானத்தினுடைய ஆவிகளாகவே பொருள்கூற வேண்டும். பூமியிலுள்ள தரிசனமான காரியங்கள் பரலோகத்திலுள்ள அதரிசனமான காரியங்களை வெளிப்படுத்துகின்றன. (ரோமர்1:20;2இராஜா2:11; 2இராஜா 6:14-17; வெளி. 19:11-21).

வெண்கலப் பர்வதங்கள்

இந்தப் பர்வதங்கள் பூமியைப்போல வானத்திலுள்ள கிரகங்களாக இருக்க வேண்டும். இவை வெண்கலத்தால் ஆனவை. பரலோகத்தில் வீதிகள் பொன்னாலும், வாசல்கள் முத்தாலும் செய்யப்பட்டிருக்கும். அஸ்திபாரங்களில் விலையுயர்ந்த கற்கள் போடப்படும். பரலோகத்தில் பொன்னுக்கும், வெள்ளிக்கும் குறைவிராது. அதுபோல இந்த இரண்டு பர்வதங்கள் முழுவதுமே வெண்கலமாக உள்ளன.(வெளி. 21:9-21) இந்த இரதங்களும், குதிரைகளும், பர்வதங்களும் எதற்கும் அடையாளமானவை அல்ல. இவை பிரத்தியட்சமானவை. இவை வானத்திற்கும், பூமிக்கும் பிரயாணம் மேற்கொள்ளும். எலியாவை வானத்திற்கு எடுத்துச் சென்றதும், (2இராஜா 2:11) எலிசாவைப்பாதுகாத்ததும்(2இராஜா 6:14-17) இதைப்போன்ற அக்கினி மயமான இரதங்களே ஆகும்.

(2) வானத்தினுடைய ஆவிகள் - வடதேசத்தில் தேவனுடைய நியாயத் தீர்ப்பை சாந்திபண்ணிற்று - (எரே 1:13-16; 4:6; 13:20; 25:9; எசே 26:7)

சக 6:4 நான் என்னோடே பேசின தூதனைநோக்கி: ஆண்டவனே, இவைகள் என்னவென்று கேட்டேன்.

சக 6:5 அந்தத் தூதன் எனக்குப் பிரதியுத்தரமாக: இவைகள் சர்வ லோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிற வருடைய சமுகத்தில் நின்று புறப்படுகிற வானத்தினுடைய நாலு ஆவிகள் என்றார்.

சக 6:6 ஒன்றில் பூட்டப்பட்டிருந்த கறுப்புகுதிரைகள் வடதேசத்துக்குப் புறப்பட்டுப்போயின; வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னாலே புறப்பட்டுப்போயின; புள்ளிபுள்ளியான குதிரைகள் தென்தேசத்துக்குப் புறப்பட்டுப் போயின.

6 அதிகாரம்

சக 6:7 சிவப்புக் குதிரைகளோவென்றால் புறப்பட்டுப் போய், பூமியிலே சுற்றித் திரியும்படி கேட்டுக்கொண்டன; அதற்கு அவர்; போய் பூமியில் சுற்றித்திரியுங்கள் என்றார்; அப்படியே பூமியிலே சுற்றித் திரிந்தன.

சக 6:8 பின்பு அவர் என்னைக் கூப்பிட்டு: பார், வடதேசத்துக்குப்புறப்பட்டுப் போனவைகள், வடதேசத்திலே என் கோபத்தைச் சாந்திபண்ணிற்று என்று என்னோடே சொன்னார்.

"கறுப்புகுதிரைகள்.....வெண்மையான குதிரைகள்.....புள்ளிபுள்ளியான குதிரைகள்" - குதிரைகளின் நிறங்கள் எதற்கும் அடையாளமானவையல்ல. பூமியிலுள்ள சிருஷ்டிகளில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுவதுபோல வானத்திலுள்ள சிருஷ்டிகளிலும் பல்வேறு வேறுபாடுகள் காணபடுகின்றன.

"என் கோபத்தைச் சாந்திபண்ணிற்று" - கர்த்தர் வடதேசத்தின்மீது தமது கோபத்தை ஊற்ற வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருந்தார். வடதேசத்துக்குப் புறப்பட்டுப் போனவைகள் கர்த்தருடைய கோபத்தை அந்தத் தேசத்தில் சாந்திபண்ணிற்று. பல வருஷங்களாகக் கர்த்தர் இஸ்ரவேல்மீது கோபமாக இருந்தார். அதன் பின்பு, அவருடைய கோபம் இஸ்ரவேலரின் சத்துருக்கள்மீது திரும்பிற்று. புறஜாதியார் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அளவை மீறிவிட்டார்கள். இதனால் புறஜாதியார் தண்டிக்கப்படும் காலம் வந்திருக்கிறது.

III. தீர்க்கதரிசனங்கள் - மீட்கப்பட்ட யூதாவை உற்சாகப்படுத்துவதற்கு செய்திகள் - (6:9-8:23)

1. அடையாளம்

(1) யோசுவாவின் தலையில் கிரீடம் வைக்கப்பட்டது

சக 6:9 பின்பு கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

சக 6:10 சிறையிருப்பின் மனுஷராகிய எல்தாயும், தொபியாவும், யெதாயாவும் பாபிலோனிலிருந்து வந்திருக்கும் அந்நாளிலே நீ போய், செப்பனியாவின் குமாரனாகிய யோசியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து,

சக 6:11 அங்கே அவர்கள் கையிலே வெள்ளியையும் பொன்னையும் வாங்கி, கிரீடங்களைச் செய்வித்து, யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய சிரசிலே வைத்து,

"சிறையிருப்பின் மனுஷர்" - சகரியா வெள்ளியையும், பொன்னையும் உருக்கி வேலை செய்யும் தொழிலாளிகளிடம் பேசுகிறார். இவர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் யோசுவாவிற்குக் கிரீடங்களைச் செய்கிறார்கள். (சக. 6:9-11). இந்தக் கிரீடங்கள் கர்த்தருடைய ஆலயத்தில் அவர்களுக்கு நினைப்பூட்டுதலாக இருக்கும். (சக. 6:14).

(2) மேசியா ஆயிர வருஷ ஆலயத்தைக் கட்டுவார் - அதில் ஆசாரியராகவும் இராஜாவாகவும் இருப்பார் - யோசுவாவும் தேவாலயம் செப்பனிடப் படுவதும் இதற்கு அடையாளம் - (எரே 40:1-43:7)

சக 6:12 அவனோடே சொல்ல வேண்டியது: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப்படும்; அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பிக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்.

சக 6:13 அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்; அவர் மகிமைபொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்; இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும்.

6 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 9

"அவனோடே சொல்லவேண்டியது: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,....................." (சக. 6:12-13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. இதோ, ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப்படும்; அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பிக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். (சக. 6:12); அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார் (சக. 6:13)

2. அவர் மகிமைபொருந்தினவராய் இருப்பார். (சக. 6:13).

3. தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்.

4. தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராய் இருப்பார்.

5. இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும்.

"அவருடைய நாமம் கிளை என்னப்படும்" - புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் கிறிஸ்து "மனுஷர்" என்று அழைக்கப்படுகிறார். (சக. 6:12; 1தீமோ. 2:5). அவர் "கிளை" எனவும் அழைக்கப்படுகிறார். (சக. 6:12; சக. 3:8; ஏசா 4:2; ஏசா 11:1; எரே 23:5; எரே 33:15).

"அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பிக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்." - இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலும், அவருடைய முதலாம் வருகையிலும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (ஏசா11:1; ஏசா 53:2; எரே 33:15). இயேசு கிறிஸ்துவின் இரண்டு வருகைகளும் இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அவருடைய இரண்டாம் வருகை இன்னும் நிறைவேறவில்லை.

ஆலயம் திரும்பக் கட்டப்படும்

ஆயிரம் வருஷத்து தேவாலயம் மறுபடியும் கட்டப்படுவது, பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த பங்கு, எருசலேம், மேசியாவின் ஆளுகை ஆகியவற்றை எசேக்கியேல் 9 அதிகாரங்களில் விளக்கிக் கூறியிருக்கிறார். (எசே 40:5-48:35) ஆயினும், இந்தத் தேவாலயத்தை யார் கட்டுவார் என்பதை எசேக்கியேல் வெளிப்படுத்தவில்லை. சகரியா இந்தச் சத்தியத்தை இங்கு தெளிவுபடுத்துகிறார். இயேசு கிறிஸ்து வருங்காலத்து நித்திய தேவாலயத்தைக் கட்டுவார். (சக. 6:12). இந்தத் தேவாலயம் அந்திக்கிறிஸ்துவின் நாளில் எருசலேமிலிருக்கும் யூதருடைய வருங்காலத்து தேவாலயம் அல்ல. அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்தை மூன்றரை வருஷங்களுக்குப் பிடிப்பான். ஏழாவது முத்திரையின்போது மிகப் பெரிய பூமியதிர்ச்சி உண்டாகும். அப்போது நகரம் பிளவுபடும். அதில் தேவாலயம் அழிக்கப் படும். (வெளி. 11:13; வெளி. 16:17-21) ஒலிவ மலைகளும், அப்போது முழுவதுமாக அகற்றப் படும். (சக. 14:1-5). இந்த வசனத்தில் கூறப் பட்டிருக்கும் கர்த்தருடைய ஆலயம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகக் கட்டப்படமாட்டாது. கிறிஸ்து இயேசு தமது இரண்டாம் வருகையின்போது பூமியிலுள்ள ராஜ்யங்களை ஆளுகை செய்வார். அப்போது இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். (சக. 6:12-13; வெளி. 11:15).

"அவர் மகிமைபொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்" - கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற இயேசு கிறிஸ்து மகிமை பொருந்தினவராய் இருப்பார். தம்முடைய நித்திய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார். அவர் ராஜாவாகவும், ஆசாரியராகவும் இருப்பார். இது தாவீதின் சிங்காசனமாக இருக்கும்.நித்திய மகிமைக்காகவும், நித்திய வல்லமைக்காகவும் தாவீதின் ராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும். (ஏசா 9:6-7; ஓசி 3:4-5; ஆமோ 9:11-15; லூக்கா 1:32-33; அப் 15:13-18).

6 அதிகாரம்

"தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்" - கிறிஸ்துவின் ராஜரீகத்தையும், அவருடைய ஆசாரியத்துவத்தையும் இந்த வசனம் உறுதி பண்ணுகிறது. இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையில் நித்திய ஆசாரியராக இருப்பார். (சங் 110:4; எபி 5:6,10; எபி 6:20; எபி 7:1-21). இயேசு கிறிஸ்துவிற்கு மூன்று ஊழியங்கள் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. தீர்க்கதரிசி (உபா. 18:15-18) ஆசாரியர் (சங் 110:4) ராஜா (சங் 2:6; ஏசா 9:6-7; மீகா 5:2; மத் 2:2; மத் 21:5; மத் 25:31,34,40; லூக்கா 1:32-33; வெளி. 11:15; வெளி. 20:1-10).

"இவ்விரண்டின் நடுவாக" - ஆசாரிய ஊழியமும், ராஜரிக ஊழியமும் இயேசு கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு ஊழியங்களும் சமநிலையில் உள்ளன. இஸ்ரவேலின் ஆசாரியத்துவமும், ராஜரிகமும் இயேசு கிறிஸ்துவில் இணைந்திருக்கிறது. இவ்விரண்டு ஊழியங்களையும் வெவ்வேறு நபர்கள் செய்யும் போது அவர்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படக்கூடாது.

(3) தேவன் யூதாவிற்கு உண்மையுள்ளவராக இருந்ததற்கு கிரீடங்கள் நினைப்பூட்டுதலாக வைக்கப்பட்டுள்ளன

சக 6:14 இந்தக் கிரீடங்களோவென்றால், கர்த்தருடைய ஆலயத்திலே, ஏலேமுக்கும், தொபியாவுக்கும், யெதாயாவுக்கும், செப்பனியாவின் குமாரனாகிய ஏனுக்கும் நினைப்பூட்டுதலுக்கென்று வைக்கப்படுவதாக.

"கர்த்தருடைய ஆலயத்திலே...... நினைப்பூட்டுதலுக்கென்றுவைக்கப்படுவதாக" - கிரீடங்கள் நினைப்பூட்டுதலுக்கென்று வைக்கப்பட்டுள்ளன. மேசியாவின் மூலமாக இஸ்ரவேல் ராஜ்யம் மறுபடியும் திரும்பக் கட்டப்பட்டதையும், இஸ்ரவேலின் ஆசாரியத்துவம் மறுபடியும் ஸ்தாபிக்கப் பட்டதையும் நினைப்பூட்டுவதற்காக இவை கர்த்தருடைய ஆலயத்திலே வைக்கப்பட்டுள்ளன.

(4) சிறையிலிருந்தவர்கள் அநேகர் வந்து செருபாபேலுக்கு கட்டுவதில் உதவி புரிவார்கள்

சக 6:15 தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்கள்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிந்துகொள்வீர்கள்; நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக்கேட்டு நடந்தீர்களானால் இது நிறைவேறும் என்று சொல் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 10

"தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்கள்........" (சக. 6:15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தைக் கூட இருந்து கட்டுவார்கள் (சக. 6:15)
2. அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிந்துகொள்வீர்கள்.
3. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக்கேட்டு நடந்தீர்களானால் இது நிறைவேறும்.

7 அதிகாரம்

2. உபவாசங்களைப் பற்றி விசாரிப்பு - (ஏசா 58)

சக 7:1 தரியு ராஜா அரசாண்ட நாலாம் வருஷம், கிஸ்லே என்னும் ஒன்பதாம் மாதம், நாலாந்தேதியிலே, சகரியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

சக 7:2 கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும்,

சக 7:3 நாங்கள் இத்தனை வருஷம்வரையிலே செய்ததுபோல ஐந்தாம் மாதத்திலே அழுது ஒடுக்கத்திலிருக்க வேண்டுமோ என்று சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலிருக்கும் ஆசாரியரிடத்திலும் தீர்க்கதரிசிகளிடத்திலும் கேட்கவும், சரேத்சேரும் ரெகெம்மெலேகும் அவனுடைய மனுஷரும் தேவனுடைய ஆலயத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

"தரியு ராஜா அரசாண்ட நாலாம் வருஷம்" - சகரியா தன் ஊழியத்தை ஆரம்பித்து இரண்டு வருஷங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. உபவாசங்களைக் குறித்து கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் சிலர் சகரியாவைச் சந்திக்க வருகிறார்கள். (சக. 7:1-3). இந்த இரண்டு வருஷக்காலங்களில் சகரியா பத்துத் தரிசனங்களைக் கண்டிருக்கிறார். (சக. 1:1-6:8)

3. தேவனுடைய பதில்

(1) அவர்களுடைய உபவாசம் பெயரளவில் இருந்தது - அவர்கள் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்க வேண்டும்

சக 7:4 அப்பொழுது சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

சக 7:5 நீ தேசத்தின் எல்லா ஜனத்தோடும் ஆசாரியர்களோடும் சொல்லவேண்டியது என்னவென்றால், நீங்கள் இந்த எழுபது வருஷமாக ஐந்தாம் மாதத்திலும் ஏழாம் மாதத்திலும் உபவாசம்பண்ணி துக்கங்கொண்டாடின போது நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம் பண்ணினீர்கள்?

சக 7:6 நீங்கள் புசிக்கிறபோதும் குடிக்கிறபோதும் உங்களுக்கென்றல்லவா புசிக்கிறீர்கள்? உங்களுக்கென்றல்லவாகுடிக்கிறீர்கள்?

சக 7:7 எருசலேமும் அதைச் சுற்றிலும் இருந்த பட்டணங்களும் குடிநிறைந்து சுகமாயிருந்த காலத்திலும், தெற்குநாடும் சமபூமியும் குடியேறியிருந்த காலத்திலும் முன்னிருந்த தீர்க்கதரிசிகளைக் கொண்டு கர்த்தர் கூறின வார்த்தைகள் இவைகள் அல்லவோ என்று சொல் என்றார்.

"அப்பொழுது சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை எனக்கு உண்டாகி" - யூதர்கள் பல வருஷங்களாக உபவாச நாட்களை ஆசரித்து வருகிறார்கள். அதைக் குறித்து சகரியாவிற்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. அவர்கள் மாய்மாலமாக ஜீவித்து உபவாசம் பண்ணுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கவில்லை. (சக. 7:5-14). இந்தப் பகுதியில் சகரியா எதையும் முன்னறிவிக்க வில்லை. கர்த்தருடைய வார்த்தை முன்னறிவிப்பாக வரவில்லை. ஆயினும் அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் என்பதைக் குறித்தும், அவர்களுடைய அன்றாட ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதைக் குறித்தும் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. (1கொரி 14:3).

"நீ தேசத்தின் எல்லா ஜனத்தோடும் ஆசாரியர்களோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்" - தேசத்தின் ஜனங்களும், ஆசாரியர்களும் மாய்மாலமாக ஜீவிக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு உபவாசம் பண்ண வேண்டுமோ அவ்வாறு அவர்கள் உபவாசம் பண்ணவில்லை. அவர்களுடைய சிறையிருப்பின் 70 வருஷங்களாக அவர்கள் கர்த்தருக்காக உபவாசம் பண்ணாமல், தங்களுக்காகவே பண்ணியிருக்கிறார்கள். (சக. 7:6)

7 அதிகாரம்

“இந்த எழுபது வருஷமாக” - அவர்கள் பாபிலோனில் சிறையிருப்பிலிருந்த 70 வருஷமாக. (எரே 25:11-14; தானி 9:2).

“ஐந்தாம் மாதம்” - எருசலேமின் அழிவை நினைவுகூரும் பொருட்டு உபவாசம் பண்ணினார்கள். (எரே 52:12-13).

“ஏழாம் மாதம்” - இஸ்மவேல் கெதலியாவைக் கொலைபண்ணியதை நினைவுகூரும் பொருட்டு உபவாசம் பண்ணினார்கள். (எரே 40:8; எரே 41:1-3,15-18)

“நீங்கள் எனக்கென்று தானா உபவாசம் பண்ணினீர்கள்?” - கர்த்தர் கட்டளையிட்ட பிரகாரம் அவர்கள் ஒரு உபவாசமும் பண்ணவில்லை. எழுபது வருஷக்காலங்களில் யூதர்கள் புதிய புதிய காரியங்களுக்காக உபவாச நாட்களைத் தாங்களே நியமித்துக் கொண்டார்கள். எருசலேமின் அழிவிற்காகவும், அவர்களுக்கு வந்த துன்பங்களின் நிமித்தமாகவும் அவர்கள் உபவாசம் பண்ணினார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய நாமமகிமைக்காக ஒரு உபவாசமும் பண்ணவில்லை.

“முன்னிருந்த தீர்க்கதரிசிகள்” - சிறையிருப்புக்கு முன்பு கர்த்தர் அனுப்பிய தீர்க்கதரிசிகள். இவர்கள் யூதாவின் புத்திரரையும், இஸ்ரவேலின் புத்திரரையும் எச்சரித்தார்கள். கர்த்தருக்குக் கீழ்ப்படியுமாறு வலியுறுத்தினார்கள். ஆனால் அவர்களோ தீர்க்கதரிசிகள் மூலமாக அறிவிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க வில்லை. அதன் விளைவாக அவர்கள்மீது சாபம் வந்தது. அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு உட்பட்டார்கள்.

(2) அவர்களுடைய ஜெபங்கள் ஏன் கேட்கப்படவில்லை? - அவர்களுக்கு ஏன் நியாயத் தீர்ப்பு வந்தது

சக 7:8 பின்பு கர்த்தருடைய வார்த்தை சகரியாவுக்கு உண்டாகி, அவர்:

சக 7:9 சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீங்கள் உண்மையாய் நியாயந்தீர்த்து, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும்செய்து,

சக 7:10 விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் பரதேசியையும் சிறுமையானவனையும் ஒடுக்காமலும், உங்களில் ஒருவனும் தன் சகோதரனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும் இருங்கள் என்றார்.

சக 7:11 அவர்களோ கவனிக்க மனதில்லாமல், தங்கள் தோளை முரட்டுத்தனமாய் விலக்கி, கேளாத படிக்குத் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டார்கள்.

சக 7:12 வேதத்தையும் சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஆவியின் மூலமாய் முந்தின தீர்க்கதரிசிகளைக் கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைகளையும் கேளாதபடிக்குத் தங்கள் இருதயத்தை வைரமாக்கினார்கள்; ஆகையால் மகா கடுங்கோபம் சேனைகளின் கர்த்தரிடத்திலிருந்து உண்டாயிற்று.

சக 7:13 ஆதலால் நான் கூப்பிட்டபோது, அவர்கள் எப்படி கேளாமற்போனார்களோ, அப்படியே அவர்கள் கூப்பிட்டபோது நானும் கேளாமலிருந்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 7:14 அவர்கள் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைப் பறக்கடித்தேன்; அதினால் அவர்கள் பின்வைத்துப்போன தேசம் போக்குவரத் தில்லாமல் பாழாய்ப் போயிற்று; அவர்கள் இன்பமான தேசத்தைப் பாழாய்ப் போகப் பண்ணினார்கள் என்றார்.

“பின்பு கர்த்தருடைய வார்த்தை சகரியாவுக்கு உண்டாகி” - சக 7 ஆம் அதிகாரத்தில் இரண்டாம் முறையாகக் கர்த்தருடைய செய்தி சகரியாவிற்கு உண்டாயிருக்கிறது. (சக. 7:4).

சகரியா - தொகுப்புரை

7 அதிகாரம்

முன்னிருந்த சந்ததிக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளை

1. நீங்கள் உண்மையாய் நியாயந்தீருங்கள். *(சக. 7:9)*
2. அவனவன் தன்தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும்செய்யுங்கள்.
3. விதவையை ஒடுக்காதிருங்கள். *(சக. 7:10)*
4. திக்கற்ற பிள்ளையை ஒடுக்காதிருங்கள்.
5. பரதேசியை ஒடுக்காதிருங்கள்.
6. சிறுமையானவனை ஒடுக்காதிருங்கள்.
7. ஒருவனும் தன் சகோதரனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமல் இருங்கள்.

முன்னிருந்த சந்ததியாரின் கலகம்

1. அவர்களோ கவனிக்க மனதில்லாமல் இருந்தார்கள். *(சக. 7:11)*.
2. தங்கள் தோளை முரட்டுத்தனமாய் விலக்கினார்கள்.
3. பிரமாணத்தைக் கேளாதபடிக்குத் தங்கள் செவிகளை அடைத்துக்கொண்டார்கள்.
4. வேதத்தையும் சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஆவியின் மூலமாய் முந்தின தீர்க்கதரிசிகளைக்கொண்டு சொல்லி யனுப்பின வார்த்தைகளையும் கேளாத படிக்குத் தங்கள் இருதயத்தை வைரமாக்கினார்கள் *(சக. 7:12)*.

முன்னிருந்த சந்ததியார் மீது நியாயத்தீர்ப்பு

1. மகா கடுங்கோபம் சேனைகளின் கர்த்தரிடத்திலிருந்து உண்டாயிற்று. *(சக. 7:12)*.
2. அவர்கள் கூப்பிட்டபோது கர்த்தரும் கேளாமலிருந்தார். *(சக. 7:13)*
3. அவர்கள் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைப் பறக்கடித்தார். *(சக. 7:14)*.
4. அவர்கள் பின்வைத்துப்போன தேசம் போக்குவரத்தில்லாமல் பாழாய்ப் போயிற்று.

8 அதிகாரம்

(3) தேவனுடைய நோக்கம் இன்னும் மாறவில்லை - இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்படும்

சக 8:1 சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை உண்டாகி, அவர்:

சக 8:2 நான் சீயோனுக்காக கடும் வைராக்கியங்கொண்டேன்; அதற்காக மகா உக்கிரமான வைராக்கியங் கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 8:3 நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம் பண்ணுவேன்; எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சக 8:4 திரும்பவும் எருசலேமின் வீதிகளில் முதிர்வயதினாலே தங்கள் கைகளில் கோலைப்பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள்.

சக 8:5 நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 8:6 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அது இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கு இந்நாட்களில் ஆச்சரியமாயிருந்தாலும், என் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்குமோ என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 8:7 இதோ, கிழக்குதேசத்திலும் தெற்கு தேசத்திலுமிருந்து என் ஜனங்களை நான் இரட்சித்து,

சக 8:8 அவர்களை அழைத்துக்கொண்டு வருவேன்; அவர்கள் எருசலேமின் நடுவிலே குடியிருப்பார்கள்; அவர்கள் எனக்கு உண்மையும் நீதியுமான ஜனமாயிருப்பார்கள், நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை" - சக. 1:1-6:8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்து தரிசனங்களைக் கண்ட பின்பு நான்காம் முறையாகக் கர்த்தரின் வார்த்தை சகரியாவிற்கு உண்டாயிற்று. (சக. 6:9; சக. 7:4,8; சக. 8:1).

தீர்க்கதரிசன எண் - 11

"நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்............"(சக. 8:3-8) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன் (சக. 8:3)
2. எருசலேம் சத்திய நகரம் என்று அழைக்கப்படும்.
3. சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்று அழைக்கப்படும்.
4. எருசலேமின் வீதிகளில் முதிர் வயதினாலே தங்கள் கைகளில் கோலைப்பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும்குடியிருப்பார்கள்.(சக. 8:4).
5. நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும் (சக. 8:5).
6. அது இந்நாட்களில் இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கும், கர்த்தரின் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்கும். (சக. 8:6)
7. அவர்களை அழைத்துக்கொண்டு வருவேன்; அவர்கள் எருசலேமின் நடுவிலே குடியிருப்பார்கள் (சக. 8:8).

8 அதிகாரம்

8. அவர்கள் எனக்கு உண்மையும் நீதியுமான ஜனமாயிருப்பார்கள், நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன்.

"நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்" - இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்து இஸ்ரவேலின் ராஜாவாக எருசலேமில் வாசம் பண்ணுவதற்குச் சீயோனுக்குத் திரும்பி வருவார். (சக. 14:1-21; ஏசா 9:6-7; எசே 43:7; எசே 48:35; லூக்கா 1:32-33; ரோமர் 11:25-29; வெளி. 11:15; வெளி. 20:1-10).

"எருசலேமின் வீதிகளில்........ கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள்" - எருசலேம் மறுபடியும் புதுப்பிக்கப்படும். ஆயிரம் வருஷ அரசாட்சியில் மனுஷருடைய ஆயுசு நாள் அதிகரிக்கும். மேசியாவின்கீழ் இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் சமாதானமும், பாதுகாப்பும் உண்டாயிருக்கும். பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். (சக. 8:4-5).

"கிழவரும் கிழவிகளும்" - இந்த வாக்கியம் நீண்ட ஆயுசிற்கு அடையாளமாகும். எருசலேமில் வாழவேண்டுமென்றால், கோலைப் பிடித்து நடக்கிற முதியவராக இருக்க வேண்டுமென்பது இந்த வாக்கியத்தின் பொருளல்ல. ஜனங்கள் மத்தியில் வியாதியிராது. மனுஷர் பாவம் செய்யமாட்டார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணமாட்டார்கள். (சக. 8:4-5; ஏசா 33:24; ஏசா 35:5-7; ஏசா 65:20-25; மத் 25:34,46). கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணாதவர்களின் ஆயுசு நாள் அதிகரிக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு இவர்கள் புதிய பூமியில் பிரவேசிப்பார்கள். அங்கு மரணமோ, கண்ணீரோ, வேதனையோ, பாடுகளோ, சாபமோ இராது. (வெளி. 21:2-7; வெளி. 22:1-5)

"ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் மனுஷர் விவாகம் பண்ணுவதும், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதும் தொடரும். (ஏசா 65:20-25; மத் 25:46). மனுஷர் பாவத்தில் விழுவதற்கு முன்பாகக் கர்த்தர் அவர்களைப் பலுகிப் பெருகுமாறு கூறினார். (ஆதி 1:26-29) மனுஷருடைய பாவத்தினால் கர்த்தருடைய திட்டம் நிறைவேறுவதில் தாமதமாயிற்று. புதிய பூமியில் மனுஷரைக் குறித்த கர்த்தருடைய திட்டம் பரிபூரணமாக நிறைவேறும்.

"கிழக்குதேசத்திலும் தெற்கு தேசத்திலுமிருந்து என் ஜனங்களை நான் இரட்சித்து" - எல்லா தேசங்களிலுமிருந்தும் இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தர் மறுபடியுமாகக் கூட்டிச் சேர்ப்பார். அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களைத் திரும்பவும் அழைத்து வந்து ஒரு தேசமாக ஸ்தாபிப்பார். (சக. 8:7-8; ஏசா 11:10-12) அப்போது அவர்கள் கர்த்தருக்கு உண்மையும் நீதியுமான ஜனமாயிருப்பார்கள். (சக. 8:8)

(4) மீட்கப்பட்ட யூதாவிற்கு நிபந்தனையுள்ள ஆசீர்வாதங்கள் - (ஏசா 1:19)

சக 8:9 சேனைகளுடைய கர்த்தரின் வீடாகிய ஆலயம் கட்டப்படும்படிக்கு அதின் அஸ்திபாரங்கள் போடப்பட்ட நாள் முதற்கொண்டிருக்கிற தீர்க்கதரிசிகளின் வாயினால் இந்த வார்த்தைகளை இந்நாட்களில் கேட்டு வருகிறவர்களே, உங்கள் கைகள் திடப்படக்கடவது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 8:10 இந்நாட்களுக்கு முன்னே மனுஷனுடைய வேலையால் பலனுமில்லை, மிருக ஜீவனுடைய வேலையால் பலனுமில்லை; போகிறவனுக்கும் வருகிறவனுக்கும் நெருக்கிடையினிமித்தம் சமாதானமுமில்லை; எல்லா மனுஷரையும் ஒருவரையொருவர் விரோதிக்கச் செய்தேன்.

சக 8:11 இப்போதோ இந்த ஜனத்தில் மீதியானவர்களுக்கு நான் முந்தின நாட்களில் இருந்ததுபோல இருக்க மாட்டேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

8 அதிகாரம்

சக 8:12 விதைப்புச் சமாதானமுள்ளதாயிருக்கும்; திராட்சச் செடி தன் கனியைத் தரும்;பூமி தன் பலனைத் தரும்; வானம் தன் பனியைத் தரும்; இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இவையெல்லாம் சுதந்தரிக்கக் கட்டளையிடுவேன்.

சக 8:13 சம்பவிப்பதென்னவென்றால்: யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே,நீங்கள் புற ஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்தது போலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது.

சக 8:14 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் உங்கள் பிதாக்கள் எனக்குக் கோபமூட்டினபோது நான் உங்களை தண்டிக்க நினைத்து, மனம் மாறாமல் இருந்ததுபோல,

சக 8:15 இந்நாட்களில் எருசலேமுக்கும் யூதாவுக்கும் நன்மைசெய்யும்படித் திரும்ப நினைத்தேன்; பயப்படாதேயுங்கள்.

சக 8:16 நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால்: அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்.

சக 8:17 ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப் படாமலும் இருங்கள்; இவைகளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கர்த்தரின் வீடாகிய ஆலயம் கட்டப் படும்படிக்கு அதின் அஸ்திபாரங்கள் போடப்பட்ட நாள்" - (ஆகாய் 1:6-11; ஆகாய் 2:10-19)

"தீர்க்கதரிசிகள்" - தேவாலயம் திரும்பக் கட்டப்பட்ட காலத்தில் ஆகாய், சகரியா, மல்கியா ஆகியோர் தீர்க்கதரிசிகளாக ஊழியம் செய்து வந்தார்கள்.

"உங்கள் கைகள் திடப்படக்கடவது" - தற்போதுள்ள சந்ததியார் திடப்பட வேண்டுமென்றும், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் கர்த்தர் வலியுறுத்துகிறார். தேவாலயத்தைக் கட்டுகிற வேலையில் இஸ்ரவேல் ஜனங்களை இந்தத் தீர்க்கதரிசிகள் உற்சாகப் படுத்துகிறார்கள். (சக. 8:9-17).

இந்நாட்களுக்கு முன்னேயிருந்த பொதுவான சூழ்நிலைகள்

1. மனுஷனுடைய வேலையால் பலனில்லை.
2. மிருக ஜீவனுடைய வேலையால் பலனில்லை.
3. போகிறவனுக்கும் வருகிறவனுக்கும் நெருக்கிடையினிமித்தம் சமாதானமில்லை.

தீர்க்கதரிசன எண் - 12

"இப்போதோ இந்த ஜனத்தில் மீதியானவர்களுக்கு நான் முந்தின நாட்களில் இருந்ததுபோல இருக்கமாட்டேன்........" (சக. 8:11-13) இந்தத் தீர்க்தகரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. இந்த ஜனத்தில் மீதியானவர்களுக்கு நான் முந்தின நாட்களில் இருந்தது போல இருக்கமாட்டேன் (சக. 8:11).
2. விதைப்பு சமாதானமுள்ளதாயிருக்கும் (சக. 8:12).
3. திராட்சச்செடி தன் கனியைத் தரும்.
4. பூமி தன் பலனைத் தரும்.
5. வானம் தன் பனியைத் தரும்.

8 அதிகாரம்

6. இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிப்பார்கள்.

7. நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே ஆசீர்வாதமாகஇருப்பீர்கள்.(சக. 8:13).

8. புறஜாதிகளிடத்திலிருந்து நான் உங்களை இரட்சிப்பேன்.

தேவன் வாக்குப்பண்ணியிருக்கும் ஆசீர்வாதங்கள்

1. செழிப்பு (சக. 8:12)

2. கனியைத் தரும் திராட்சச்செடி

3. பலனைத் தரும் பூமி

4. பனியைத் தரும் வானம்.

5. இஸ்ரவேல் ஜனத்தில் மீதியானவர்கள் இவற்றைச் சுதந்தரித்து அனுபவிப்பார்கள்.

6. புறஜாதியாரிடமிருந்து இரட்சிப்பு (சக. 8:13).

7. மனுஷர் மத்தியில் யூதர்கள் ஆசீர்வாதமாக இருப்பார்கள்.

"யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே" - பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் இருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலரும், ஆதித்திருச்சபையாரும் இவர்களை யூதர்கள் என்று பொதுவாக அழைத்தார்கள். (அப் 13:16)

"உங்கள் பிதாக்கள் எனக்குக் கோபமூட்டினபோது நான் உங்களை தண்டிக்க நினைத்து" - தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரம் கர்த்தர் இஸ்ரவேலின் முந்திய சந்ததியாரைத் தண்டிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருந்தார். இந்தத் தண்டனை அவர்களுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தம் வந்தது. ஆனால் புதிய சந்ததியாரோ கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஆகையினால் இஸ்ரவேலின் புதிய சந்ததியாருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கர்த்தர் தீர்மானம் பண்ணியிருக்கிறார். (சக. 8:14-15).

புதிய சந்ததியாருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள். (சக. 8:16).

2. உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கு ஏற்க நியாயந்தீருங்கள்.

3. உங்கள் வாசல்களில் சமாதானத்துக்கு ஏற்க நியாயந்தீருங்கள்.

4. ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமல் இருங்கள். (சக. 8:17).

5. பொய்யாணையின்மேல் பிரியப்படாமல் இருங்கள்.

6. சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் (சக. 8:19)

(5) பதிலுரை - (7:1-3)

சக 8:18 சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

சக 8:19 நாலாம் மாதத்தின் உபவாசமும், ஐந்தாம் மாதத்தின் உபவாசமும், ஏழாம் மாதத்தின் உபவாசமும், பத்தாம் மாதத்தின் உபவாசமும், யூதா வம்சத்தாருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் நல்ல பண்டிகைகளாகவும் மாறிப்போகும்; ஆகையால் சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர்சொல்லுகிறார்.

"சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை" - சக. 1:1-6:8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்து தரிசனங்களுக்குப் பின்பு சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை ஐந்தாம் முறையாகச் சகரியாவிற்கு உண்டாயிற்று. (சக. 8:1).

"யூதா வம்சத்தார்" - இஸ்ரவேலின் எல்லா வம்சத்தாரையும் குறிக்கும் வார்த்தை. (ஏசா 11:10-12)

8 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 13

"சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்..........." (சக. 8:19-23) சக. 8:19 ஆவது வசனம் நிறைவேறிற்று. சக. 8:20-23 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நாலாம் மாதத்தின் உபவாசமும், ஐந்தாம் மாதத்தின் உபவாசமும், ஏழாம் மாதத்தின் உபவாசமும், பத்தாம் மாதத்தின் உபவாசமும், யூதா வம்சத்தாருக்கு மகிழ்ச்சியாக மாறிப்போகும். (சக. 8:19)

2. அவை சந்தோஷமாகவும் நல்ல பண்டிகைகளாகவும் மாறிப்போகும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. இன்னும் ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள். (சக. 8:20).

2. அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள். (சக. 8:22).

3. அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துகொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப் பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள். (சக. 8:23).

இஸ்ரவேலின் உபவாசங்கள்

1. நாலாம் மாதத்தின் உபவாசம் - நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தை அழித்த நாள். (எரே 52:6-7).

2. ஐந்தாம் மாதத்தின் உபவாசம் - தேவாலயமும், எருசலேமிலுள்ள வீடுகளும் சுட்டெரிக்கப்பட்ட நாள். (எரே 52:12-13).

3. ஏழாம் மாதத்தின் உபவாசம் - கெதலியா கொலைபண்ணப்பட்ட நாள். (எரே 40:8; எரே 41:1-3,15-18)

4. பத்தாம் மாதத்தின் உபவாசம் - பாபிலோன் ராஜா எருசலேமிற்கு விரோதமாகத் தனது முகத்தைத் திருப்பிய நாள். (எசே 24:1-2).

இந்த உபவாசங்கள் அனைத்துமே இஸ்ரவேல் புத்திரருக்குத் துன்பம் வரும்போது ஆசரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய மகிமைக்காகவோ, அவரைச் சேவிப்பதற்காகவோ இவர்கள் உபவாசம் பண்ணவில்லை. (சக. 7:5-6). எருசலேம் மறுபடியும் புதுப்பிக்கப்படும்போது இந்த உபவாசங்களெல்லாம் சந்தோஷமாக மாறும். கர்த்தருடைய நாளில் மேசியாவின் ஆசீர்வாதம் இஸ்ரவேல் புத்திரரோடு தங்கியிருக்கும்.

(6) முழு உலகத்திற்கும் எருசலேம் ஆவிக்குரிய மையமாக இருக்கும்

சக 8:20 இன்னும் ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சக 8:21 ஒரு பட்டணத்தின் குடிகள் மறுபட்டணத்தின் குடிகளிடத்தில்போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்துப்போவோம் வாருங்கள்; நாங்களும் போவோம் வாருங்கள்; என்று சொல்லுவார்கள்.

சக 8:22 அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத்தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்.

8 அதிகாரம்

"இன்னும்"- யூதாவையும், எருசலேமையும் கர்த்தர் முழுமையாக ஆசீர்வதிப்பதற்கு அவர்கள் இன்னும் ஆயத்தமாக இல்லை. மற்றக் கோத்திரத்தாரை யூதா கோத்திரம் ஆளுகை செய்யும்.(ஆதி 49:10) மேசியாவின் காலத்தில் எருசலேம் நகரம் மார்க்கம், அரசியல், வியாபாரம், நாகரிகம் ஆகிய அனைத்திற்கும் மையஸ்தலமாக விளங்கும். மேசியா எருசலேமைத் தமது தலைநகரமாக வைத்து, நித்திய காலமாக ஆளுகை செய்வார்.(சக. 8:20-22; சக. 14:16-21; ஏசா 2:2-4).

"ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள்" - சேனைகளின் கர்த்தராகிய மேசியாவை ஆராதிப்பதற்காகவும், கூடாரங்களின் பண்டிகையை ஆசரிப்பதற்காகவும் ஜனங்கள் எருசலேமிற்கு வருவார்கள். (சக. 8:20-22; சக. 14:16-21; ஏசா 2:2-4)

எல்லா தேசத்தாரும் செய்யக்கூடிய காரியங்கள்

1. எருசலேமில் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணுதல். (சக. 8:21-22;சக. 14:16-21; ஏசா 2:2-4).
2. கர்த்தரைத் தேடுதல் (சக. 8:21-22).

இவ்விரண்டு காரியங்களும் பூமியில் மனுஷர் மத்தியில் காணப்பட வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். ஆனால் மனுஷனோ கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணி தன்னுடைய பாவத்தில் விழுந்துவிடுகிறான். ஆயிரம் வருஷ அரசாட்சியில்கூட ஒருசிலர் கர்த்தரை ஆராதிக்கமாட்டார்கள். ஆகையினால் கர்த்தர் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் சாத்தானைக் கட்டவிழ்த்துவிடுவார். ஜனங்களை வஞ்சிப்பதற்குச் சாத்தானுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும். பூமியை அவன் மறுபடியும் சுதந்தரிப்பதற்கு முயற்சி பண்ணுவான். தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்குப் பூமியின் ராஜ்யங்களை வஞ்சித்து தன் வசமாக்கிக் கொள்வான். ஆனால் அவர்களுடைய எண்ணம் நிறைவேறாது. கர்த்தர் அவர்களை அழிப்பார். (வெளி. 20:7-10). ஆயிரம் வருஷ அரசாட்சியில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியவர்கள் அனைவரும் புதிய பூமியில் பிரவேசிப்பார்கள். இந்தப் பூமியில் மனுஷன் பாவமே செய்யவில்லையென்றால் அவனுக்கு எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் தடை படாமல் வந்திருக்குமோ, அப்படிப்பட்ட ஆசீர் வாதங்களெல்லாம்புதிய பூமியில் மனுஷருக்கு வரும். (ஏசா 66:22-24; 1கொரி. 15:24-28; எபே. 1:10; வெளி. 21:3-7; வெளி. 22:1-5).

(7) யூதர்கள் தேசங்களுக்கு இன்னும் நற்செய்தி அறிவிக்க வேண்டும்

> சக 8:23 அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகியபுறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துகொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக் கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

"அந்நாட்களில்" - மேசியா இந்தப் பூமியில் ஆளுகை செய்யும் நாட்களில். பூமியின் எல்லாப் பாகத்தில் இருக்கிறவர் களுக்கும் மேசியாவின் ஆளுகையைப் பற்றித் தெரிந்திருக்கும். சக 8:23 ஆவது வசனத்தில் பத்து மனுஷரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பத்து என்னும் எண்ணிற்கு விசேஷித்த முக்கியத்துவம் எதுவுமில்லை. கர்த்தர் எருசலேமில் உண்மையாகவே ஆட்சி புரிகிறாரா என்று பூமியிலுள்ள எல்லா தேசத்தாரும் விசாரிப் பார்கள். (சக. 8:23;சக. 14:16-21;ஏசா 2:2-4; மீகா 4). கர்த்தருடைய ஆளுகையைப் பற்றிய செய்தி பூமியிலுள்ள எல்லா ஜாதியாருக்கும் தெரிவதற்குச் சிறிது காலமாகும். பூமியிலுள்ளராஜாக்கள்மாற்றப்பட்டிருப்பார்கள். கிறிஸ்துவும், தாவீதும், அப்போஸ்தலரும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும், பூமியை ஆளுகை செய்வார்கள். (சக. 14:1-21; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி. 11:15; வெளி.20:1-10). ஆயிரம் வருஷ அரசாட்சியில் கர்த்தருக்கு விரோதமாக எழும்பிய கலகங் களெல்லாம் ஒடுக்கப்படும். கிறிஸ்துவின் ஆளுகையின் போது சமாதானமும், சந்தோஷமும் மனுஷருக்கு உண்டாயிருக்கும். கர்த்தர் நீடிய பொறுமையோடு ஆளுகை செய்வார். எல்லாக் கலகங்களும் அழிக்கப் பட்டு கர்த்தருடைய திட்டம் பூரணமாக நிறைவேறும்.(ஏசா 65:20; 1கொரி. 15:24-28; எபே. 1:10; வெளி. 11:15; வெளி. 20:1-10).

9 அதிகாரம்

IV. இஸ்ரவேலுக்காக முதலாவது பாரம் -(9:1-11:17 ஏசா 13:1;நாகூ 1:1)

1. விரோதிகளிடமிருந்து மீட்பு

சக 9:1 ஆதிராக் தேசத்துக்கு விரோதமானதும், தமஸ்குவின்மேல் வந்து தங்குவதுமான கர்த்தருடைய வார்த்தையாகிய பாரம்; மனுஷரின் கண்களும் இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களின் கண்களும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கும்.

சக 9:2 ஆமாத்தும், மிகவும் ஞானமுள்ள தீருவும் சீதோனும் அதின் எல்லைக்குள்ளாயிருக்கும்.

சக 9:3 தீரு தனக்கு அரணைக்கட்டி, தூளைப்போல் வெள்ளியையும், வீதிகளின் சேற்றைப்போல் பசும்பொன்னையும் சேர்த்துவைத்தது.

சக 9:4 இதோ, ஆண்டவர் அதைத் தள்ளிவிட்டு, சமுத்திரத்தில் அதின் பலத்தை முறித்துப்போடுவார்; அது அக்கினிக்கு இரையாகும்.

சக 9:5 அஸ்கலோன் அதைக் கண்டு பயப்படும், காத்சாவும் அதைக்கண்டு மிகவும் துக்கிக்கும், எக்ரோனும் தன் நம்பிக்கை அற்றுப்போனபடியால் மிகவும் பிரலாபிக்கும்; காத்சாவில் ராஜா அழிந்துபோவான்; அஸ்கலோன் குடியற்றிருக்கும்.

சக 9:6 அஸ்தோத்தில் வேசிப் பிள்ளைகள்வாசம்பண்ணுவார்கள்;நான் பெலிஸ்தரின் கர்வத்தை அழிப்பேன்.

சக 9:7 அவனுடைய இரத்தத்தை அவன் வாயிலிருந்தும், அவனுடைய அருவருப்புகளை அவன் பல்லுகளின் நடுவிலிருந்தும் நீக்கிப்போடுவேன்; அவனோ நம்முடைய தேவனுக்கென்று மீதியாக வைக்கப்பட்டு, யூதாவிலே பிரபுவைப்போல இருப்பான்; எக்ரோன் எபூசியனைப்போல இருப்பான்.

சக 9:8 சேனையானது புறப்படும்போதும், திரும்பி வரும்போதும், என் ஆலயம் காக்கப்படும்படி அதைச்சுற்றிலும் பாளயம் போடுவேன்; இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்துவருவதில்லை; அதை என் கண்களினாலே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

தீர்க்கதரிசன எண் - 14

"கர்த்தருடைய வார்த்தையாகிய பாரம்......" (சக. 9:1-17) சக. 9:9 ஆவது வசனம் நிறைவேறிற்று. சக. 9:1-8,10-17 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்பு

1. சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார். (சக. 9:9).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. மனுஷரின் கண்களும் இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களின் கண்களும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கும். (சக. 9:1).
2. ஆண்டவர் அதைத் தள்ளிவிட்டு, சமுத்திரத்தில் அதின் பலத்தை முறித்துப் போடுவார் (சக. 9:4).
3. அது அக்கினிக்கு இரையாகும்.
4. அஸ்கலோன் அதைக் கண்டு பயப்படும் (சக. 9:5).
5. காத்சாவும் அதைக்கண்டு மிகவும் துக்கிக்கும்.
6. எக்ரோனும் தன் நம்பிக்கை அற்றுப்போன படியால் மிகவும் பிரலாபிக்கும்.

9 அதிகாரம்

7. காத்சாவில் ராஜா அழிந்துபோவான்.

8. அஸ்கலோன் குடியற்றிருக்கும்.

9. அஸ்தோத்தில் வேசிப்பிள்ளைகள் வாசம்பண்ணுவார்கள் (சக. 9:6).

10. நான் பெலிஸ்தரின் கர்வத்தை அழிப்பேன்.

11. அவனுடைய இரத்தத்தை அவன் வாயிலிருந்தும், அவனுடைய அருவருப்புகளை அவன் பல்லுகளின் நடுவிலிருந்தும் நீக்கிப்போடுவேன் (சக. 9:7).

12. அவனோ நம்முடைய தேவனுக்கென்று மீதியாக வைக்கப்படுவான்.

13. அவன் யூதாவிலே பிரபுவைப்போல இருப்பான்.

14. எக்ரோன் எபூசியனைப்போல இருப்பான்.

15. சேனையானது புறப்படும்போதும், திரும்பி வரும்போதும், என் ஆலயம் காக்கப்படும் படி அதைச்சுற்றிலும் பாளயம்போடுவேன் (சக. 9:8).

16. இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்துவருவதில்லை.

17. எப்பிராயீமினின்று இரதங்களையும் எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப்போகப்பண்ணுவேன்(சக. 9:10).

18. யுத்த வில்லும் இல்லாமற்போகும்.

19. அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்.

20. அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதி தொடங்கி பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்.

21. இரட்டிப்பான நன்மையைத் தருவேன், (சக. 9:12).

22. சீயோனே, உன் புத்திரரைக் கிரேக்கு தேசப் புத்திரருக்கு விரோதமாக எழுப்பி, உன்னைப் பராக்கிரமசாலியின் பட்டயத்துக்கு ஒப்பாக்குவேன் (சக. 9:13).

23. அவர்கள் பட்சத்தில் கர்த்தர் காணப் படுவார்; அவருடைய அம்பு மின்னலைப் போலப் புறப்படும் (சக. 9:14).

24. கர்த்தராகிய ஆண்டவர் எக்காளம் ஊதி, தென்திசைச் சுழல்காற்றுகளோடே நடந்துவருவார்.

25. சேனைகளின் கர்த்தர் அவர்களைக் காப்பாற்றுவார் (சக 9:15).

26. அவர்கள் பட்சித்து, கவண்கற்களால் கீழ்ப்படுத்திக்கொள்வார்கள்.

27. அவர்கள் குடித்துக் களிப்பினால் ஆரவாரிப்பார்கள்.

28. பானபாத்திரங்கள்போலவும் பலி பீடத்தின் கோடிகளைப்போலவும் நிறைந்திருப்பார்கள்.

29. அந்நாளில் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமான மந்தையாகிய அவர்களை இரட்சிப்பார் (சக. 9:16)

30. தானியம் வாலிபரையும், புதுதிராட்சரசம் கன்னிகைகளையும் வளர்க்கும். (சக. 9:17).

"அவனுடைய இரத்தத்தை அவன் வாயிலிருந்து" - விக்கிரகாராதனையில் செலுத்தப்படும் இரத்தப்பலிகளைப் புசிக்கிறார்கள்.

"அவனுடைய அருவருப்புகளை அவன் பல்லுகளின் நடுவிலிருந்து" - விக்கிரகாராதனையில் செலுத்தப்படும் பலிகளைப் புசிக்கிறார்கள்.

"அவனோ நம்முடைய தேவனுக்கென்று மீதியாக வைக்கப்பட்டு" - தேவனுக்கென்று மீதியாக வைக்கப்படுகிறவன் யூதாவின் பிரபுவைப் போலிருப்பான். ஆசீர்வதிக்கப் படுவான். எபூசியனைப்போல வேலை செய்வான். (1இராஜா 9:20-21).

9 அதிகாரம்

"இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்து வருவதில்லை" - அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்குள் பிரவேசித்து அவர்களை ஒடுக்குவது.

2. மேசியாவின் முதலாவது வருகை - (டநம 21:1-11)

சக 9:9 சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.

"இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்" - இந்த வாக்கியம் மத் 21:4 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து யூதர்களுடைய ராஜாவாக இருப்பார்.

இஸ்ரவேலின் ராஜாவைப் பற்றிய செய்திகள்

1. நீதியுள்ளவர். (மத் 1:21).
2. இரட்சிக்கிறவர். (மத் 1:21).
3. தாழ்மையுள்ளவர் (மத் 11:29).
4. கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவர். (மத் 21:1-11; மாற்கு 11:8-10; லூக்கா 19:36-40;யோவான் 12:12-19).

3. மேசியாவின் இரண்டாவது வருகை - (மத் 24)

சக 9: 10 எப்பிராயீமினின்று இரதங்களையும் எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப்போகப் பண்ணுவேன், யுத்த வில்லும் இல்லாமற் போகும்; அவர்ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்.

சக 9:11 உனக்கு நான் செய்வதென்னவென்றால், தண்ணீரில்லாத குழியிலே அடைபட்டிருக்கிறஉன்னுடையவர்களை நான் உன் உடன்படிக்கையின் இரத்தத்தினாலே விடுதலை பண்ணுவேன்.

"எப்பிராயீமினின்று இரதங்களையும் எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப் போகப் பண்ணுவேன்" -இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையும் (சக 9:9), இரண்டாம் வருகையும் (சக 9:10) இவ்விரண்டு வசனங்களில் கூறப்பட்டுள்ளது. அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்தில் அந்திக் கிறிஸ்துவும்,அவனுடைய சேனையும் அழிக்கப் படுவார்கள். (சக. 14:1-15;ஏசா 63:1-6; யோவே 2-3; வெளி 19:11-21) இதன் பின்பு, மேசியா உலகம் முழுவதையும் ஆளுகை செய்வார். ஜாதிகளுக்கு மேசியா சமாதானம் கூறுவார். (சக. 14:16-21; ஏசா 2:2-4; ஏசா 11:4-12; ஏசா 35:1-8; ஏசா 65:20-25; லூக்கா 1:32-33; வெளி. 20:1-10).

"அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்" - உலகம் முழுவதையும் மேசியா ஆளுகை செய்வார் என்பதை விளக்கும் வாக்கியம். (சக. 14:9; சங் 72:8; தானி 2:44-45; தானி 7:13-1

"உனக்கு" - சக 9:9,13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சீயோன்.

"நான் உன் உடன்படிக்கையின் இரத்தத்தினாலே விடுதலை பண்ணுவேன்." - புதிய உடன்படிக்கையின் பிரகாரம் சீயோனின் சிறைகள் விடுவிக்கப்பட்டார்கள் அல்லது விடுவிக்கப்படுவார்கள். (மத் 26:28; எபி 8:6; எபி 9:15) சிறைப்பட்டவர்கள் யாரென்பது இங்கு தெளிவாகக் கூறப்படவில்லை. கர்த்தருடைய நாளின்போது சிறைப்பட்டவர்களை இந்த வாக்கியம் குறிப்பிடலாம். இவர்கள் "நம்பிக்கையுடைய சிறைகள்" **"prisoners of hope"** (சக. 9:12) என்று அழைக்கப் படுகிறார்கள். இஸ்ரவேல் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து விடுவிக்கப்படும் போது, தமது இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து இஸ்ரவேலை இரட்சிக்கும் போது, நம்பிக்கையுடைய சிறைகள் ஜீவனோடு இருப்பார்கள். (சக. 9:12-17).

சகரியா - தொகுப்புரை

9 அதிகாரம்

4. அர்மகெதோனில் அந்திக் கிறிஸ்துவிற்கு எதிராகவும் புதிய கிரேக்க சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராகவும் தேவன் யூதாவின் பாதுகாப்பாக இருக்கிறார்

சக 9:12 நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்.

சக 9:13 நான் எனக்கென்று யூதாவை நாணேற்றி, எப்பிராயீமிலே வில்லை நிரப்பி, சீயோனே, உன் புத்திரரைக் கிரேக்குதேசப் புத்திரருக்கு விரோதமாக எழுப்பி, உன்னைப் பராக்கிரமசாலியின் பட்டயத்துக்கு ஒப்பாக்குவேன்.

சக 9:14 அவர்கள் பட்சத்தில் கர்த்தர் காணப்படுவார்; அவருடைய அம்பு மின்னலைப்போலப் புறப்படும்; கர்த்தராகிய ஆண்டவர் எக்காளம் ஊதி, தென்திசைச் சுழல்காற்றுகளோடே நடந்துவருவார்.

சக 9:15 சேனைகளின் கர்த்தர் அவர்களைக் காப்பாற்றுவார்; அவர்கள் பட்சித்து, கவண்கற்களால் கீழ்ப்படுத்திக் கொள்வார்கள்; அவர்கள் குடித்துக் களிப்பினால் ஆரவாரிப்பார்கள்; பானபாத்திரங்கள் போலவும் பலிபீடத்தின் கோடிகளைப் போலவும் நிறைந்திருப்பார்கள்.

சக 9:16 அந்நாளில் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமான மந்தையாகிய அவர்களை இரட்சிப்பார்; அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள்.

சக 9:17 அவருடைய காருண்யம் எத்தனை பெரியது? அவருடைய சௌந்தரியம் எத்தனை பெரியது? தானியம் வாலிபரையும், புதுதிராட்சரசம் கன்னிகைகளையும் வளர்க்கும்.

"அரணுக்குத் திரும்புங்கள்" - இஸ்ரவேலில் மீதமுள்ளவர்கள் அரணுக்குத் திரும்ப வேண்டும். கர்த்தரே இவர்களுக்கு அரணாக இருக்கிறார். (யோவே 4:16; நாகூம் 1:7).

"எனக்கென்று யூதாவை நாணேற்றி, எப்பிராயீமிலே வில்லை நிரப்பி" - யூதாவும், எப்பிராயீமும் கர்த்தருடைய கரத்திலுள்ள வில்லுக்கும், பராக்கிரமசாலியின் பட்டயத்திற்கும் ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள். அர்மெகதோனில் அந்திக்கிறிஸ்துவிற்கு எதிராக நடைபெறும் யுத்தத்தில் இவர்கள் மாத்திரமே கர்த்தருடைய பட்சத்தில் இருப்பார்கள். கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்து எருசலேமை மீட்கும்போது அந்திக் கிறிஸ்துவின் சேனை எருசலேமைச் சுற்றி வளைத்திருக்கும். (சக. 14:1-5,14-15) யூதாவும், எப்பிராயீமும் கர்த்தரோடு இருந்து அந்திக் கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் பண்ணுவார்கள். ஆகையினால் கர்த்தர் புறஜாதி தேசங்களிலிருந்து யூதாவையும், எப்பிராயீமையும் கூட்டிச்சேர்ப்பார்.

"சீயோனே, உன் புத்திரரைக் கிரேக்குதேசப் புத்திரருக்கு விரோதமாக எழுப்பி" - அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் கிரேக்கு தேசம் புதுப்பிக்கப்படும். கடைசி நாட்களில் இது இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணும். சீயோனின் புத்திரர் கிரேக்கு தேசப் புத்திரருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். இது அர்மெகதோன் யுத்தத்தைக் குறிப்பிடுகிறது. தானி 8,11 ஆகிய அதிகாரங்களில் கூறப் பட்டிருக்கும் பிந்திய கிரேக்கப் பேரரசு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணும். (சக. 9:13). இந்த யுத்தத்தில் கர்த்தர் சீயோன் புத்திரரோடு பிரத்தியட்சமாகக் காணப்படுவார். (சக. 9:14; சக 14:1-5; ஏசா 63:1-6; யோவே 2:11; 2தெச . 1:7-10; யூதா 1:14-15; வெளி. 11:15; வெளி. 19:11-21). கர்த்தருடைய அம்பு மின்னலைப்போலப் புறப்படும். கிறிஸ்துவும், அவருடைய தூதர்களும் அக்கினிஜுவாலையாக வருவார்கள். அந்நாளில் கர்த்தராகிய ஆண்டவர் எக்காளம் ஊதி, தென்திசைச் சுழல் காற்றுகளோடே நடந்துவருவார். (ஏசா 27:13; யோவே 2:1,15; மத் 24:31). சேனைகளின் கர்த்தர் அவர்களைக் காப்பாற்றி, (சக. 9:15) இரட்சிப்பார். (சக. 9:16).

சகரியா - தொகுப்புரை

9 அதிகாரம்

"அவர்கள் குடித்துக் களிப்பினால் ஆரவாரிப்பார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களைப் பட்சித்து, கவண்கற்களால் கீழ்ப்படுத்திக்கொள்வார்கள். அர்மெகதோனில் அந்திக் கிறிஸ்துவிற்கும், அவனுடைய சேனைகளுக்கும் விரோதமாக நடைபெறும் யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமே இயேசு கிறிஸ்துவோடு கூட இருப்பார்கள். (சக. 14:14).

10 அதிகாரம்

5. உலகப்பிரகார மழையும் ஆவிக்குரிய மழையும் - (ஓசி 6:3; யோவே 2:23-32; யாக் 5:7)

சக 10:1 பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல் வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்.

சக 10:2 சுரூபங்கள் அபத்தமானதைச் சொல்லிற்று; குறிசொல்லுகிறவர்கள் பொய்யைத்தரித்தார்கள்; சொப்பனக் காரர் வீணானதைச் சொல்லி, வியர்த்தமாகத் தேற்றரவு பண்ணினார்கள்; ஆகையால் ஜனங்கள் ஆடுகளைப்போலச் சிதறி, மேய்ப்பனில்லாததினால் சிறுமைப் பட்டார்கள்.

"பின்மாரிகாலத்து மழை" - மழை காலத்தில் மழை பெய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுமாறு இங்கு கூறப்பட்டிருக்கிறது. அதாவது மழைக்காலத்தில் அதிகமான மழை பெய்ய வேண்டுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். கர்த்தர் பூமிக்குரிய மழையையும், ஆவிக்குரிய மழையையும் அனுப்புவார். (ஓசி 6:3; யாக் 5:7)

தீர்க்கதரிசன எண் - 15

"பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில்வேண்டிக்கொள்ளுங்கள்;........" (சக. 10:1-12) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாகஅவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார். (சக. 10:1).
2. மேய்ப்பருக்கு விரோதமாக என் கோபம் மூண்டது (சக. 10:3).
3. கடாக்களைத் தண்டித்தேன்.
4. கர்த்தர் யூதா வம்சத்தாராகிய தமது மந்தையை விசாரித்து, அவர்களை யுத்தத்திலே தமது சிறந்த குதிரையாக நிறுத்துவார்.
5. அவர்கள் யுத்தத்திலே பராக்கிரமசாலி களைப்போல இருந்து யுத்தம் பண்ணுவார்கள் (சக. 10:5).
6. கர்த்தர் அவர்களோடேகூட இருப்பார்.
7. குதிரைகளின்மேல் ஏறிவருகிறவர்கள் வெட்கப்படுவார்கள்.
8. நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்துவேன். (சக. 10:6).
9. யோசேப்பு வம்சத்தாரை இரட்சிப்பேன்.
10. அவர்களைத் திரும்ப நிலைக்கப் பண்ணுவேன்.
11. நான் அவர்களுக்கு இரங்கிவேன்,
12. அவர்கள் என்னால் ஒருக்காலும் தள்ளிவிடப்படாதவர்களைப் போல் இருப்பார்கள்.
13. நான் அவர்களுக்குச் செவிகொடுப்பேன்.
14. எப்பிராயீமர் பராக்கிரமரைப்போல இருப்பார்கள் (சக. 10:7)
15. மதுபானத்தால் களிப்பதுபோல, அவர்களுடைய இருதயம் களிக்கும்.
16. அவர்களுடைய பிள்ளைகளும் அதைக் கண்டு மகிழுவார்கள்.
17. அவர்கள் இருதயம் கர்த்தருக்குள் களிகூரும்.
18. நான் அவர்களைப் பார்த்துப் பயில்போட்டு அவர்களைக் கூட்டிக்கொள்ளுவேன் (சக. 10:8)
19. அவர்கள் பெருகியிருந்ததுபோலவே பெருகிப்போவார்கள்.
20. நான் அவர்களை ஜனங்களுக்குள்ளே இறைத்தபின்பு, அவர்கள் தூரதேசங்களிலே என்னை நினைத்து தங்கள் பிள்ளைகளோடுங்கூடப் பிழைத்துத் திரும்புவார்கள். (சக. 10:9).

10 அதிகாரம்

21. நான் அவர்களைப் பல தேசங்களிலிருந்து திரும்பிவரப்பண்ணுவேன். அவர்களுக்கு இடம் போதாமற்போகும். (சக. 10:10).

22. இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில் அவர் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார் (சக. 10:11).

23. நதியின் ஆழங்கள் எல்லாம் வறண்டுபோகும்.

24. அசீரியாவின் கர்வம் தாழ்த்தப்படும்.

25. எகிப்தின் கொடுங்கோல் விலகிப்போகும்.

26. நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன் (சக. 10:12).

27. அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள்.

விக்கிரகாராதனைக்காரரின் பாவங்கள்

1. சுரூபங்கள் அபத்தமானதைச் சொல்லிற்று.
2. குறிசொல்லுகிறவர்கள் பொய்யைத் தரித்தார்கள்.
3. சொப்பனக்காரர் வீணானதைச் சொன்னார்கள்.
4. வியர்த்தமாகத் தேற்றரவு பண்ணினார்கள்.

6. அர்மகெதோனில் யுத்தம் பண்ணுவதற்கு யூதா பெலப்படுத்தப்பட்டது - (14:14; 12:4-9)

சக 10:3 மேய்ப்பருக்கு விரோதமாக என் கோபம் மூண்டது; கடாக்களை தண்டித்தேன்; சேனைகளின் கர்த்தர் யூதா வம்சத்தாராகிய தமது மந்தையை விசாரித்து, அவர்களை யுத்தத்திலே தமது சிறந்த குதிரையாக நிறுத்துவார்.

சக 10:4 அவர்களிலிருந்து கோடிக்கல்லும், அவர்களிலிருந்து கூடாரமுளையும், அவர்களிலிருந்து யுத்தவில்லும் வரும்; அவர்களிலிருந்து ஆளுகிற யாவரும் ஏகமாய்ப் புறப்படுவார்கள்.

சக 10:5 அவர்கள் யுத்தத்திலே தங்கள் சத்துருக்களை வீதிகளின் சேற்றில் மிதிக்கிற பராக்கிரமசாலிகளைப்போல இருந்து யுத்தம் பண்ணுவார்கள்; கர்த்தர் அவர்களோடேகூட இருப்பார்; குதிரைகளின்மேல் ஏறிவருகிறவர்கள் வெட்கப்படுவார்கள்.

"யூதா வம்சத்தார்" - இந்த வார்த்தை யூதாவின் வம்சத்தாரையும், எப்பிராயீமின் வம்சத்தாரையும்குறிப்பிடுகிறது. இஸ்ரவேலின் எல்லாக்கோத்திரத்தாரையும் யூதா கோத்திரம் ஆளுகைசெய்யும்.(ஆதி49:10). ஆகையினால், இங்கு யூதா வம்சத்தாரைப் பற்றி பிரதானமாகக் கூறப்பட்டிருக்கிறது. யூதா வம்சத்திலிருந்து கோடிக்கல்லும், கூடார முளையும், யுத்தவில்லும், ஆளுகிற யாவரும் ஏகமாய்ப் புறப்படுவார்கள். (சக. 10:4).

"கர்த்தர் அவர்களோடேகூட இருப்பார்" - அர்மெகதோன் யுத்தத்தில் இயேசு கிறிஸ்துவோடு இஸ்ரவேல் புத்திரர் கூட இருப்பார்கள். கர்த்தர் அவர்களோடு கூட இருந்து அவர்களுக்கு உதவி புரிவார். இதனால் அர்மெகதோன்யுத்தத்திலே அவர்கள் தங்கள் சத்துருக்களை வீதிகளின் சேற்றில் மிதிக்கிற பராக்கிரமசாலிகளைப்போல இருந்து யுத்தம் பண்ணுவார்கள்.(சக. 12:8).கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு பிரத்தியட்சமாக இருப்பார். அவருடைய தெய்வீக பிரசன்னம் குதிரைகளின்மேல் ஏறிவருகிறவர்களை வெட்கப் படுத்தும். (சக. 9:14;சக. 14:1-5;ஏசா 63:1-6; யோவே 2:11,மத்24:29-31,மத் 25:31; 2தெச1:7-10; யூதா1:14-15; வெளி. 19:11-21).

7.யூதாவும் யோசேப்பும் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள்

சக 10:6 நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தாரை இரட்சித்து, அவர்களைத் திரும்ப நிலைக்கப்பண்ணுவேன்; நான் அவர்களுக்கு இரங்கினேன்; அவர்கள் என்னால் ஒருக்காலும் தள்ளிவிடப் படாதவர்களைப் போல் இருப்பார்கள்; நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர், நான் அவர்களுக்குச் செவிகொடுப்பேன்.

10 அதிகாரம்

சக 10:7 எப்பிராயீமர் பராக்கிரமரைப்போல இருப்பார்கள்; மதுபானத்தால் களிப்பது போல, அவர்களுடைய இருதயம் களிக்கும்; அவர்களுடைய பிள்ளைகளும் அதைக் கண்டு மகிழுவார்கள்; அவர்கள் இருதயம் கர்த்தருக்குள் களிகூரும்.

சக 10:8 நான் அவர்களைப் பார்த்துப் பயில்போட்டு அவர்களைக் கூட்டிக் கொள்ளுவேன்; அவர்களை மீட்டுக் கொண்டேன்; அவர்கள் பெருகியிருந்தது போலவே பெருகிப்போவார்கள்.

"நான் யூதா வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தாரை இரட்சித்து" - கர்த்தருடைய நாளில் புறஜாதி தேசத்திலிருந்து யூதர்கள் எல்லோரும் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள். யூதா வம்சத்தார் என்னும் வாக்கியமும், யோசேப்பு வம்சத்தார் என்னும் வாக்கியமும் யூதர்களைப் பொதுவாகக் குறிக்கிற வாக்கியமாகும். (சக. 10:6-7).

"எப்பிராயீமர்" - சக 10:3 ஆவது வசனத்தில் யூதா வம்சத்தாரைப் பற்றி கூறப்பட்டிருப்பது போல இங்கு வடக்கு ராஜ்யமாகிய எப்பிராயீமரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

8.இஸ்ரவேலர்கள் சிதறிப்போனதும் கூட்டிச் சேர்க்கப்பட்டதும்

சக 10:9 நான் அவர்களை ஜனங்களுக்குள்ளே இறைத்தபின்பு, அவர்கள் தூரதேசங்களிலே என்னை நினைத்து தங்கள் பிள்ளைகளோடுங் கூடப் பிழைத்துத் திரும்புவார்கள்.

சக 10:10 நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக் கொண்டு, அவர்களைக் கீலேயாத் தேசத்துக்கும் லீபனோனுக்கும் வரப் பண்ணுவேன்; அவர்களுக்கு இடம் போதாமற்போகும்.

சக 10:11 இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில் அவர் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார்; அப்பொழுது நதியின் ஆழங்கள் எல்லாம் வறண்டு போகும்; அசீரியாவின் கர்வம் தாழ்த்தப்படும், எகிப்தின் கொடுங்கோல் விலகிப்போகும்.

சக 10:12 நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்; அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்து கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சிதறிப்போன சம்பவங்கள்

இஸ்ரவேல் புத்திரர் இரண்டு முறை சிதறிப்போயிருக்கிறார்கள். முதலாவதாகப் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போனார்கள். (2இராஜா 25) இரண்டாவதாக ரோமப்பேரரசு யூதர்களைத் தேசமெங்கும் சிதறிப்போகப் பண்ணிற்று. (லூக்கா 21:20-24) தூர தேசங்களில் இருக்கும் யூதர்கள் கர்த்தரை நினைப்பார்கள்.தங்கள் சொந்த தேசத்திற்குத் தங்கள் பிள்ளைகளோடு திரும்பி வருவார்கள். (சக. 10:9). கர்த்தர் அவர்களைப் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பவும் அழைத்து வருவார். இஸ்ரவேல் புத்திரர் பல சம்பவங்களில் தங்களுடைய தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். ஆகையினால் பாலஸ்தீனத்தில் அவர்களுக்கு இடம் போதாமற்போகும். (சக. 10:10) மேசியா இந்தப் பூமியை ஆளுகை செய்யும்போது பாலஸ்தீனம் வளர்ச்சி பெற்றிருக்கும். அக்காலத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகும். அப்போது ஜனங்கள் கர்த்தருடைய நாமத்தில் நடந்து கொள்வார்கள். கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துவார்கள். (சக. 10:12)

11 அதிகாரம்

9. மேசியாவின் முதலாவது வருகையும் அவர் புறக்கணிக்கப்பட்டதும்- விளைவு

(1) கோபம் - (மத் 24:2; லூக் 21:20-24)

சக 11:1 லீபனோனே, அக்கினி உன் கேதுரு மரங்களைப் பட்சிக்கும்படி உன் வாசல்களைத் திற.

சக 11:2 தேவதாரு விருட்சங்களே, புலம்புங்கள்; கேதுருமரங்கள் விழுந்ததே; பிரபலமானவைகள் பாழாக்கப்பட்டன. பாசானின் கர்வாலி மரங்களே, புலம்புங்கள்; அரணுள்ள சோலை கீழே தள்ளப்பட்டது.

சக 11:3 மேய்ப்பர்களின் மகிமை அழிந்து போனபடியால், அவர்கள் அலறுகிற சத்தம் கேட்கப்படுகிறது; யோர்தானின் பெருமை அழிந்துபோனபடியால், பாலசிங்கங்கள் கர்ச்சிக்கிற சத்தம் கேட்கப்படுகிறது.

சக 11:4 என் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், கொலையுண்கிற ஆடுகளை மேய்க்கக்கடவாய்.

சக 11:5 அவைகளை உடையவர்கள், அவைகளைக் கொன்றுபோட்டுத் தங்களுக்குக் குற்றமில்லையென்று எண்ணுகிறார்கள். அவைகளை விற்கிறவர்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாங்கள் ஐசுவரியமுள்ளவர் களானோம் என்கிறார்கள்; அவைகளை மேய்க்கிறவர்கள், அவைகள்மேல் இரக்கம் வைக்கிறதில்லை.

சக 11:6 நான் இனி தேசத்துக் குடிகளின்மேல் இரக்கம்வையாமல் மனுஷரில் யாவரையும் அவனவனுடைய அயலான் கையிலும், அவனவனுடைய ராஜாவின் கையிலும் அகப்படப் பண்ணுவேன்; அவர்கள் தேசத்தை அழித்தும், நான் இவர்களை அவர்கள் கைக்குத் தப்புவிப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 16

"லீபனோனே, அக்கினி உன் கேதுரு மரங்களைப் பட்சிக்கும்படி உன் வாசல்களைத் திற........"(சக 11:1-17) சக 11:1-14 ஆகிய வசனங்கள்நிறைவேறிற்று. சக 11:15-17 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. லீபனோனே, அக்கினி உன் கேதுரு மரங்களைப் பட்சிக்கும் (சக 11:1).
2. பிரபலமானவைகள் பாழாக்கப்படும். (சக 11:2).
3. பாசானின் கர்வாலிமரங்களே, புலம்பும்.
4. மேய்ப்பர்களின் மகிமை அழிந்து போனபடியால், அவர்கள் அலறுகிற சத்தம் கேட்கப்படும். (சக 11:3).
5. யோர்தானின் பெருமை அழிந்துபோகும்.
6. நான் இனி தேசத்துக் குடிகளின்மேல் இரக்கம்வைக்க மாட்டேன். (சக 11:6).
7. மனுஷரில் யாவரையும் அவனவனுடைய அயலான் கையிலும், அவனவனுடைய ராஜாவின் கையிலும் அகப்படப் பண்ணுவேன்.
8. அவர்கள் தேசத்தை அழிப்பார்கள்.
9. நான் இவர்களை அவர்கள் கைக்குத் தப்புவிப்பதில்லை.
10. கொலையுண்கிற மந்தையாகிய சிறுமைப்பட்ட உங்களை நான் மேய்ப்பேன் (சக 11:7).
11. ஒரே மாதத்திலே மூன்று மேய்ப்பரையும் அதம்பண்ணுவேன். (சக 11:8).
12. அநுக்கிரகம்என்னப்பட்ட என் கோலை எடுத்து, நான் அந்த ஜனங்களெல்லா ரோடும் பண்ணியிருந்த என்உடன் படிக்கை அற்றுப்போகும்படிக்கு அதை முறித்துப் போடுவேன்.(சக 11:10).
13. அந்நாளிலே அது அற்றுப்போகும். (சக 11:11).
14. மேசியாவிற்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசைநிறுப்பார்கள்.(சக11:12).

11 அதிகாரம்

15. அந்த முப்பது வெள்ளிக்காசு குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்துவிடப்படும். (சக 11:13).

16. நான் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இருக்கிற சகோதரக்கட்டை அற்றுப்போகப் பண்ணும்படிக்கு, நிக்கிரகம் என்னப்பட்ட என் இரண்டாம் கோலையும் முறிப்பேன். (சக 11:14).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. நான் தேசத்திலே ஒரு மேய்ப்பனை எழும்பப்பண்ணுவேன் (சக 11:16).
2. அவன் அதமாகிறவைகளைப் பராமரிக்க மாட்டான்.
3. சிதறுண்டதைத் தேடமாட்டான்.
4. நொறுங்குண்டதைக் குணமாக்க மாட்டான்.
5. இளைத்திருக்கிறதை ஆதரிக்க மாட்டான்.
6. கொழுத்ததின் மாம்சத்தைத் தின்பான்.
7. மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ (சக 11:17).
8. பட்டயம் அவன் புயத்தின்மேலும் அவன் வலது கண்ணின்மேலும் வரும்.
9. அவன் புயமுழுதும் சூம்பிப்போம்.
10. அவன் வலது கண் முற்றிலும் இருள் அடையும்.

"மேய்ப்பர்கள்" - இந்த வார்த்தை ஆட்சி புரிகிற அதிபதிகளைக் குறிக்கிறது. (சக 11:3-8; சக 10:3; ஏசா 44:28;எசே 34).

"யோர்தானின் பெருமை" - யோர்தானின் இருகரைகளிலும் ஓங்கி வளர்ந்திருக்கும் கேதுரு மரங்கள் யோர்தானின் பெருமையாகும். இங்கு வனவிலங்குகள் வந்து தங்கும்.

"பாலசிங்கங்கள்"-வாலிப வயதுள்ள ஆட்சியாளர்களும், இளவயதின் அதிபதிகளும்.

"கொலையுண்கிற ஆடுகளை மேய்க்கக்கடவாய்" - புறஜாதி ராஜாக்கள் இஸ்ரவேல் புத்திரரை மேய்க்க வேண்டும் என்று கர்த்தர் கூறுகிறார். அவர்கள் இஸ்ரவேலரைக் கொன்று போட்டார்கள். அவர்களை அடிமைகளாக விற்றுப் போட்டார்கள். இஸ்ரவேலர்மேல் அவர்கள் இரக்கம் வைக்கவில்லை. ((சக 11:5)

"அவைகளை மேய்க்கிறவர்கள், அவைகள் மேல் இரக்கம்வைக்கிறதில்லை" - இஸ்ரவேலின் பிரபுக்களுக்கு இஸ்ரவேலர்மீது இரக்கம் இல்லை. புறஜாதியார் இஸ்ரவேலரை ஒடுக்கியதுபோலவே இவர்களும் ஒடுக்குகிறார்கள்.

"நான் இவர்களை அவர்கள் கைக்குத் தப்புவிப்பதில்லை" - கர்த்தர் பொதுவாக "நான் தப்புவிப்பேன்", "நான் இரட்சிப்பேன்", "நான் விடுவிப்பேன்" என்று கூறுவது வழக்கம். ஆனால் இங்கு " நான் இவர்களை அவர்கள் கைக்குத் தப்புவிப்பதில்லை" என்று கூறுகிறார். இஸ்ரவேல் புத்திரர் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்தார்கள். அதன் பின்பு, அவர்கள் ரோமப்பேரரசின் சிறையிருப்பிலும் இருப்பார்கள் என்பதை இந்த வாக்கியம் முன்னறிவிக்கிறது. மேசியாவின் முதலாம் வருகையின்போது யூதர்கள் ரோமப்பேரரசின் ஆளுகையின்கீழ் இருந்தார்கள். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து யூதர்கள் முழுவதுமாகக் கூட்டிச்சேர்க்கப்படுவதற்கு முன்பாகவே அவர்கள் மறுபடியும் மற்றொரு சிறையிருப்பிற்குப் போவார்கள் என்று கர்த்தர் முன்னறிவிக்கிறார். (சக 11:1-6).

(2) கோபத்தின் காரணம்

(அ) அநுக்கிரகம், கோல்கள்

சக 11:7 கொலையுண்கிற மந்தையாகிய சிறுமைப்பட்ட உங்களை நான் மேய்ப்பேன்; நான் இரண்டு கோல்களை எடுத்து, ஒன்றிற்கு அநுக்கிரகம் என்றும், ஒன்றிற்கு நிக்கிரகம் என்றும் பேரிட்டு மந்தையை மேய்த்து,

சக 11:8 ஒரே மாதத்திலே மூன்று மேய்ப்பரையும் அதம்பண்ணினேன்; என் ஆத்துமா அவர்களை அரோசித்தது; அவர்கள் ஆத்துமா என்னையும் வெறுத்தது.

11 அதிகாரம்

சக 11:9 இனி நான் உங்களை மேய்ப்பதில்லை; சாகிறது சாகட்டும், அதமாகிறது அதமாகட்டும், மீதியானவைகளோவென்றால்,ஒன்றின் மாம்சத்தை ஒன்று தின்னக்கடவது என்று நான் சொல்லி,

“இரண்டு கோல்களை எடுத்து, ஒன்றிற்கு அநுக்கிரகம் என்றும், ஒன்றிற்கு நிக்கிரகம் என்றும் பேரிட்டு” - மேய்ப்பனின் இரண்டு கோல்களைப் பற்றி இங்கு கூறப் பட்டுள்ளது. ஒரு கோலுக்கு “அநுக்கிரகம்” **"beauty"** என்று பெயர். இதற்கு “கிருபையுள்ளது” **"graciousness"** என்று பொருள். மற்றொரு கோலுக்கு “நிக்கிரகம்” **"bonds"** என்று பெயர். இதற்குக் “கட்டு” **"union"** என்று பொருள்.

“ஒரே மாதத்திலே மூன்று மேய்ப்பரையும் அதம்பண்ணினேன்” - இந்த மூவரின் பெயர் இங்கு கூறப்படவில்லை. ரோமப்பேரரசரோடு யூதர்கள் யுத்தம் பண்ணிய காலத்தில் இருந்த யூதரின் மூன்று தலைவர்களை இது குறிப்பிடலாம். இவர்கள் அஸ்மோனிய வம்சத்தில் **(Asmonean line)** வந்த கடைசி பிரபுக்களான யோவான், சீமியோன், எலெயாசார் ஆகியோராக இருக்கலாம். ரோமப்பேரரசரோடு நடைபெற்ற யுத்தத்தில் இம்மூன்று பிரபுக்களும் கொல்லப்பட்டார்கள்.

“இனி நான் உங்களை மேய்ப்பதில்லை” - மேசியா இனி இஸ்ரவேல் புத்திரரை மேய்க்கமாட்டார். (சக 11:6,9).

“ஒன்றின் மாம்சத்தை ஒன்று தின்னக் கடவது” - எருசலேம் பட்டணம் முற்றிக்கை இடப்பட்டபோது அந்தப்பட்டணத்தில் மீதியாக இருந்தவர்கள் பசியினாலும், பஞ்சத்தினாலும் வாடினார்கள். அவர்கள் மனுஷருடைய மாம்சத்தைப் புசித்தார்கள். ரோமாபுரியின் சேனைகள் எருசலேம் பட்டணத்தைச் சுற்றி, பதிவிருந்தார்கள். அவர்களுக்குத் தேவையானஉணவு, தண்ணீர் மற்ற ஜீவாதாரப்பொருட்கள்எதுவும்எருசலேமிற்குள் செல்லாதவாறு தடை பண்ணினார்கள். இது லூக்கா 19:43 ஆவது வசனத்தின் நிறைவேற்றம். எருசலேமின் அழிவு சமீபமாக இருந்தது. (லூக்கா 21:20-24) லூக்கா 21 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து வலியுறுத்திக் கூறும் காரியம் இதுதான். லூக்கா 21:7 ஆவது வசனத்தில் கேட்கப் பட்டிருக்கும் கேள்விக்கு இயேசு கூறிய பதிலை இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். மத் 24, மாற்கு 13 ஆகிய அதிகாரங்களில் இந்தக் கேள்விக்குப் பதில் கூறப்படவில்லை.

(ஆ) அநுக்கிரகம் என்னும் கோல் முறித்துப் போடப்பட்டது - மேசியாவின் இரண்டாம் வருகை வரையிலும் இஸ்ரவேலின்மீது இரக்கமில்லை - (மத் 23:29; ரோம 11:25-27)

சக 11:10 அநுக்கிரகம் என்னப்பட்ட என் கோலை எடுத்து, நான் அந்த ஜனங்களெல்லாரோடும்பண்ணியிருந்த என் உடன்படிக்கை அற்றுப்போகும் படிக்கு அதை முறித்துப்போட்டேன்.

சக 11:11 அந்நாளிலே அது அற்றுப் போயிற்று; அப்படியே மந்தையில் எனக்குக் காத்திருந்த சிறுமைப் பட்டவைகள் அது கர்த்தருடைய வார்த்தையென்று அறிந்துகொண்டன.

“அநுக்கிரகம் என்னப்பட்ட என் கோலை எடுத்து” - மேசியா இந்தக் கோலை எடுத்து அதை முறித்துப்போடுகிறார். பழைய உடன் படிக்கையை மேசியா முறித்துப் போடுகிறார் என்பது இதன் பொருளாகும். கர்த்தர் மோசேயோடும், இஸ்ரவேல் ஜனத்தாரோடும் இந்தப் பழைய உடன் படிக்கையை உறுதி பண்ணியிருந்தார். மோசேயின் பிரமாணம் ஒழிக்கப்படும். இயேசுகிறிஸ்துவின்மூலமாக ஜனங்களுக்குப் புதிய பிரமாணம் கொடுக்கப்படும்.

“அந்நாளிலே அது அற்றுப்போயிற்று” - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தபோது மோசேயின் பிரமாணம் அற்றுப்போயிற்று.(2கொரி 3:6-15; கலா 3:13-25; கொலோ 2:14-17) அதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

“மந்தையில் எனக்குக் காத்திருந்த சிறுமைப்பட்டவைகள் அது கர்த்தருடைய வார்த்தையென்று அறிந்துகொண்டன” - மோசேயின் பிரமாணம் அற்றுப்போனதையும், அது ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட்டதையும், அதற்குப் பதிலாகப் புதிய பிரமாணம் கொடுக்கப் பட்டதையும், கர்த்தருக்காகக் காத்திருந்த தாழ்மையும், சிறுமையும் உடைய ஜனங்கள் அறிந்து கொண்டார்கள்.

11 அதிகாரம்

(இ) மேசியா மந்தையால் விற்கப்பட்டார்

சக 11:12 உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அவர்களோடே சொன்னேன்; அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள்.

சக 11:13 கர்த்தர் என்னை நோக்கி: அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார்; இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு; நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து, அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்துவிட்டேன்.

"உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள்" - கர்த்தர் மேசியாவிற்கு 30 வெள்ளிக்காசை விலைக் கிரயமாக நிர்ணயித்திருக்கிறார். யூதாஸ் காரியோத்தும், இஸ்ரவேலின் தலைவர்களும் இந்த வாக்கியத்தை நிறைவேற்றினார்கள்.(மத் 5:14-16,மத் 27:3).

"கர்த்தர் என்னை நோக்கி: அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார்" - யூதாசை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தில் ஒரு பகுதி 30 வெள்ளிக்காசுக்குக் கிரயத்திற்கு வாங்கப்பட்டது. (மத் 27:3-10).

"நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து" - இந்த வாக்கியம் மத் 27:9 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"குயவன்" - (மத் 27:5-10; அப் 1:18-20)

(ஈ) அப்பொழுது - கோல்கள் முறித்துப் போடப்பட்டன - இஸ்ரவேல் மறுபடியும் சிதறிப் போயிற்று-(லூக் 21:20-24; எசே 37:1-25)

சக 11:14 நான் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இருக்கிற சகோதரக் கட்டை அற்றுப்போகப் பண்ணும்படிக்கு, நிக்கிரகம் என்னப்பட்ட என் இரண்டாம் கோலையும் முறித்தேன்.

"நான் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இருக்கிற சகோதரக்கட்டை அற்றுப்போகப் பண்ணும்படிக்கு" - பாபிலோன், அசீரியா ஆகிய தேசங்களின் சிறையிருப்புக்கு உட்பட்ட பின்பு, யூதாவின் புத்திரரும், இஸ்ரவேல் புத்திரரும் மறுபடியும் ஒன்றுசேருகிறார்கள். இந்தச் சகோதரக்கட்டு அற்றுப்போகும். அவர்கள் இரண்டாம் முறையாகத் தேசங்கள் மத்தியில் சிதறிப்போவார்கள். மேசியாவைக் கிரயத்திற்கு விற்றதற்காகவும், அவரைச் சிலுவையில் அறைந்ததற்காகவும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைத் தேசங்கள் மத்தியில் மறுபடியும் சிதறப்பண்ணுகிறார். (சக 11:12-14).

"நிக்கிரகம் என்னப்பட்ட என் இரண்டாம் கோலையும் முறித்தேன்" - மேசியா புறக்கணிக்கப்படுகிறார். பழைய பிரமாணம் அற்றுப்போகிறது. இவை சக 11:1-13 ஆகிய வசனங்களின் நிறைவேற்றமாகும். அதன் பின்பு, கர்த்தர் நிக்கிரகம் என்னப்பட்ட தமது இரண்டாம் கோலையும் முறிக்கிறார்.இதன் பொருள் என்னவெனில், சிறையிருப்புக்குப் பின்பு ஒரே தேசமாக இணைக்கப்பட்ட யூதாவும், இஸ்ரவேலும் மறுபடியும் சிதறிப்போகும் என்பதாகும். கிபி. 70 ஆம் வருஷத்தில் இந்தச் சம்பவம் நிறைவேறிற்று. (லூக்கா 21:20-24).

10. அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலிடம் வந்து நல்ல மேய்ப்பனை எவ்வாறு போற்ற வேண்டுமென்று அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பான் - (யோவா 5:43)

சக 11:15 கர்த்தர் என்னை நோக்கி: நீ மதியற்ற ஒரு மேய்ப்பனுடைய ஆயுதங்களை இன்னும் எடுத்துக்கொள்.

சக 11:16 இதோ, நான் தேசத்திலே ஒரு மேய்ப்பனைஎழும்பப்பண்ணுவேன்; அவன் அதமாகிறவைகளைப் பராமரிக்காமலும், சிதறுண்டதைத் தேடாமலும், நொறுங்குண்டதைக் குணமாக்காமலும், இளைத் திருக்கிறதை ஆதரிக்காமலும், கொழுத்ததின் மாம்சத்தைத் தின்று, அவைகளுடைய குளம்புகளை உடைத்துப்போடுவான்.

சக 11:17 மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ! பட்டயம் அவன் புயத்தின்மேலும் அவன் வலது கண்ணின்மேலும் வரும்; அவன் புயமுழுதும் சூம்பிப்போம்; அவன் வலது கண் முற்றிலும் இருள் அடையும் என்றார்.

11 அதிகாரம்

"மதியற்ற ஒரு மேய்ப்பன்" - யூதாவும், இஸ்ரவேலும் நல்ல மேய்ப்பரைப் புறக்கணித்து விட்டார்கள். அவர்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய்விட்டார்கள். ஜனங்களும், தலைவர்களும் கர்த்தரை விட்டு தூரமாக விலகிப் போய்விட்டார்கள். ஆகையினால் மதியற்ற மேய்ப்பன் இஸ்ரவேல் புத்திரரை வஞ்சிப்பதற்குக் கர்த்தர் அனுமதிக்கிறார். இந்த மதியற்ற மேய்ப்பன் அவர்களை வஞ்சனையாக ஆளுகை செய்வான். அக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் நல்ல மேய்ப்பரின் குணாதிசயங்களைப் புரிந்துகொண்டு கர்த்தரை மேன்மைப் படுத்துவார்கள். (சக 11:15-17).

"இன்னும்" - இயேசு கிறிஸ்து காட்டிக் கொடுக்கப்பட்டார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்தின் முடிவையும், சகரியா முன்னறிவிக்கிறார். இதன் பின்பு, இனிமேல் வரப்போகிற சம்பவத்தைப் பற்றி இங்கு முன்னறிவிக்கப்படுகிறது. கடைசி நாளில் மெய்யான மேய்ப்பரைப்போல வேஷம் அணிந்த அந்திக்கிறிஸ்து என்னும் மதியற்ற மேய்ப்பன் வருவான். (சக 11:15-17).

மதியற்ற மேய்ப்பனின் பாவங்கள் (சக 11:16-17)

1. அதமாகிறவைகளைப் பராமரிக்க மாட்டான்.
2. சிதறுண்டதைத் தேடமாட்டான்.
3. நொறுங்குண்டதைக் குணமாக்க மாட்டான்.
4. இளைத்திருக்கிறதை ஆதரிக்க மாட்டான்.
5. கொழுத்ததின் மாம்சத்தைத் தின்பான்.
6. அவைகளுடைய குளம்புகளை உடைத்துப்போடுவான்.

"அபத்தமான மேய்ப்பன்" **(idol shepherd)** - அபத்தம் என்பதற்கு விக்கிரகம் என்று பொருள். ஜனங்கள் தன்னைத் தேவனைப்போல ஆராதனை செய்ய வேண்டும் என்று அந்திக் கிறிஸ்து விரும்புவான். அதற்காக அவன் தன்னுடைய சிலையை நிறுவுவான். (2தெச 2:3-4; வெளி 13:16-18).

"பட்டயம் அவன் புயத்தின்மேலும் அவன் வலது கண்ணின்மேலும் வரும்" - பட்டயத்தினால் அவனுடைய வலதுபுயமும், வலது கண்ணும் பயனற்றுப்போகும். அவனுடைய புயம் முழுவதும் சூம்பிப்போகும். அவன் வலதுகண் முற்றிலும் இருளடையும். இது வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்துவில் நிறைவேறும் சம்பவமாகும்.

12 அதிகாரம்

V. **இஸ்ரவேலுக்காக இரண்டாவது பாரம்** - (12:1-14:21; 9:1; ஏசா 13:1)

1. **அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலை முற்றுகையிட்டான்** - (14:1-5; எசே 38:39; வெளி 19)

சக 12:1 இஸ்ரவேலைக்குறித்துக் கர்த்தர் சொன்ன வார்த்தையின் பாரம்; வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

சக 12:2 இதோ, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன்; எருசலேமுக்கு விரோதமாய்ப் போடப்படும் முற்றிகையிலே யூதாவும் அப்படியேயாகும்.

சக 12:3 அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்.

"கர்த்தர் சொன்ன வார்த்தையின் பாரம்" - இது தீர்க்கதரிசி கூறியிருக்கும் இரண்டாவது பாரமாகும். (சக 9:1;சக 12:1).

தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகள்

1. வானங்களை விரிக்கிறார்.(ஏசா 42:5; ஏசா 44:24;ஏசா 45:12,18;ஏசா 48:13)
2. பூமியை அஸ்திபாரப்படுத்துகிறார். (சங் 24:2; சங் 102:25; சங் 104:2-5)
3. மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிறார். (ஆதி 2:7; எண் 16:22)

தீர்க்கதரிசன எண் - 17

"இஸ்ரவேலைக்குறித்துக்கர்த்தர் சொன்ன வார்த்தையின் பாரம்;....." (சக 12:1-14:21 சக 13:7 ஆவது வசனம் நிறைவேறிற்று. சக 12:1-13:6; 13:8-14:21 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. பட்டயம் என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பும். (சக 13:7).
2. மேய்ப்பன் வெட்டப்படுவான்.
3. ஆடுகள் சிதறிப்போகும்.
4. என் கரத்தைச் சிறுவர்மேல் திரும்ப வைப்பேன்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன் (சக 12:2).
2. அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்;. (சக 12:3)3. அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப் படுவார்கள். பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக் கொள்வார்கள்.
4. அந்நாளிலே நான் குதிரைகளுக்கெல்லாம் திகைப்பை வரப்பண்ணுவேன். (சக 12:4).
5. அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர்களுக்கெல்லாம் புத்தி மயக்கத்தையும் வரபண்ணுவேன்.
6. யூதாவம்சத்தின்மேல் என் கண்களைத் திறப்பேன்.
7. ஜனங்களுடைய எல்லாக் குதிலுஜ் களுக்கும் குருட்டாட்டத்தை உண்டுபண்ணுவேன்.
8. எருசலேமின் குடிகள், சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் எங்களுக்குப் பெலனானவர்கள் என்று அப்போது யூதாவின் தலைவர் தங்கள் இருதயத் திலே சொல்லுவார்கள். (சக 12:5).

சகரியா - தொகுப்புரை

12 அதிகாரம்

9. அந்நாளிலே யூதாவின் தலைவரை விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிக்கிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவேன்(சக 12:6).

10. அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள்.

11. எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்.

12. கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதல்முதல் இரட்சிப்பார். (சக 12:7).

13. அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார் (சக 12:8).

14. அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்.

15. தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்.

16. அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன். (சக 12:9).

17. நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன் (சக 12:10).

18. அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்ப்பார்கள்.

19. ஒருவன் தன் ஒரேபேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காகமனங்கசந்து துக்கிப்பார்கள்.

20. அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரியதாயிருக்கும். (சக 12:11).

21. தேசம் புலம்பிக்கொண்டிருக்கும் (சக 12:12-14).

22. அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும். (சக 13:1).

23. அந்நாளிலே நான் விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன் (சக 13:2).

24. அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை.

25. தரிசனம் சொல்லுகிறவர்களையும், அசுத்த ஆவியையும் தேசத்திலிருந்து போய்விடப் பண்ணுவேன்.

26. கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனை அவனுடைய பெற்றோரே குத்திக் கொன்றுபோடுவார்கள். (சக 13:3).

27. அந்நாளிலே தரிசனம் சொல்லுகிற அவனவன் தான் சொன்ன தரிசனத்தினால் வெட்கப்படுவான். (சக 13:4).

28. கள்ளத்தீர்க்கதரிசி பொய் சொல்லும் படிக்கு இனி மயிர்ப்போர்வையைப் போர்த்துக் கொள்ளமாட்டான். (சக 13:4-5).

29. அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி: உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்பான்.

30. அப்பொழுது அவன் என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்.

31. தேசமெங்கும் சம்பவிக்கும் காரியம் என்னவென்றால், அதில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டு போவார்கள்; மூன்றாம் பங்கோ அதில் மீதியாயிருக்கும். (சக 13:8).

சகரியா - தொகுப்புரை

12 அதிகாரம்

32. அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப் பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்குவேன். (சக 13:9).

33. பொன்னைப் புடமிடுகிறது போல அவர்களைப் புடமிடுவேன்.

34. அவர்கள் என் நாமத்தைத் தொழுது கொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்.

35. இது என் ஜனமென்று நான் சொல்லுவேன்.

36. கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்.

37. கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும். (சக 14:1).

38. எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; (சக 14:2).

39. நகரம் பிடிக்கப்படும்.

40. வீடுகள் கொள்ளையாகும்.

41. ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்.

42. நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப் பட்டுப்போவார்கள்.

43. மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை.

44. கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல்அந்த ஜாதிகளோடே போராடுவார். (சக 14:3).

45. அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும் (சக 14:4).

46. அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலி வமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்.

47. அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்.

48. அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப் போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால் மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள் (சக 14:5).

49. என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.

50. அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமாயிருக்கும். (சக 14:6).

51. ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்ச முண்டாகும். (சக 14:7).

52. அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போகும். (சக 14:8).

53. மாரிகாலத்துக்கும் கோடை காலத்துக்கும் இருக்கும்.

54. கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். (சக 14:9).

55. அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார்; அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.

56. தேசமெல்லாம் கேபா தொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன்வரைக்கும் சமபூமியாகத் திருத்தப்படும் (சக 14:10).

57. எருசலேமோ உயர்ந்ததாகி, தன் ஸ்தானத்திலே பென்யமீன் வாசல் தொடங்கி முதல்வாசலென்கிற ஸ்தலமட்டும் கோடிவாசல் வரைக்கும், அனானெயேல் கோபுரம் துவக்கி ராஜாவின் திராட்ச ஆலைகள்மட்டும் குடியேற்றப்பட்டிருக்கும். (சக 14:10).

12 அதிகாரம்

58. அதிலே ஜனங்கள் வாசம்பண்ணுவார்கள் (சக 14:11).

59. இனிச் சங்கரிப்பு இருக்காது.

60. எருசலேம் சுகமாய்த் தங்கியிருக்கும்.

61. எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்துபோகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும். (சக 14:12).

62. அந்நாளிலே கர்த்தரால் பெரிய கலக்கம் அவர்களுக்குள் உண்டாகும் (சக 14:13).

63. அவனவன் தன் தன் அயலானின் கையைப் பிடிப்பான்.

64. யூதாவும் எருசலேமிலே யுத்தம்பண்ணும் (சக 14:14).

65. அப்பொழுது சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளுடைய ஆஸ்தியாகிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும் மகா திரளாகக் கூட்டப்படும்.

66. அந்தப் பாளையங்களில் இருக்கும் குதிரைகள் கோவேறு கழுதைகள் ஒட்டகங்கள் கழுதைகள் முதலான எல்லா மிருகஜீவன்களுக்கும் வரும் வாதையும், அந்த வாதையைப் போலவே இருக்கும். (சக 14:15).

67. எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுது கொள்ளும்படிக்கும், கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷா வருஷம் வருவார்கள். (சக 14:16).

68. பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை. (சக 14:17).

69. எகிப்தின் வம்சம் வராமலும் சேராமலும் போனால், அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை. (சக 14:18).

70. கூடாரப்பண்டிகையை ஆசரிக்கவராத ஜாதிகளைக் கர்த்தர் வாதிக்கும் வாதையே அவர்கள்மேலும் வரும். (சக 14:18-19).

71. அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும் (சக 14:20).

72. கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும்.

73. எருசலேமிலும் யூதாவிலுமுள்ள எல்லாப் பானைகளும் சேனைகளின் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும் (சக 14:21).

74. பலியிடுகிற யாவரும் வந்து அவைகளில் எடுத்து, அவைகளில் சமைப்பார்கள்.

75. அந்நாள்முதல் சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே யாதொரு கானானியனும் இருப்பதில்லை.

"தத்தளிப்பின் பாத்திரம்" - கர்த்தர் எருசலேமை அற்புதமாகப் பாதுகாப்பார். யூதருக்கு விரோதமாக யுத்தம் பண்ணும் தேசத்தார் தத்தளிப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பிரத்தியட்சமாக இருப்பார். இதைப் பார்த்து புறஜாதியார் பயந்து நடுங்குவார்கள். (சக 9:14; சக 14:5; ஏசா 63:1-6; யோவே 2:11; மத் 24:29-31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 1:7; வெளி 19:11-21).

"அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப் படுவார்கள்" - யூதரையும், எருசலேமையும் அழிக்க வகைதேடுகிறவர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள். (சக 14:1-5; வெளி 19:11-19).

12 அதிகாரம்

2. மேசியாவின் இரண்டாவது வருகை - அர்மகெதோனில் யூதாவின் பங்கு - (14:14)

சக 12:4 அந்நாளிலே நான் குதிரைகளுக்கெல்லாம் திகைப்பையும், அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர் களுக்கெல்லாம் புத்திமயக்கத்தையும் வரப்பண்ணி, யூதாவம்சத்தின்மேல் என் கண்களைத் திறந்துவைத்து, ஜனங்களுடைய எல்லாக் குதிரைகளுக்கும் குருட்டாட்டத்தை உண்டுபண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சக 12:5 எருசலேமின் குடிகள், சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் எங்களுக்குப் பெலனானவர்கள் என்று அப்போது யூதாவின் தலைவர் தங்கள் இருதயத்திலே சொல்லுவார்கள்.

சக 12:6 அந்நாளிலே யூதாவின் தலைவரை விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிக்கிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவேன்; அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள்; எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப் பட்டிருக்கும்.

சக 12:7 தாவீது வம்சத்தாரின் மகிமையும், எருசலேமின் குடிகளுடைய மகிமையும், யூதாவின்மேல் தன்னை உயர்த்தாதபடிக்கு, கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதல்முதல் இரட்சிப்பார்.

சக 12:8 அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்; அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்; தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்.

சக 12:9 அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்.

"அந்நாளிலே" - இந்தத் தீர்க்கதரிசனத்தில் இந்த வார்த்தை 16 தடவைகள் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசியும், இந்த வார்த்தையை ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிப்பதற்குப் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்.

"நான் குதிரைகளுக்கெல்லாம் திகைப்பையும், அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர் களுக்கெல்லாம் புத்தி மயக்கத்தையும் வரப்பண்ணி" - அந்திக் கிறிஸ்துவின் சேனையிலுள்ள குதிரைகளுக்கும் அவைகளின் மேல் ஏறியிருக்கிறவைகளுக்கும் இந்தச் சம்பவம் நடைபெறும்.

யூதாவின் தலைவர்களைப் பற்றிய செய்திகள்

1. எருசலேமின் குடிகளிலும், சேனைகளின் கர்த்தரிடத்திலும் விசுவாசம்வைத்திருப்பார்கள்.(சக 12:5).
2. விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கு ஒப்பாயிருப்பார்கள். (சக 12:6).
3. வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிக்கிற தீவட்டிக்கு ஒப்பாயிருப்பார்கள்.
4. அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள்.

"முதல்முதல்" - இந்த வாக்கியம் மூலபாஷையில் "முதலில் இருந்ததுபோல" **"as at the first"** என்று பொருள்படுமாறு உள்ளது.

"கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்" - எருசலேமின் குடிகள் அழிக்கப்படும் சூழ்நிலையில் இருப்பார்கள். (சக 14:1-5). அப்போது கர்த்தர் அவர்களைக் காப்பாற்றுவார்.யுத்தத்தில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப் பாதுகாத்து பலப்படுத்துவார். பரலோகத்தின் தூதர்களும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் இஸ்ரவேல் புத்திரருக்கு உதவி புரிய வருவார்கள். இவர்களுக்கு இயேசு கிறிஸ்து தலைமை தாங்குவார். (ஏசா 63:1-6; யோவே 2:11; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:19-21).

12 அதிகாரம்

"கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறது. இவரே இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் தலைவராக இருக்கிறவர். பரலோகத்தின் சேனைகளுக்கும், இயேசு கிறிஸ்துவே அதிபதியாக இருக்கிறார்.

"எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்" - அர்மெகதோனில் அந்திக்கிறிஸ்துவின் சார்பில் பல தேசங்கள் சேர்ந்துகொண்டு இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணும். அந்த ஜாதியாரில் ஆறில் ஒரு பங்கு மட்டுமே மீந்திருப்பார்கள். மற்றவர்கள் எல்லோரும் அழிக்கப்படுவார்கள்.(எசே 39:2).

3. இஸ்ரவேலின் மனமாற்றம்

(1) ஆவியானவர் ஊற்றப்படுகிறார் - சிலுவையில் அறையப்பட்ட மேசியா வெளிப் படுத்தப்படுகிறார்

> சக 12:10 நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரேபேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

"கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். அப்போது இந்தச் சம்பவம் நிறைவேறும். (சக 12:10-13:1) இது யோவேலுடைய தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகவும் இருக்கும். (யோவே 2:28; அப் 2:16-21) இக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் ஒரேநாளில் மறுபடியும் பிறக்கும். (ஏசா 66:7-8). கிருபையின் ஆவியும், விண்ணப்பங்களின் ஆவியும் முதலாவதாக வரவேண்டும். துக்கிப்பதும், மனந்திரும்புவதும் இரண்டு நாட்களுக்கு இருக்கும். அது மூன்றாவது நாளும் தொடரும். அப்போது கர்த்தர் அருணோதயம்போல எழும்புவார். (ஓசி 6:1-3). அப்போது அவர்கள் "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப் பட்டவர்" (மத் 23:37-39) என்று சொல்வார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து இந்தப் பூமிக்கு வரும்போது இஸ்ரவேல் இரட்சிக்கப்படும். (ரோமர் 11:25-29). இந்தச் சம்பவங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நடைபெறப்போகும் சம்பவங்களாகும்.

ஆவியானவர் ஊற்றப்படும் சம்பவம்

1. தாவீதின் குடும்பத்தாரின்மேல் - யூதா.
2. எருசலேம் குடிகளின்மேல்.

ஊற்றப்படும் ஆவியானவரின் அம்சம்

1. கிருபையின் ஆவி
2. விண்ணப்பங்களின் ஆவி
3. அங்கிகரிக்கும் ஆவி (சக 12:10; வெளி 1:7)
4. துக்கிக்கும் ஆவி
5. மனக்கசப்பின் ஆவி
6. தனித்தனியே புலம்பும் ஆவி (சக 12:11-14)
7. அழுக்கை நீக்கி சுத்திகரிக்கும் ஆவி (சக 13:1)

"தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து" - மேசியாவின் பாடுகளுக்கும், மரணத்திற்கும் யூதர்கள் காரணமாக இருந்தார்கள். பேதுரு இதை உறுதி பண்ணுகிறார். (அப் 2:23).

குத்துதல் (pierced) דָּקַר - deh'-ker - 1856

> வினைச்சொல்-குத்திப்போடு, குத்து, காயப்படுத்து **(thrust through; pierce)** (யோவான் 19:34,37; வெளி 1:7).

சகரியா - தொகுப்புரை

12 அதிகாரம்

"எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" -யூதர்கள் இயேசு கிறிஸ்துவைக் குத்தினார்கள். தங்களுடைய செய்கைகளுக்காக வருந்துவார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய காயங்களையும் காணும்போது ஒருவன் தன் ஒரேபேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல அவருக்காகப் புலம்புவார்கள். ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். (சக 12:10-14).

துக்கிப்பு

1. மனங்கசந்து துக்கிப்பது. (சக 12:10)
2. பெரிய புலம்பல் - தேசம் முழுவதும். (சக 12:11)
3. நீண்ட துக்கம் - மூன்று நாட்கள். (ஓசி 6:1-3)
4. தனித்தனியாகப் புலம்புவது. (சக 12:11-14)

(2) இஸ்ரவேலின் மனந்திரும்புதல் - (ஏசா 64)

சக 12:11 அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரியதாயிருக்கும்.

சக 12:12 தேசம் புலம்பிக்கொண்டிருக்கும்; ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்,

சக 12:13 லேவி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், சீமேயி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்,

சக 12:14 மற்றுமுண்டான சகல குடும்பங்களிலும் ஒவ்வொரு குடும்பத்தின் மனுஷர் தனித்தனியேயும் அவர்களுடைய ஸ்திரீகள் தனித்தனியேயும் புலம்புவார்கள்.

"மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கு" - இங்கு யூதாவின் ராஜாவாகிய யோசியா கொலைபண்ணப்பட்டான். அவனுக்காக இங்கு ஜனங்கள் அதிகமாகப் புலம்பினார்கள். (2நாளா 35:22-25).

சக 12:12-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் குடும்பத்தார்

1. தாவீது குடும்பத்தார் (2சாமு 7)
2. நாத்தான் குடும்பத்தார் (லூக்கா 3:31)
3. லேவி குடும்பத்தார் (எண் 3:17)
4. சீமேயி குடும்பத்தார் (எண் 3:18)

இவர்களில் இருவர் தாவீதின் வம்சமாகிய ராஜவம்சத்திலும் (மத் 1), நாத்தானின் பொதுவான வம்சத்திலும் (லூக்கா 3) வருகிறார்கள். மற்ற இருவர் ஆசாரிய வம்சமாகிய லேவியின் வம்சத்திலும், கெர்சோனின் வம்சத்திலும் வருகிறார்கள்.

"அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்" - யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம் அவர்கள் துக்கித்துப் புலம்பும்போது புருஷர்கள் தனி இடத்திலும், ஸ்திரீகள் தனி இடத்திலும் புலம்புவது வழக்கம். (சக 12:11-14).

சகரியா - தொகுப்புரை

13 அதிகாரம்

(3) இஸ்ரவேல் சிலுவையை ஏற்றுக் கொள்கிறது

சக 13:1 அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.

“திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்” - இயேசு கிறிஸ்து மாத்திரமே இரட்சிப்பின் ஒரே வழி என்பதையும், பாவத்தையும், அழுக்கையும் நீக்கி சுத்திகரிக்கஇயேசு கிறிஸ்துவால் மாத்திரமே முடியும் என்பதையும் யூதர்கள் அங்கிகரிப்பார்கள்.தங்களுடைய தேசம் இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே பாதுகாக்கப்படும் என்பதைப் புரிந்து கொள்வார்கள். திறக்கப் பட்டஓர் ஊற்றுஎன்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக உண்டாகும் இரட்சிப்பை யூதர்கள் அங்கிகரிப்பதைக் குறிக்கும்.(ஏசா 53;மத் 26:28; கொலோ 1:20;கொலோ 2:14-17; 1பேதுரு 2:24;வெளி 1:5 ;வெளி 5:8-10).

(4) விக்கிரகாராதனையும் அசுத்த ஆவிகளும் அழிக்கப்பட்டன

சக 13:2 அந்நாளிலே நான் விக்கிரகங்களின்பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன்; அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை; தரிசனம் சொல்லுகிறவர்களையும், அசுத்த ஆவியையும் தேசத்திலிருந்து போய்விடவும் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

“அந்நாளிலே நான் விக்கிரகங்களின்பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன்” - வேதாகமத்தில் பல விக்கிரகங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளது. இனிமேல் அந்தப் பெயர்கள்கூட கூறப்படமாட்டாது. திறக்கப்பட்ட ஊற்று எல்லா பாவங்களையும், அசுத்தத்தையும், கள்ளத்தீர்க்க தரிசனத்தையும், அசுத்த ஆவிகளையும் ஜனங்களிடத்திலிருந்து அகற்றி, அவர்களைச் சுத்திகரிக்கும். (சக 13:1-5).

(5) கள்ளத்தீர்க்க தரிசிகள் கொலையுண்டு போனார்கள்

சக 13:3 இனி ஒருவன் தரிசனம் சொன்னால், அவனைப்பெற்ற அவன் தகப்பனும் அவன் தாயும் அவனை நோக்கி: நீ கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய்பேசுகிறபடியால் நீ உயிரோடிருக்கப்படாது என்றுசொல்லி, அவனைப் பெற்ற அவன் தகப்பனும் அவன் தாயும் அவன் தரிசனம் சொல்லும் போது அவனைக் குத்திப்போடுவார்கள்.

சக 13:4 அந்நாளிலே தரிசனம் சொல்லுகிற அவனவன் தான் சொன்ன தரிசனத்தினால் வெட்கப்பட்டு, பொய் சொல்லும்படிக்கு இனி மயிர்ப் போர்வையைப் போர்த்துக்கொள்ளாமல்,

சக13:5 நான் தரிசனம்சொல்லுகிறவன் அல்ல, நான் நிலத்தைப் பயிரிடு கிறவன்; என் சிறுவயதுமுதல் ஒருவன் என்னைவேலைகொண்டான் என்பான்.

“நீ கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு பொய்பேசுகிறபடியால் நீ உயிரோடிருக்கப் படாது” - ஒருவன் அசுத்த ஆவியைக் கொண்டு, கள்ளத்தீர்க்கதரிசனம் கூறினால் (சக 13:2) அவனுடைய பெற்றோரே அவனைக்கொன்றுபோடுவார்கள்.(சக 13:3-5). இந்த வாக்கியம் உபா 13:6-11; உபா 18:20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்களோடு ஒத்திருக்கிறது.

“அவனவன் தான் சொன்ன தரிசனத்தினால் வெட்கப்பட்டு” - இந்த வாக்கியம் கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறிக்கிறது.

“இனி மயிர்ப்போர்வையைப் போர்த்துக் கொள்ளாமல்” - தீர்க்கதரிசிகள் ஒட்டகத் தோலினால் செய்யப்பட்ட வஸ்திரங்களை அணிந்திருந்தார்கள். எலியா (2இராஜா 1:8) யோவான் ஸ்நானன்(மத் 3:4).

(6) சிலுவையில் அறையப்பட்ட மேசியா வெளிப்படுத்தப்பட்டார்

சக 13:6 அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி: உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்.

சகரியா - தொகுப்புரை

13 அதிகாரம்

"அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி" - சக 13:1-5 ஆகிய வசனங்களில் கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக் கிறது. இந்த வாக்கியத்தில் மேசியாவைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியம் இனிமேல் நிறைவேறும். அப்போது மேசியா தம்முடைய பாடுகளையும், மரணத்தையும், தம்முடைய சரீரத்தில் இந்த வடுக்கள் உண்டான வேளையையும் ஜனங்களுக்குத் தெரியப் படுத்துவார். (யோவான் 20:25; கொலோ 2:14).

"என் சிநேகிதரின் வீட்டிலே காயப் பட்டதினால்உண்டானவைகள்"- மேசியாவின் காயங்களைப் பற்றி பல வசனங்கள் விளக்கிக் கூறுகின்றன. இயேசு கிறிஸ்து தம்மைக் காயப்படுத்தினவர்களைக்கூட தம்முடைய சிநேகிதராகப் பாவித்தார். (ஏசா 53:5; கொலோ 2:14-17;1பேதுரு 2:24).

சிநேகிதரின் வகைகள்

1. மெய்யான சிநேகிதர் - இவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்குக் கீழ்ப்படிவார்கள். (யோவான் 15:13-15)

2. சிநேகிதராக ஆகக்கூடியவர்கள் - இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் காணப்படும் வடுக்கள் மூலமாக இவர்கள் கிறிஸ்துவின் சிநேகிதர் ஆகலாம். தம்முடைய சரீரத்தில் காயங்கள் உண்டாகவும், சிலுவையில் பாடுகளை அனுபவிக்கவும் இயேசு கிறிஸ்து சம்மதித்தார். ஜனங்கள் தம்முடைய மெய்யான சிநேகிதராக வேண்டுமென்று கிறிஸ்து இந்தப் பாடுகளையெல்லாம்ஏற்றுக்கொண்டார்.

(7) இஸ்ரவேலின் மீட்பு எவ்வாறு கிரயத்திற்குக் கொள்ளப்பட்டது - (மத் 26:31)

சக 13:7 பட்டயமே, என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; மேய்ப்பனை வெட்டு, அப்பொழுது ஆடுகள்சிதறிப்போகும்; ஆனாலும் என் கரத்தைச் சிறுவர்மேல் திரும்ப வைப்பேன்.

"பட்டயமே, என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு" - இந்த வாக்கியம் இந்த வசனத்தில் சம்பந்தமில்லாமல் சேர்க்கப்பட்டிருப்பது போன்று தெரிகிறது. இந்த வாக்கியத்தை ஏசா 53 ஆவது அதிகாரம் நிறைவேறிய சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வியாக்கியானம் பண்ண வேண்டும். இயேசு கிறிஸ்து புறக்கணிக்கப்படுவதும், பாடுகளை அனுபவிப்பதும் இந்த வாக்கியத்தில் விளக்கப் பட்டிருக்கிறது. பட்டயம் ஒரு மனுஷனை வெட்டுகிறது. அவர் கர்த்தருடைய தோழனாகவும் இருக்கிறார். (சக 13:7).

தோழன் என்பதற்கான எபிரெய வார்த்தை "ஆமீத்" **'amiyth** என்பதாகும். திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் இருக்கிறார்கள். இம்மூவரும் தனித்தனியாகத் தேவத்தத்துவப் பண்புடையவர்களாக இருக்கிறார்கள். இந்த வசனத்தில் மேய்ப்பன் என்பது தோழரைக் குறிக்கும். இந்த வசனத்தில் மாத்திரமே இந்த எபிரெய வார்த்தை "தோழன்" **"fellow"** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் இந்த வார்த்தை "பிறன்" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **"another"** (லேவி 19:11; லேவி 25:17); **"neighbour"** (லேவி 6:2; லேவி 18:20; லேவி 19:11,15,17; லேவி 24:19; லேவி 25:14,15) இந்த வார்த்தை ஒரே பண்புடைய மற்றொரு நபரைக் குறிக்கிறது. இந்த வசனப்பகுதியில் இவ்விரண்டு நபருமே கர்த்தரென்று அழைக்கப்படுகிறார்கள். (சக 13:7; சக 14:9).

சக 13:6-7 ஆகிய வசனங்களில் மேசியாவைக் குறித்து இஸ்ரவேல் புத்திரர் என்ன கூறுகிறார்கள் என்பதைப் பற்றி கர்த்தர் அறிவிக்கிறார். சக 13:7 ஆவது வசனத்தில் கர்த்தர் மேசியாவை என் மேய்ப்பன் "My Shepherd" என்றும், என் தோழனாகிய புருஷன் "Man that is My Fellow" என்றும், அழைக்கிறார்.

தோழன் עָמִית - aw-meeth' - **5997**

ஆ.பெ.சொ. - பிறர், அயலான், ஒருவருக்கொருவர், தோழன் **(to associate with; companionship; comrade; kindred man)**

13 அதிகாரம்

4. உபத்திரவத்தின் நோக்கம் - யூதாவிலிருந்து கலகக்காரர்கள் அகற்றப்படுவார்கள்

சக 13:8 தேசமெங்கும் சம்பவிக்கும் காரியம் என்னவென்றால், அதில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டுபோவார்கள்; மூன்றாம் பங்கோ அதில் மீதியாயிருக்கும்.

சக 13:9 அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்.

"அதில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டுபோவார்கள்" - மகா உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரில் மூன்றில் இரண்டு பங்கு பேர் மாண்டு போவார்கள். மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமே அந்திக் கிறிஸ்துவிற்கு விரோதமாக யுத்தம் பண்ண பாதுகாக்கப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இவர்கள் எல்லோரும் தேசமாக மனந்திரும்பி, ஒரே நாளில் இரட்சிக்கப்படுவார்கள். (சக 13:8-9; சக 14:14; ரோமர் 11:25-29).

14 அதிகாரம்

5. கர்த்தருடைய நாள் - (ஏசா 2:10)

(1) அர்மகெதோனில் துவங்குகிறது

சக 14:1 இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளை யானது உன் நடுவிலே பங்கிடப்படும்.

சக 14:2 எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப் போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை.

சக 14:3 கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்.

"கர்த்தருடைய நாள் வருகிறது" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது "கர்த்தருடைய நாள்" "The day of the Lord" ஆரம்பமாகிறது. ஆயிரம் வருஷ அரசாட்சி முடியும் வரையிலும் கர்த்தருடைய நாள் தொடர்ந்து இருக்கும். அப்போது "தேவனுடைய நாள்" "day of God" ஆரம்பமாகி, நித்திய காலம் வரையிலும் தொடரும். (சக 14:1; 1கொரி 15:24-28; எபே 1:10; 2பேதுரு 3:10-13).

"கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும்." - அந்திக்கிறிஸ்துவின் சேனை அர்மெகதோனில் தோற்றுப்போகும். அவனுடைய திரளான சேனையிலிருந்து கொள்ளைப் பொருட்கள் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் பங்கிடப்படும். (சக 14:1,14). 'எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்" - அர்மெகதோனில் தேசங்கள் கூட்டிச்சேர்க்கப் படும். (எசே 38-39;யோவே 3; வெளி 16:13-16; வெளி 19:11-21).

"நகரம் பிடிக்கப்படும்" - எருசலேம் பட்டணம் இரண்டாம் முறையாகப் பிடிக்கப்படும். உபத்திரவக்காலத்தின் முடிவிலும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சற்று முன்பாக அந்திக்கிறிஸ்து எருசலேம் நகரத்தைப் பிடிப்பான். அதின் வீடுகள் கொள்ளையாகும். அதிலுள்ள ஸ்திரீகள் அவமானப்படுவார்கள். எருசலேம் நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள். அப்போது இயேசு கிறிஸ்து தம்முடைய சேனைகளோடு திடீரென்று தோன்றுவார். ஒரே நாளில் நடைபெறும் அர்மெகதோன் யுத்தத்தில் இயேசு கிறிஸ்து அந்திக்கிறிஸ்துவை முறியடிப்பார். அக்காலத்தில் உலகத்திலுள்ள எல்லா ராஜ்யங்களையும் இயேசு கிறிஸ்து தமக்குக் கீழ்ப்படுத்தி, பூமியை நித்திய காலமாக ஆளுகை செய்வார். (சக 14:2-9; ஏசா 63:1-6; எசே 38-39; யோவே 2-3; வெளி 19:11-21; வெளி 20:1-10).

"கர்த்தர் புறப்பட்டு" - இஸ்ரவேலிலுள்ள பாதி ஜனத்தார் அழிந்துபோவார்கள். இஸ்ரவேல் முழுவதுமாக அழிக்கப்பட்டதுபோல இருக்கும். அப்போது கர்த்தர் அந்திக்கிறிஸ்துவின் கீழுள்ள ஜாதிகளோடு யுத்தம் பண்ணுவார். அவர்களை ஜெயித்து, பூமியில் தம்முடைய ராஜ்யத்தை நித்தியமாக ஸ்தாபிப்பார். (மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

"யுத்தநாளிலே போராடுவதுபோல்" - யாத் 14:14; யாத் 15:3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எகிப்தியருக்கு எதிரான யுத்தங்களைப் பற்றி இங்கு குறிப்பிடப் பட்டிருக்கலாம்.

(2) மேசியாவின் இரண்டாவது வருகை - பாலஸ்தீனத்தில் ஏற்படும் மாற்றங்கள்

சக 14:4 அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்.

சக 14:5 அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால் மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனது போல் ஓடிப்போவீர்கள்; என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.

14 அதிகாரம்

சக 14:6 அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமாயிருக்கும்.

சக 14:7 ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலேவெளிச்சமுண்டாகும்.

"அந்நாளிலே அவருடைய பாதங்கள்" - இவை இயேசு கிறிஸ்துவின் பிரத்தியட்சமான பாதங்கள். இவற்றில் ஆணிகள் கடாவப்பட்ட தழும்புகள் இருக்கும். ஒலிவமலையின் மேல் இயேசு கிறிஸ்து தமது பாதங்களைப் பதிப்பார். அப்போது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சி உண்டானபோது அந்தப் பூமியதிர்ச்சிக்குத் தப்பி, ஜனங்கள் ஓடிப்போனதுபோல இயேசு கிறிஸ்து ஒலிவ மலையில் தமது பாதங்களை வைக்கும்போதும் ஓடிப்போவார்கள். தேவனாகிய கர்த்தரும், கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடும், வானத்தின் தூதர்களோடும் பரலோகத்திலிருந்து இறங்கி வருவார். (சக 14:5; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21)

"யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சி" - (ஆமோ 1:1)

"தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" - தேவனாகிய கர்த்தர் என்பது பிதாவாகிய தேவனைக்குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவோடும், வானத்தின் தூதர்களோடும் பிதாவாகிய தேவன் பிரத்தியட்சமாக வருவார். (தானி 7:22; தீத்து 2:13; யூதா 1:14-15; வெளி 19:11-21). இயேசு கிறிஸ்துவிற்கு முதலாம் வருகை, இரண்டாம் வருகை என்று இரண்டு வருகைகள் இருப்பதைப் போல பிதாவாகிய தேவனுக்கும், இரண்டு வருகைகள் உண்டு. (தானி 7:22).

"அந்நாளில் வெளிச்சம் இல்லாமல்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு மறுபடியும் வரும் நாளில், அர்மெகதோனில் யுத்தம் நடைபெறும் நாளில், வெளிச்சம் பிரகாரசமாக இராமல், மப்பாக இருக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சியில் பகலின் வெளிச்சமும், இரவின் வெளிச்சமும் மாற்றமடைவதை இந்த வாக்கியம் குறிப்பிடலாம். பகலின் வெளிச்சம் ஏழு மடங்கு பிரகாசமாக இருக்கும். இரவின் வெளிச்சம் பகலின் வெளிச்சத்தைப் போலிருக்கும். (சக 14:7; ஏசா 30:26)

"ஒருநாள்" - அர்மெகதோன் யுத்தம் ஒரு நாள் மாத்திரமே நடைபெறும். இந்த யுத்தம் மாலை வேளையில் முடிவு பெறும். அப்போதிலிருந்து புதிய வெளிச்சம் சாயங்காலத்திலே உண்டாகும். (ஏசா 30:26).

(3) எருசேலமின் ஜீவதண்ணீருள்ள நதி - (எசே 47:1-12; வெளி 22:1-2)

சக 14:8 அந்நாளிலே ஜீவ தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்.

"அந்நாளிலே" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது. ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்படும். அதில் பாதி மத்திய தரைக்கடலிலும், மீதி சவக்கடலிலும் கலக்கும். இந்த நதி ஆயிரம் வருஷத்து நதி எனப்படும். இது கிழக்கு முகமாக ஓடி, வனாந்தரத்திற்குள் பாய்ந்து, சவக்கடலில் கலக்கும். அது சவக்கடலின் தண்ணீரை ஆரோக்கியமாக்கும். இந்த நதி போகுமிடமெங்கும் ஆரோக்கியம் உண்டாகும். (எசே 47:9) சவக்கடலுக்கு உப்புக்கடல் என்று மறுபெயரும் உள்ளது. (எண் 34:12) ஆயிரம் வருஷத்து நதி சவக்கடலின் உப்புத்தன்மையை அகற்றும். அதில் மச்சங்கள் நிறைந்திருக்கும். நதியின் வெவ்வேறு ஆழங்களுக்குச் சிலர் ஆவிக்குரிய வியாக்கியானம் கூறுகிறார்கள். ஒருவருடைய ஆவிக்குரிய நிலைமையின் வெவ்வேறு அளவுகளைக் குறிப்பதாக இதை வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இந்த நதி மாரிகாலத்திலும், கோடை காலத்திலும் பாய்ந்து, அது செல்லும் இடங்களிலெல்லாம் ஜீவனை உண்டாக்கும். (எசே 47:1-12)

14 அதிகாரம்

(4) மேசியாவினுடைய ஆளுகையின் விஸ்தீரணம்

சக 14:9 அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார்; அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.

"கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறது. ஆயிரம் வருஷ அரசாட்சியில் இயேசு கிறிஸ்து பூமியின் மீதெங்கும் ராஜ்யபாரம் பண்ணுவார். (ஏசா 9:6-7; தானி 7:13-14; மத் 25:31-46; லூக்கா 1:32-33; 1கொரி 15:24-28;2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 20:1-10). ஆயிரம் வருஷ அரசாட்சி முடிவு பெறும் வரையிலும் பிதாவாகிய தேவன் பூமிக்கு வந்து ஆளுகை செய்யமாட்டார். (வெளி 21:1-22:5).

(5) பாலஸ்தீனத்தில் ஏற்படும் மாற்றங்கள் - (ஏசா 35)

சக 14:10 தேசமெல்லாம் கேபாதொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன்வரைக்கும் சமபூமியாகத் திருத்தப்படும்; எருசலேமோ உயர்ந்ததாகி, தன் ஸ்தானத்திலே பென்யமீன் வாசல்தொடங்கி முதல்வாசலென்கிற ஸ்தலமட்டும் கோடிவாசல் வரைக்கும், அனானெயேல் கோபுரம் துவக்கி ராஜாவின் திராட்ச ஆலைகள்மட்டும் குடியேற்றப்பட்டிருக்கும்.

"தேசமெல்லாம் கேபாதொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன் வரைக்கும் சமபூமியாகத் திருத்தப் படும்"-ஆயிரம் வருஷ அரசாட்சியின் ஆரம்பத்தில் பூமியின் மேற்பரப்பில் ஒரு சில மாற்றங்கள் உண்டாகும்.(சக 14:5; ஏசா 35). பெரிய சமபூமி உண்டாக்கப்படும். எருசலேம் இருக்கும் ஸ்தலம் உயர்த்தப்படும். அதில் ஜனங்கள் குடியேற்றப் பட்டிருப்பார்கள். (சக 14:10-11;எசே 48:30-35).

(6) எருசலேம் மீட்கப்படும் - (எசே 48)

சக 14:11 அதிலே ஜனங்கள் வாசம் பண்ணுவார்கள்; இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாய்த் தங்கியிருக்கும்.

(7) அர்மகெதோனில் சேனைகள் எவ்வாறு அழிக்கப் படும் - (எசே 38:17-39:7; 2தெச 1:7-10; வெளி 19)

சக 14:12 எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்துபோகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும்.

சக 14:13 அவர்களுக்குள் உண்டாகும்; அவனவன் தன் தன் அயலானின் கையைப் பிடிப்பான்; அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக எழும்பும்.

அந்திக்கிறிஸ்துவின் சேனை அழிக்கப்படும் விதம்

1. வாதை (சக 14:12,15)
2. பெரிய கலக்கம் (சக 14:13).
3. யூதா யுத்தம் பண்ணி அநேகரை அழிக்கும். (சக 14:14).

(8) அர்மகெதோனில் கொள்ளைப் பொருளும் யூதாவின் பங்கும் - (10:3; 12:4-9)

சக 14:14 யூதாவும் எருசலேமிலே யுத்தம்பண்ணும்; அப்பொழுது சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளுடைய ஆஸ்தியாகிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும் மகா திரளாகக் கூட்டப்படும்.

14 அதிகாரம்

"சகல ஜாதிகளுடைய ஆஸ்தியாகிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும் மகா திரளாகக் கூட்டப்படும்" - தேசங்களுடைய ஆஸ்திகள் அர்மெகதோன் யுத்த களத்திலிருந்து கூட்டிச் சேர்க்கப்பட்டு யூதாவின் மத்தியில் பங்கிடப்படும். (சக 14:1,14).

(9) மிருகங்கள்மீது வாதை - (வசனம் 12)

சக 14:15 அந்தப் பாளையங்களில் இருக்கும் குதிரைகள் கோவேறு கழுதைகள் ஒட்டகங்கள் கழுதைகள் முதலான எல்லா மிருகஜீவன்களுக்கும் வரும் வாதையும், அந்த வாதையைப் போலவே இருக்கும்.

"வாதை" - சக 14:12-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாதை. இந்த வாதை அந்திக்கிறிஸ்துவின் சேனையிலுள்ள மனுஷரையும், மிருகங்களையும் பாதிக்கும். (சக 14:14).

(10) கூடாரப்பண்டிகை கொண்டாடப் படுகிறது

சக 14:16 பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும் படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்.

"சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கு......வருவார்கள்" - எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியானவர்களுக்கு என்ன நேரிடும் என்பது சக 14:16-19 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் அந்திக்கிறிஸ்துவின்கீழ் எருசலேமிற்கு விரோதமாக யுத்தம் பண்ணியவர்கள். இவர்கள் மிருகத்தின் அடையாளத்தைத் தரிக்காதவர்களாக இருந்தால், (வெளி 14:9-11) கிறிஸ்துவின் சகோதரராகிய யூதர்களைத் துன்புறுத்தாதவர்களாக இருந்தால் (மத் 25:31-46), தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்குத் தகுதியுடையவர்களாக இருந்தால், இவர்கள் பூமியில் இயற்கையான மனுஷராக ஜீவிப்பதற்கு விட்டு வைக்கப் படுவார்கள். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இவர்கள் பூமியில் பலுகிப் பெருகுவார்கள். (ஆதி 1:26-31).

இவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களாகவும், மரணத்திற்கு ஏதுவான பாவங்களைச் செய்யாதவர்களாகவும் இருக்க வேண்டும். (ஏசா 65:20-25). அவர்கள் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும் எருசலேமிற்கு வரவேண்டும். (சக 14:16) அவர்கள் நியமிக்கப்பட்டபடி, கூடாரப் பண்டிகையை ஆசரிக்க எருசலேமிற்கு வரவில்லையென்றால், அவர்களுடைய தேசங்களில் மழைபெய்யாது. (சக 14:17-19). ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் அவர்கள் சாத்தானோடு சேர்ந்து, கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினால் வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி இறங்கி வந்து, அவர்களைப் பட்சித்துப்போடும். (வெளி 20:7-10).

(11) ஆயிர வருஷ ஆட்சியில் கீழ்ப்படியாத தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பு

சக 14:17 அப்பொழுது பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை.

சக 14:18 மழை வருஷிக்காத எகிப்தின் வம்சம் வராமலும் சேராமலும் போனால், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கவராத ஜாதிகளைக் கர்த்தர் வாதிக்கும் வாதையே அவர்கள்மேலும் வரும்.

சக 14:19 இது எகிப்தியருடைய பாவத்துக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்க வராத சகல ஜாதிகளுடைய பாவத்துக்கும் வரும் ஆக்கினை.

சகரியா - தொகுப்புரை

14 அதிகாரம்

(12) இராஜ்ஜியத்தின் சுபாவம்

சக 14:20 அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும்; கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும்.

சக 14:21 அப்பொழுது எருசலேமிலும் யூதாவிலுமுள்ள எல்லாப் பானைகளும் சேனைகளின் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்; பலியிடுகிற யாவரும் வந்து அவைகளில் எடுத்து, அவைகளில் சமைப்பார்கள்; அந்நாள்முதல் சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே யாதொரு கானானியனும் இருப்பதில்லை.

"கர்த்தருக்குப் பரிசுத்தம்" - இந்த விலாசம் அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே எழுதியிருக்கும். தேவனுடைய ராஜ்யத்தில் எல்லாமே பரிசுத்தமாக இருக்குமென்பதை சக 14:20-21 ஆகிய வசனங்கள் விளக்குகின்றன. எசே 40-46 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் பலிகள் தொடர்ந்து செலுத்தப்படும். அந்நாள்முதல் சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே யாதொரு கானானியனும் இருப்பதில்லை. (எசே 43:7).

14 அதிகாரம்

முக்கிய வேதவசனம்

"....கிளை எனப்பட்டவராகிய என் தாசனை வரப் பண்ணுவேன்." (சகரியா 3:8)

"........பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்.....". (சகரியா 4:6)

முன்னுரை

ஆகாய் தீர்க்கதரிசி ஊழியம் செய்துவந்த நாட்களில் சகரியா தீர்க்கதரிசனம் உரைத்துவந்தார். இவர் தீர்க்கதரிசியாகிய இத்தோவின் பேரன் (1:1). இவர் சிறையிருப்பில் இருந்து எருசலேமிற்கு வந்தவர்களுள் முதலாவதாக வந்திருக்கவேண்டும் (நெகேமியா 12:4,16;). இவருடைய எழுத்துக்கள் கீழ்க்கண்ட காலத்தைக் குறிக்கும்:

1. எட்டாம் மாதம் (1:1) தரியுவின் இரண்டாம் வருஷம்
2. பதினொன்றாம் மாதம் 24-ம் நாள் (1:7) தரியுவின் இரண்டாம் வருஷம்
3. மூன்றாம் மாதம் நான்காம் நாள் (7:1) தரியுவின் நான்காம் வருஷம்

சகரியாவின் பிற்கால வாழ்க்கையில் 9-14 ஆகிய அதிகாரங்கள் எழுதப்பட்டிருக்கும் என்று சிலர் நம்புகின்றனர். வரப்போகிற மேசியாவைப் பற்றியும் இஸ்ரவேலின் வருங்கால நம்பிக்கையைப் பற்றியும் இந்த அதிகாரங்களில் தீர்க்கதரிசனங்கள் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளன.

புத்தகத்தின் பொதுவான சுருக்க வருணனை

1. சகரியாவின் தரிசனங்கள் (அதிகாரங்கள் 1-8)
   - அ. சிவப்பு, வெள்ளை, மங்கின நிறமுள்ள குதிரைகள், நாலு கொம்புகள், தொழிலாளிகள் (அதிகாரம் 1)
   - ஆ. ஒரு தூதன் எருசலேமை அளவிடுதல் (அதிகாரம் 2)
   - இ. பிரதான ஆசாரியனாகிய யோசுவாவைச் சாத்தான் குற்றப்படுத்துதல் (அதிகாரம் 3)
   - ஈ. விளக்குத் தண்டைக் குறித்த தரிசனம் (அதிகாரம் 4)
   - உ. பறக்கிற சுருள், எப்பா, வானத்துக்கு நடுவாய் தூக்கிக்கொண்டு போகப்பட்ட இரண்டு ஸ்திரீகள் ஆகியவற்றைப்பற்றிய தரிசனம் (அதிகாரம் 5)
   - ஊ. நான்கு இரதங்களும், குதிரைகளும் பற்றிய தரிசனம் (அதிகாரம் 6)
   - எ. மாயையான உபவாசங்கள் (அதிகாரம் 7)
   - ஏ. எருசலேமைப் புதுப்பித்துக் கொண்டு வருதல்(அதிகாரம் 8)
2. வருங்கால மேசியாவும் யூதாவை மறுபடியும் கொண்டு வருவதும் (அதிகாரங்கள் 9-14)
   - அ. வரப்போகும் ராஜாவைக் குறித்த சந்தோஷமும் அவருடையமீட்பும்(அதிகாரம் 9)
   - ஆ. தமது ஜனத்தின்மீது தேவனுடைய அன்பும் பராமரிப்பும் (அதிகாரம் 10)
   - இ. மந்தைகள் மேய்க்கப்படுவதும் மேய்ப்பர் தள்ளப்படுவதும் (அதிகாரம் 11)
   - ஈ. யூதாவின் மீட்பு (அதிகாரம் 12)
   - உ. மேய்ப்பரின் மரணமும் ஆடுகள் சிதறடிக்கப் படுவதும் (அதிகாரம் 13)
   - ஊ. கர்த்தருடைய ஆளுகை (அதிகாரம் 14)